பூங்கோதை

மலர் 1 ஆகஸ்ட் 1979 செப்டம்பர் இதழ் 8

குழந்தைகள் ஆண்டு சிறப்பு மலர்


ஆசிரியர்:
திருமதி ஆயிஷா கணபதி

ரூபாய் 1



எல்லாக் குழந்தைகளுக்கும் ஏற்றமிகு
வாழ்வு என்று வருமோ?

விளையாட்டு



கைப்பிடிப்படியில் சறுக்கி விளையாடலாமென்று
கால் எடுக்கிறாளே!

382

260

பூங்கோதை

உண்மையான

குழந்தைகள் ஆண்டு!

1979-ம் ஆண்டை அகில உலகக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடும்படி உலக நாடுகளின் மன்றம் வேண்டிக் கொண்டது. அதனால் நாடுகளெல்லாம் குழந்தைகளுக்கு விழா எடுக்கின்றன.

ஆனால், எங்கே, எப்படி விழா எடுக்கின்றன!


நகர்ப்புறங்களில், நாகரீக மேடைகளில், பெரிய மன்றங்களில் விழா எடுக்கின்றன!

நமது இந்திய நாட்டில் 5, 47, 672 கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் பிறந்த குழந்தைகள் 18 கோடியே 80 லட்சம். அவைகளில் 90 விழுக்காடுகளுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு உண்ண உணவில்லை. உலைந்து போன கஞ்சித் தண்ணீரைக் குடிக்கின்றன. உடுத்த உடை இல்லை. அம்மணமாகத் திரிகின்றன. உறங்க வீடில்லை. ஊர்த் தெருக்களில் படுத்து உறங்குகின்றன. தக்க கல்வி இல்லை. ஒப்பந்தக் கூலிகளாக ஊர்ப் பண்ணையாரின் ஆடு மாடுகளைக் காடு கழனிகளில் மேய்த்துத் திரிகின்றன. அந்த இத்தியச் சொத்துக்களுக்குப், பிள்ளைச் செல்வங்களுக்கு நாம் ஊர்ப்புறங்களில் விழா எடுக்க வில்லை. இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தன் ஐந்து வயது முதற் கொண்டே பிஞ்சுக் கைகளால் உழைக்கும் அந்த மழலை முத்துக்களுக்கு நாம் ஊர்ப்புறங்களில் விழா எடுக்க வில்லை. நாட்டின் பொருளாதாரத்தை நாளும் அழித்துக் கொண்டு வருகின்ற கொழு கொழு குழந்தைகளுக்கு நாம் நகர்ப்புறங்களில் விழா எடுத்துக் கொண்டு வருகிறோம்.

அங்கே, வயல், வரப்பு! காடு, மேடு! பசி, பட்டினி!

இங்கே, வண்ண விளக்கு! வசதிகள்! வாய்ப்புகள்! வாய்கிழியப் பேச்சு! ஊர்ப்புறங்களில், உழைக்கும் குழந்தைகளுக்கு என்று விழா எடுக்கப்படுகிறதோ அன்றுதான், அதுதான், உண்மையான குழந்தைகள் ஆண்டு! குழந்தைகள் விழா!

ஓ... கவிஞர்களே !



பூங்கோதையின் முதல் வெளியீடாக ஓர் கவிதைத் தொகுப்பு நூல் விரைவில் வெளிவர இருக்கிறது, அதற்குக் கவிஞர்களிடமிருந்து கவிதைகள் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள் மரபு வழியாகவும் இருக்கலாம். புதுக்கவிதையாகவும் இருக்கலாம். கவிதைகள் இருபத் தினான்கு வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மையக் கருத்து சமுதாய மறுமலர்ச்சி கொண்டதாக அமைய வேண்டும். கவிதை நூல் ஆக்கத்திற்காக ஒவ்வொரு கவி ஞரும் தத்தம் கவிதையோடு ரூபாய் 10 தவறாது அனுப்ப வேண்டும். தம் ஒளிப்படத்தையும் இணைத்து வெளியிட விரும்புவோர் பாஸ்போர்டு சைஸ் ஒளிப்படத்துடன், அதைப் பிளாக் செய்வதற்கான கட்டணம் ரூபாய் 10-ஐயும் அனுப்ப வேண்டும். கவிஞர்களுக்கு உரிய ஏடுகள் அஞ்சலில் அனுப்பப்படும். கவிதை நூலில் மொத்தம் 100 கவிதைகளே இடம் பெறும். ஒரு தலை சிறந்த தொகை நூலில் உங்கள் கவிதைகள் இடம் பெற உடன்முந்திக் கொள்ளுங்கள்.

தொகுப்பாசிரியர்

ஆயிசா கணபதி

ஆசிரியர்.

"பூங்கோதை" இலக்கியத் திங்களிதழ்.

கவிதையும் பணமும் அனுப்ப வேண்டிய முகவரி,

திருமதி. **ஆயிசா கணபதி,**

ஆசிரியர் **"பூங்கோதை"**
449-நேதாஜி சாலை
ஈரோடு-638001.

வெண்பாப் போட்டியின் முடிவு

முதற்பரிசு

நாடகமே யாகும்இந் நாட்டினிலே நாமும்ஓர்
ஆடுகின்ற பாத்திரமாய் ஆகாமல் — பீடுமிகச்
செய்யும் செயலே செயத்துணிந்தால் சீர்தூக்கி
உய்யும் உவந்தே உலகு.
கொடுமுடி. க. அ. பிரகாசம்.

இரண்டாம் பரிசு

நாடகமே வாழ்வாய் நடித்துக் குவித்ததெல்லாம்
பாடாய்க் கறுப்புப் பணமாக்கி — கேடாய்
வரிஏய்ப்புச் செய்தே வலம்வருவான் தன்னை
ஒறுத்துதல் எப்போ உலகு?
திருச்சி. 4 குழலினியன்

மூன்றாம் பரிசு

நாடகமே ஆடும் நரிக்குணத்தோர் ஏழைபடும்
பாடறியார் போலப் பசப்புகிறார் — தேடியபொன்
எத்துணைநாள் காக்கும்? எளியோர் அழுங்கண்ணீர்
உத்திரவால் மாறும் உலகு.
ஈரோடு. கவிஞர் கமால்தாசன்.

நாடகமே போலும் நடைபயின்ற நாயகியே
ஆடகப் பொன்மயிலே ஆரணங்கே — ஊடல்
குணத்தால் பிரிந்திடினும் கூடிநின்ற நேரம்
உணர்த்திட்டாய் காதல் உலகு.
ஈரோடு ஸ்ரீ. ஸ்ரீதரன்

நாடகமே செய்திடுவார் நாட்டில் சிலமனிதர்
கேடுகளை, உண்டாக்கும் கேவலத்தை — ஏடாக்கி
காசாக்கும் பண்பில்லா கள்ள மனத்தாரை
ஏசாதோ இங்கு உலகு !
ஈரோடு கவிஞர் கோவலன்

நாடகமே ஆடுகின்றார் நல்லவர் போல்நடித்து !
கேடர்கள் தம்மைக் கிழித்துநாம் — பூடறுக்க
வேண்டாவோ? புல்லர் மிகமலிந்தார் பொன்னாட்டில் !
ஊன்வளர்ப்ப திந்த உலகு.
ஈரோடு. பாவலர். தமிழ்க்குமரன்

சொல்கிறார்கள் ★ ★ கேட்போம்!

''எல்லா மொழி ஆறுகளும் சங்கமமாகும் மகா சமுத்திரமாக என் தாய் மொழி இருக்கட்டும்''

— மலையாளக் கவிஞர் வள்ளத்தோள்

O O O

அச்சாகும் புத்தகங்களை மேற்பார்வையிட பதிப்பாசிரியர் [Editor[என்று ஒருவர் இருக்க வேண்டும். இப்போது பெரும்பாலும் கம்பாசிட்டர்களே எடிட் செய்து விடுகிறார்கள்.

— கி. வா. ஜகந்நாதன்.

சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பயன்படும் பயனுள்ள நூல்களே இன்றைய தேவை. இத்தகைய நூல்கள் நிறைய வெளியாக வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலை உயர்வதோடு, அவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஊட்டும் நூல்களும் நிறைய வெளியாக வேண்டும்.

கல்வியமைச்சர்
— மாண்புமிகு. அரங்கநாயகம்.

நமது பண்பாடு பற்றிய சில நூல்கள் சிலவற்றை N. B T. வெளியிட்டு உள்ளது. இது வரவேற்கத் தக்கது. தமிழில் அத்தகைய நூல்கள் திட்டமிட்ட முறையிலேயே வெளியிடலாம்.

நா. வானமாமலை.

ஒவ்வொரு நவராத்திரிக் கலை விழாவுக்கும் மக்கள் ஏதேனும் சில புதிய பொம்மைகள் வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைப் போல் ஒவ்வொரு கார்த்திகைதீபத்திற்கும் புதிய சில மண்விளக்குகள் வாங்குவதைப் போல் ஒவ்வொரு சரஸ்வதி பூசைக்கும் ஒரு சில புதிய நூல்கள் வாங்கும் பழக்கம் நம்மிடையே வளர வேண்டும்.

— திருமதி. ராஜம் கிருட்டினன்.

பத்திரிக்கை நடத்துதல், புத்தகம் வெளியிடுதல் போன்ற செயல் வெள்ளைத் தாளைக் கறுப்பாக்கும் வெறும் வேலையல்ல. இன்றைய சமுதாய முறையில் மக்களின் பொது அறிவு வளர்ச்சி பொது நூல்களின் வளர்ச்சியைப் பொருத்தே எனலாம்'


— தம்பி. சீனிவாசன்

பண்டிகை நாட்களில் புத்தகங்களுடன் வாழ்த்து அனுப்பும் பழக்கத்தை மக்கள் உண்டாக்க வேண்டும்.

— கண. முத்தையா

சிறு பதிப்பாளர்கள் புதுமை புரட்சி என்ற பெயரில் சமூகத்திற்கே தேவையற்ற, ஆபத்தை விளைவிக்கும் அசிங்கமான,: ஒழுக்கக் குறைவை ஏற்படுத்தும் எழுத்துக்களை வெளியிடுகிறார்கள்

— எஸ். இராமக்கிருட்டினன்




ஒருவர் :— சார்! நீங்கதான் நம்ம பையனுக்குக் காலேஜில் ஒரு சீட்டு வாங்கிக் கொடுக்கணும்

மற்றவர் ;- தயவுசெய்து மன்னிக்கணும். எம். எல். ஏ. சீட்டு கேளுங்க. வாங்கித் தர்ரேன், எம். பி. சீட்டு கேளுங்க. செய்யிறேன். அமைச்சர் சீட்டுக்கூட வாங்கித் தர்ரேன். காலேஜ்சீட்டு, ஹையர் செக்கண்டரி சீட்டு மட்டும் கேட்காதீங்க!

அனுபவங்கள் மலர்கின்றன!

முகம்மது ஹசேன்



சுதா நின்று கொண்டிருந்தாள். அவள் அம்மா ரொம்ப சாதாரணமாக பச்சையாகப் பேசிக் கொண்டிருந்தாள். பாத்திரங்களைப் டொக் டொக்கென்று வைத்தாள். எல்லா வேலைகளையும் தானே முடித்து விட்ட அசாதாரண திருப்தியுடன் எழுந்து கொண்டாள். பனிரெண்டு வயதை தாண்டியிருந்த சுதாவுக்கு அம்மாவின் ஒன்றிரண்டு பச்சை வார்த்தைகளின் அர்த்தம் மட்டிலும் புரிந்திருந்தது. மற்றவைகள் புரியவில்லை. அதைப் புரிந்து கொள்ள அவளுக்கு அவசியமுமில்லை. அம்மா அங்கிருந்து நகர்ந்த பின்பு மெதுவாக எல்லா இடங்களையும் கழுவித் துடைத்தாள். அந்த அம்மா சொன்ன குறிப்பிட்ட வார்த்தை மறுபடியும், மறுபடியும் தன் காதில் ஒலிக்கிற மாதிரி இருந்தது சுதாவுக்கு 'சீ அவளுக்கு மட்டிலும் என்ன மாதிரி அம்மா வாய்த்திருககிறாள் என்றிருந்தது.

அவள் வயதில் ஒவ்வொருத்தியும் பிராக்கும் டையும் போட்டுக் கொண்டு, இரட்டைப் பின்னலை முன்னுக்கும் பின்னுக்கு ஈக ஆட்டிக்கொண்டு, மடிப்புக் கலையாத துணியும் வாய் நிறைய சிரிப்பும் பேச்சுமாய் முகமெல்லாம் சந்தோசத்திலே நனைச்சிட்டு வந்த மாதிரி எப்படி பெருமையா நடக்கிறு? அதுகளை யெல்லாம் பாக்குறப்பவே கண்ணிலே பொசுக்குண்ணு நீர் வந்து நிக்குது. அதுவும் கான்வென்ட் விட்டுட்டு வீட்டுக்கு வந்ததும் வ்ராததுமாய் அவா அவா அம்மாங்கள் ளாம் உட்காந்திருப்பாங்க, அப்படியே அம்மா மடியிலே விழுந்து சாஞ்சிக்குவாளுக அவளுக அம்மாவும் 'களைச்சிப்போயி வந்திருக்கயேடி அப்புறமா அம்மா.கிட்ட படுத்துக்குவியாம். இப்ப போய் முகமெல்லாம் கழுவிட்டு வா. டிபனும் காபியும் ஆறிப் போயிடும்பா' நானும் என் ஒரு லதாவா, இந்துவா ஒரு ஷீலாவா... நிம்மியா... பிறந்திருக்க கூடாது? தோ அது எப்படி முடியும்? பிறக்குறதுல எதுவும் தப்பில்லே நம்மை சூழ்ந்து இருக்கறவங்கதான், நம்மை கறையான் மாதிரி-அரிச்சு தின்னு தின்னு......., ..சட்டெனத் தனக்குள் பேசியதை நிறுத்திக் கொள்கிறாள்.

''என்னடி தானே பேசிக்கிறே?'' கர்ஜிக்கிற மாதிரி பக்கத்தில் வந்து நிற்கிறாள் இன்னுமா இந்த வேலைகளை முடிக்கலை என்ப

தற்குப் பதிலாக காதை திருகி விட்டு இடுப்பில் கையை வைத்துக் கொள்கிருள். சுதா உதட்டைக் கடித்துக் கொள்கிருள். கண்ணில் நீர் நிற்க மாட்டாமல் கன்னத்தில் இரண்டு சொட்டு விழுகிறது. அம்மா முன்னுலே அழக்கூடாதுன்னு அவளுக்கு தெரியும், ஆனாலும் அவளுடைய உணர்ச்சிகளுக்கு அம்மா முன்னுலே ...அடுத்தவங்க முன்னுலேன்னு தெரியவா போகிறது? இத்தனை நாள் அடக்கி வைத்த உணர்ச்சிகள்பொங்கி — வழிகிறது. மனசுக்குள் எத்தனை நாளைக்குத் தான். கேட்டுக் கொண்டிருக்க முடியும். குற்றம் செய்யாமலே தண்டனைகள்-வசைமொழிகள்-குனிஞ்சா ரொம்பத்தான் இந்த அம்மா குட்டரு? ''என்ன செஞ்சிட்டேன்னு இப்படித் திட்டறே'' சுதாவின் கேள்வியைச் சாக்காக வைத்துக் கொண்டு மறுபடியும் கத்த ஆரம்பித்தாள்......

''ஆமாண்டி கேட்பே-ஏது தாவணி போடுன்ன மேலாக்கு இல்லாம திரியறே பாரு உங்கப்பன் வரட்டும் இண்ணைக்கு ஒண்ணுல ரெண்டு சொல்லிப்பிடறேன். அந்த சிறுக்கி கமலா வீட்டுக்குப் போரு. பொட்டச்சிக்கு என்னடி பக்கத்து வூட்ல வேலே? பத்து தேய்ச்சிட்டு துணிய அலசி போட்டு -குழந்தையப் பாத்துப்பாளா-அதை வுட்டுட்டு- அந்த டாக்டரு குமாரு உனக்கு ஏதோ புஸ்தகம் கொடுத்தானமே நாளைக்கு எதைக் கொடுக்கப் போருனே தெரியலே. ஏண்டி என்ன தான் மனசிலே நினைச்சிட்டுயிருக்கே?...நிறுத்தாமல் தான் பாட்டுக்கு— நினைத்ததெல்லாம் வசைமொழியாய்—பொழிந்து கொண்டிருந்தாள்—

என் அம்மாவிடம் அந்தவார்த்தையைக் கேட்டோம் என்றிருந்தது அவளுக்கு. இன்னைக்கு. சாப்பிடக்கூட முடியாது போல மனசு ரொம்பச் கனமாக இருக்குமென்று நினைத்துக் கொண்டாள்.

ஏன் இந்த அம்மா குமார் மாமாவை இப்படி அசிங்கமா எல்லாம் பேசரு? நல்ல மனசு இல்லாதவங்களுக்கு நல்ல மனசோட வர்ழறவங்களை கண்டாப் பிடிக்காது போலயிருக்கு. இந்த அம்மாவும் அந்த ரகம். ஒருநா அந்த மாமாவோட கிளினிக்குக்கு போனப்போ— அழகான இங்கிலிஷ் புத்தகமெல்லாம்-நிறைய-கலர் கலர் படமா போட்டது அதெல்லாம் நல்லாயிருக்கு. எடுத்து திருப்பி திருப்பிப் பாத்துட்டு இருந்ததுனுலே சிரிச்சு கிட்டே 'உனக்கு இதுமாதிரி புத்தகமெல்லாம் பிடிச்சிருந்தா எடுத்துட்டுப் போ-இங்க நிறைய இருக்குன்னு' ரெண்டு புத்தகம் கொடுத்ததை வச்சுக்கிட்டு அது நாளா அம்மா இப்படித்தான் பேசரு. அம்மா இப்படி பேசற போதெல்லாம் முகத்தை ரெண்டு கையிலேயும் மூடிட்டு அழணும் போலயிருக்கும். தலையணையிலே முகத்தை புதைச்சிட்டு முகமெல்லாம்வீங்கிப் போற வரைக்கும் அழணும் போல யிருக்கும். மனசு விட்டு அழுதுட்டா மனசைக் கொஞ்சம் கழுவித் துடைச் சிட்ட மாதிரி சுத்தமா போயிட்டா போல-ஒரு பிரமையாவது கிடைக்கும், மனசுக்குள் மறுபடியும் லேசாக சொல்லிக் கொள்கிருள்-வெளியில் சொன்னுல் புரிந்து கொள்ளா விட்டாலும் அம்மாவின் வார்த்தைகளும் அடியும் நரகப்படுத்தி விடுமே அவளை,

சுதாவின் அம்மா வெற்றி முரசு கொட்டுபவள் போல நின்றிருந்தாள், அவள் அப்பா பெல்ட்டை மடக்கவும் உதறவுமாகயிருந்தார். அம்மாவின் சபதம் அப்பா வரை போய் விட்டதை புரிந்து கொண்ட சின்னதுகள் மூலைக்கு ஒன்றாக ஒதுங்கிப் போயின. வாசலில் அவள் வருகிற நிழல் தெரிந்ததுமே' அப்பா ஒரு முறை கனைத்துக் கொண்டார். சுதாவின் கையில் புத்தகம் இருந்ததால், அவர்கள் குற்றச்சாட்டுக்கு எதுவாக இருந்தது. அப்பாவின்-நிலைமையைப் புரிந்து கொண்டாலும், மெதுவாக உள்ளே போக முயன்றாள். அப்பா தடுக்கிற மாதிரி வந்து நின்று கொண்டார். ''நில்லுடி எங்க போயிட்டு வர்றே?'' பெல்ட்டின் அடியை விட அந்த வார்த்தை அவளுக்கு வலித்தது......

''தப்பா எதும் செஞ்சிடலே-படிக்கிறதுக்கு புத்தகம் வாங்கப் போயிருந்தேன்!!-'' அவரின் கேள்வியை விட அவள் பதில் சொன்ன விதம் அவரை அசர வைத்தது. எப்படி மெதுவாக லச்சியமில்லாமல், அசட்டையாக-பதில் சொல்கிறாள்... அவர் முகத்தில் சிவ்வென்று ரத்தம் பாய்கிறது. எப்படி இவளால் இந்த மாதிரி அசட்டை செய்ய முடிகிறது? அவள் சொல்லுகிற மாதிரி ஏதாவது......; திடீரென்று அவர் கண்கள் சிவந்து போயின-பெல்ட்டை எடுத்து அவர் மனம் போனபடி விளாசுகிறார். அடி-அடி மேல் அடி. தன் வெறியும் ஆவேசமும் தீருகிற வரை—தணிந்து போய் வெளியே போகிறார் அப்பா... சுதா தன் உடம்பை தொட்டுத் தொட்டுப் பார்த்து அழுதாள். உடம்பைத் தொடக் கூடாத அளவுக்கு பச்சை பச்சையாக கன்றிப் போயிருந்தது. என்ன செய்து விட்டாள், என்று அவளை அசிங்கப் படுத்துகிறார்கள் இப்படி? சுதாவுக்கு அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்பது புரிந்தது. இவங்களுக்கு மட்டுந்தானா என் மேலே நம்பிக்கை இல்லை? எனக்கு எந்த நம்பிக்கையும் இவங்க மேலேயும் இல்லை—அவங்கிட்ட நான் எதையும் எதிர் பார்க்கவுமில்லை! மறுபடியும் விண்ணென்று வலி உடம்பு பூரா வரவே குலுங்கி அழுகிறாள்.

யாராவது பறிப்பார்கள் என்று தானா பூவெல்லாம் மலர்கிறது? அதுமாதிரி தானே- மனதும் சிலருக்கு மலர்ந்து விடுகின்றன. அதில் எண்ணங்களும் ஆசைகளும் வெறுப்பும்-விருப்பமும் மற்றவர்கள் புரிந்துகொள்ள மறந்தாலும் மனதை விட்டு அகல்வதில்லையே. சுதாவை அவர் சூன்யநிலைக்கு கொண்டு வந்து நான்கு வருடங்கள் ஓடி விட்டன. அவளின் ஒரே அண்ணனான ராசவுக்குக் கூட மீசை அரும்ப தொடங்கி விட்டது. அவனும் அதிகாரம் செய்யலாம் என்பது போல நடந்து கொள்கிறான். அவள் தங்கைகள் கூட அவளிடம் ஒட்ட வேண்டாத அளவுக்கு வளர்ந்து விட்டன. இப்பவும்—எப்பவும் அவளுக்கு தினந் தோறும் ஒரே மாதிரியான அனுபவங்கள். நெருப்பின் தகிப்பு மாதிரி அதில் கூடுதலும் குறைவும் தான் இருந்ததே தவிர மாற்றம் இல்லை. சிகப்பான ரோஜா மாதிரி வளர்ந்து விட்ட இந்து இப்போது கல்லூரிக்குப் போக ஆரம்பித்திருக்கிறாள்.

அவளுக்குப் பொருத்தம் போல வித விதமா, கலர் கலரா நல்ல நல்ல மாக்ஸிகள். டெரின் சர்ட்கள்— அழகழகான லுங்கிகள்- சந்தோசத்தில் பூரித்துப் போன அவள் உடலுக்கு எதுவுமே பொருத்தம் தான் முன்னுக்கு மயிரை கத்தரித்துக் கொண்டு இருக்கிறாள். அவள் நடக்கும்போதும் பேசும்போதும் முகத்தில் வந்து கற்றையாக விழுகிறது.-

'அவர் கிரிக்கட்டு ஆடும் போது யாருமே கண்ணை இமைக்காம பார்த்துட்டு நிக்கனும் போலத் தோன்றும் சுதாவுக்கு அப்படி சொல்லிக்கொள்வது கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். காரில் போகிற இந்து! அண்ணன் பின்னல் உட்கார்ந்து கொண்டு பைக்கில் போகிற லதா! சைக்கிளில் போகிற நிம்மியுடன் கூட அவள் தன்னை இணைத்துப் பார்க்க முடியாது. அவர்கள் பார்க்கிற பார்வையில் இவள் பாவம் என்கிற அனுதாபம் தங்கிடுமே தவிற அவள் தேடுகிற தோழமை சிநேகிதம் அவளுக்குக் கிடைக்காது.

அவர்களுக்கெல்லாம் வாழ்வின் இனிமையில் ஒரு அநுபவம் அந்த மாதிரி இனிமையும் சிரிப்பும் சந்தோசமும் அவளுக்குக் கற்பனையில் கூட கிடையாது போல இருக்கும். மனசுக்குள் வந்து விட்டது. அவர்கள் வேறு கோணங்கள்- இவள் வேறு கோணம் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாதவை. கம்பளி புழுவுக்கு இரையான கடலைப் பயிர்- விதைக்கு உதவவா போகிறது! ஆனாலும் இப்ப முதல்மாதிரி எதற்கும் உணர்ச்சி வசப்படரதும், கண்ணிலே நீர்க்கொப்பளிக்கரதும் நின்று போனது. ரொம்ப நாளாகவே மரக்கட்டை மாதிரி மனசு உயிரில்லாம மரப்பூச்சி மாதிரி ஆயிடுச்சு இப்ப- அழகான இந்து பணக்கார இந்து எப்பவும் சிரிப்போட இருக்கிற லதா- பேச்சுக்கெல்லாம் இடிக்கிற, கிள்ளுகிற ஷீலா எல்லாத்தையும் கேட்டுகிட்டு ஊம் கொட்டற நிம்மி எல்லாரும் இப்ப வெறும் பொம்மைகள் மாதிரி தான் தெரியுது' அந்த பொம்மைகள் சிரிக்கிறதும்- பேசறதும் நடக்கிறதும் சின்ன விசயத்துக்கு கூட சந்தோசப்படுறதும் அவ மன்சுல ஏக்கத்தை உண்டு பண்னப் போறதிலலை—மாறி மாறி—வயசுக்குத் தகுந்த மாதிரி காலத்துக்குத் தகுந்த மாதிரி— பனிகாலம் மழைகாலம் போல மல்லிகைப்பூ செண்பகப்பூ—மனக்கற ஜாதிப்பூ பனிக்கால ரோஜாபூ... பூக்கள் மாதிரி— இனிமையான மென்மையான— மனதுக்கு பிடித்த அனுபவங்கள்.

அது அந்த நிலையில் வயதில் விரும்பற போதெல்லாம் கிடைச்சிருக்கு அதுமா திரி காலங்கடந்து போனபின்னலே அது மாதிரி சந்தர்ப்பத்துக்கு வழியே இல்லாத-போது எதுக்காக மனசை அந்த மாதிரி யெல்லாம் ஏங்கவிடணும்

சுதாவுக்கு-ஒரே மாதிரி அனுபவங்கள்—அதனுள் அழுத்திக் கொண்ட-கசப்பான-அனுபவங்கள்-அனலும் இப்ப மனசும் பழகிவிட்டது. வெந்து வெந்து மனசு-புடமாகிப் போயிடுச்சு. அதுலேயும் வித விதமான உணர்ச்சிகள்-ஏற்படறதுமில்லை அதுனுல- அவ அமுங்கிப் போறதுமில்லை. வழக்கமான உஷ்ணத்துடன் அம்மா கத்திக் கொண்டிருக்கிருள்- அப்பா அவசர வேலை என்று சொல்லிக் கொண்டு, அவர் சீட்டாட்ட கோஷ்டியுடன் - சேர்ந்து கொள்ள தெருமுனைக்கு ஒடுகிருர். அண்ணன் அதிகாரக்குரலில், அவனின் புதிய சட்டை அலசியது சரியில்லை, என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிருன். அம்மா-தான் செய்யாவிட்டாலும் ...... அடுக்கடுக்காக வேலைகளை ஏவுகிருள்-முதல் மாதிரி— அனுபவமில்லாத போது-கண்ணிலே நீர் தழும்புகிற மாதிரி முகமெலாம் சிவந்து போகிற- உதட்டைக் கடித்துக் கொள்கிற-உணர்வு இப்ப இல்லை. கண்களில் ஒரு சாதாரணம்-இவ்வளவு தானே இதுக்கு தானே-இந்த ஆர்ப்பாட்டம்- என்பது போல-நிதானம்-அம்மா 'ஊமைப் பைத்தியமே காதில்-விழலை'- என்கிருள்.! சில காலமாக இது பைத்திய - மாதிரி- நடந்துக்குது என்று அண்ணன் முணு முணுத்துககொண்டு-திரும்பிப் போகிருன். அந்த பிஞ்சு வயதிலேயே அவளுக்குள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுப் புது அனுபவப் பூக்கள் மலர் கின்றன!

எண்ணுவீர்!

எங்கள் ஏழ்மை என்று ஒழியும்
என்றோ அலைகின்றோம்!—இன்பம்
எங்கள் பக்கம் பூப்பது என்றோ?
என்றே ஏங்குகிறோம்!
மாடு போல உழைக்கும் நாங்கள்
மாய்ந்தே உழல்கின்றோம்!- நாளும்
பாடு பட்டும் வறுமைச் சேற்றில்
படுத்தே கிடக்கின்றோம்!
விடிவு என்று தோன்றும் என்றே
விழிகள் தூங்காமல்-- நாளும்
அடிமை என்னும் வறுமை இருளில்
ஆலாய்ப் பறக்கின்றோம்!
எத்துணைக் காலம் இந்தக் கொடுமை
இப்புவி மீதினிலே!-பொறுமை
எத்துணை நாள்வரை பூமியிலிருக்கும்
எண்ணுவீர் நாட்டோரே!

கவிஞர் - கோவலன்.

அப்பாவுமாச்சு அம்மாவுமாச்சு!

இந்த அப்பா இருக்காரே சுத்த மோசம், எப்ப பாரு என்னைய திட்டிகிட்டே இருப்பாரு. படிக்கும் போது, ''ஒழுங்கா படிடா; கழுதை மார்க் வாங்கியிருக்கிற லட்சணத்தை பாரு,'' என்று திட்டுவார். சாப்பிடும் போது, ''இதென்ன கோழி கொறிக்கறுப்பல' கொறிச்சிண்டு; ஒழுங்கா சாப்பிடு.'' என்பார் விளையாடப் போனால், ''எப்ப பாரு விளையாட்டு... விளையாட்டு; படிப்பில் ஒண்ணையும் காணோம்,'' என்பூார். திட்டு மட்டுமா; அடியும் சில சமயம் கிடைக்கும். அண்ணைக்கு அப்பாவுக்கு டீயை கப் அண்ட் சாசரில் எடுத்து வந்தேன். கை நிலைப்படியில் இடித்து, கப் அண்ட் சாசர் கீழே விழுந்து உடைந்து விட்டது. அன்று அப்பா என்னை மொத்து மொத்து என மொத்தி விட்டார். கை தவறித்தானே விழுந்து விட்டது. அதனால் தான் அப்பாவைக் கண்டாலேஎனக்குப் பயம் கொஞ்சம் எங்கிட்டே சிரிச்சுப் பேசினு என்ன தேஞ்சா போயிடுவார்? அவருடைய பிரண்ட் ராமமூர்த்தியின் பையன் சுந்தர் கிட்ட சிரிச்சுப் பேசுறரே!

அப்பாவுக்கு அம்மா தேவலாம் அம்மா மட்டும் சாமானியப்பட்டவளா? அவளுக்கு என்னைய விட்ச் சுஜா குட்டி தா ஒசத்தி. அவளைத் தான் எந்நேரமும் கொஞ்சிக்கிட்டு இருப்பா. என்னையும் ஒவ்வொரு சமயம் கொஞ்சுவா. ஆனு என்னை எப்ப கொஞ்சுவா. எப்ப திட்டுவாண்ணு சொல்ல முடியாது. அப்பா மேல கோபம் வந்தாலும் என்னையத் தான் திட்டுவா. 'டேய் சந்துரு மாடியில் விளையாடாதடா; கீழே விழுந்து காலைக்கீலை ஒடைச்சுக்கப் போற,'' என்பாள். கீழே விளையாண்டால் ''அங்கே விளையாடாதே இங்கே விளையாடாதே.'' என்று கத்துவாள் ஆமா லீவுல விளையாடாமே என்ன தான் பண்ணறது சொல்லுங்க? ஷோகேஸில இருக்கிற பொம்மை மாதிரி ஒரே இடத்தில என்னல உட்கார்ந்திருக்க முடியுமா? என் அம்மாவுக்கு இது புரிய மாட்டிங்குது? என்ன அப்பாவோ என்ன அம்மாவோ போங்கள்!

அப்பாவுமாச்சு ......அம்மாவுமாச்சு...ரெண்டும் ஒரே பல்லவி ......ஒரே பாட்டு...!

-வசந்தா-

தம்பிக்கு ஒரு கடிதம்.

என் அன்புத்தமிழே!
நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

உன் கல்லூரி முதல்வர் உன்னைப்பற்றி வரைந்த மடல் கிடைக்கப் பெற்றேன்—அஃது வேதனைக்குரிய செய்தி தாங்கிய கடிதம். தென்னம் பிள்ளையை நீருற்றி வளர்க்கின்றனர். ஏன் தெரியுமா? மரங்களில் நன்றியுள்ளது தென்னை மரமே. தானுண்ட நீரைத் தலையாலே தானே தரும் இயல்புடையது. எனினும் சில பல தென்னைகள்— முடத்தெங்காக திசை மாறிப் போவதுமுண்டு- உன்னைப் போல— உன்னைத் தென்னம் பிள்ளையாக நினைத்து-பாசக் கண்ணீரைச்—சொரிந்தல்லவா வளர்த்தேன்—வளர்த்து வருகின்றேன் தென்னை போல நீயும் பின்னாளில் பயன்படுவாய் என்று எண்ணியிருந்தேன்

என் நலத்திற்காக அல்ல—
நீ பேசும் மொழி நலத்திற்காக—
அம் மொழி போற்றி வளர்த்த பண்பாட்டுச் சிறப்பிற்கும்,
சமுதாயதிற்கும்-

கல்லூரி முதல்வர் உன்னைப் பற்றிக் கூறிய செய்தி எங்கே நீ முடத் தெங்காக மாறிவிடுவாயோ என்ற அச்ச உணர்வை என்னுள்ளே தோற்று வித்துள்ளது! இளங்கன்று பயமறியாது என்பார்கள்.

உன்னைப் பொறுத்த மட்டிலும் அம்மொழி முற்றிலும் மெய்யாகி விட்டது.

சன நாயகம் எந்த அளவு இந்த நாட்டு மக்கள் மனதில்-குறிப்பாக இளம் உள்ளங்களைக் கட்டுப் பாடின்றி அலையச் செய்கின்றது—

என்று எண்ணுமளவு நீ செய்த வன் முறைச் செயல் என் சித்தத்தை நிலை குலையச் செய்து விட்டது.

சன நாயகத்தின் எதிரியல்ல நான். இந் நாட்டில் சன நாயகம் கார் உள்ளளவும் கடல் உள்ளளவும் வாழ வேண்டும் என்று விரும்புகின்றவன். சனநாயகம் கூரிய கத்தி போன்றது—கொடும் நெருப்பு போன்றது. பயன் படுத்துவோரின் பண்பைப் பொறுத்து அதன் பயன் அமையும்.

சன நாயகத்தை மீறிய ஆசிட்யாளர்கள்- சன நாயகப் போர்வையில் வன்முறைப் பயணம் செய்வோர் - தோற்றுப் போன வரலாற்று சின்னங்கள் உண்டே தவிர வெற்றி வாகை சூடிய நிலையை நான் பார்த்தது மில்லை-வரலாற்றில் படித்தது மில்லை. . . . .

நீ தான் கல்லூரி மாணவர் தலைவனும் 'தலைமைப் பதவி' என்ற பித்து உன்னையும் பிடித்து விட்டதே என்று மெத்தவும் வேதனைப்படுகின்றேன். தொண்டராகவே இருந்து பொதுப் பணியாற்றிய அண்ணல் காந்தி எங்கே?

உன்னைப் போன்றோர் எங்கே.

பெற்ற பதவிக்குப் பெருமை தேடித் தரும் 'மனிதர்கள்' ஏற்ற பதவி நிலைக்கு சிறுமை ஈட்டித்தரும் 'அற்பர்கள்' என்ற இரு பிரிவுகளில்

நீ இரண்டாவது இரகமே.

போகட்டும்.

எப்படியோ பதவியைப் பிடித்துவிட்டாய். உன்னை நம்பியோர்க்கு நல்வழி காட்ட வேண்டாமா? இலட்சியத்தை அடைய சரியான மார்க்கத்தைத் தேர்வு செய்வது தானே நற்றலைவன் கடமையாக இருக்க முடியும்?

''எனது இலக்கினைவிட அதனை அடைகின்ற மார்க்கமே எனக்கு முக்கியம்''.

என்ற அண்ணலின் அமுத மொழியினை மறந்து விட்டாயா?

காந்தி பிறந்த நாட்டிலே பிறந்தவன் கத்தியைத் தூக்கலாமா?

அடிகளாரின் அன்பு வழியிருக்க

அஹிம்ஸா பாதையிருக்க

கண்மணியே நீ

வன்முறை நாடலாமா?

பண்பட்ட அறவழியிருக்க

புண்தரும் மறவழி தேடலாமா?

எத்தனை இரவுகள் காந்தியாரின் புனித தத்துவங்களை உனக்கு எடுத்துச் சொல்லியிருப்பேன்,

நீ மாணவன் கோரிக்கை என்ற முத்திரையில்

முகத்திரையின் பின்னணியில் பேருந்தைக் கொளுத்தியுள்ளாய்

கல்லூரி உடைமைகளுக்கு ''அகால மரணத்தை'' கொடுத்துள்ளாய்

கல்லூரி பொது உடைமைகளுக்கு மட்டுமின்றி நீ கன்னித்தமிழ்ப் பண்பாட்டிற்கும் கல்லறை கட்டிவிட்டாய் வள்ளுவன் போற்றிய பண்புடைமையை நீ பாதியிலேயே பரலோகத்திற்கு அனுப்பிவிட்டாய்.

மாணவர்கள் கோரிக்கைகள் எழுப்புவதை நான் தவறென்று கூற மாட்டேன்.

உங்கள் நலன் காக்கவே இச்சமுதாயம் உள்ளது. பரிவோடும் கோரிக்கைகளை முன் வைக்கக் கூடாதா? அல்லது அஃது இயலாத செயலா?

இன்முறை சாதிக்காததையா வன்முறை சாதித்துவிடும்?

நிதானம் ஆற்றமுடியாததையா சினம் செய்துவிடும்?

உன் போன்ற கருத்துக்குருடர்களால்

உங்களது அவசரத்தன்மையால்

நாட்டுடைமைகள் நாசமாகின்றன

உன்னைப் போன்ற பிள்ளையை நம்பி இந்த நாடு உள்ளது. சரியான பாதையைத் தேர்வு செய்யாத நீங்கள் எப்படி இந்த நாட்டைக் காக்கப் போகின்றீர்கள்.

என் அறிவுரைகளை அப்படியே நீ ஏற்க வேண்டாம். சிந்தித்து பகுத்துப்பார்த்து நல்ல முடிவெடு.

என் நம்பிக்கையின் விடிவெள்ளியே!

உன்னிடம் நல்ல பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

உன் அன்பு அண்ணன்

இளியவன்.

அந்தச் சத்தம் நன்றாகக் கேட்டது. துல்லியமாக, மிகவும் துல்லியமாகக் கேட்டது.

சர... சர... சர்ச்சர்ர்ர்... டிக் ... டிக் .., ஸ் ஸ் ஸ் ஸ் ....

இரவு சுமார் பனிரெண்டு மணி ! பாண்டியன் அவனது அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

வேறு ஏதாவது புத்தகம் படித்தாலும் அந்தச் சத்தத்தைக் கேட்டு இப்படி பயந்திருக்க மாட்டான். அவசியமுமில்லை.

அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகம் ''இரவு மோகினியின் மர்ம நடனம் '' என்பதாகும்.

பாண்டியனுக்கு உடம்பு வியர்த்தது. கைகால் அவனுடைய அனுமதியில்லாமலேயே தாளம் போட்டன. அவன் ஏதோ ஒருமுடிவுக்கு வந்தவனாக திடீரென எழுந்தான். குபீரெனப் பாய்ந்து இரு கதவுகளையும் சாத்தினான். மேல், கீழ், வலப்பக்க, இடப்பக்க தாழ்ப்பாக்களையெல்லாம் ஒழுங்காகவே போட்டு முடித்தான்.

இரவு மணி 12

சற்று உட்காரலாம் என்றவன் மீண்டும் எழுந்து வந்து சன்னல்களையும் சாத்தினான்.

அறை முழுவதும் அமைதி நிலவியது. அந்த அமைதியில் அந்தச் சத்தம் இன்னும் தெளிவாகக் கேட்டது.

சர... சரா...... சர்... சர்... டிக் டிக் ... ஸ் ஸ் ஸ் ....

அந்தச் சத்தம் அவனது அறையின் இடப்பக்கக் கதவின் வெளிப் பக்கத்தின் மேல் புரத்தில் இருந்து வந்தது.

பயத்தை மறைக்க முயன்றான். மற்றொரு புத்தகத்தை எடுத்தான் தலைப்பைப் பார்த்தான். ''தேள்களின் தோற்றமும் அதன்வகைகளும்'' ஆயிரம் தேள் அவன் தோளில் கொட்டியதுபோல் இருந்தது. பாண்டியன் சந்தேகத்துடன் தன் தோளை ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

ஒரு வேளை தேளாகத்தான் இருக்குமோ? ஆம் ! தேளேதான் ! நிச்சயமாக அதேதான் ! அதுவும் பெரிய தேளாகத்தான் இருக்க வேண்டும் !

காலண்டர் முருகனை முதல் முறையாகக் கையெடுத்துக் கும்பிட்டான்.

க. பொன்முடி.

முதல் முறையாக நெற்றி நிறைய திரு நீறை பட்டையாக வைத்துக் கொண்டான். அப்படியும் பயம் போகவில்லை.

அந்தக் குளிரான இரவிலும் அவன் உடம்பில் மழைபோல் வியர்வை கொட்டியது.

மணியைப் பார்த்தான். மணிபனிரெண்டரை. பேய்கள் நடமாடும் நேரம். அந்தச் சத்தம் இப்பொழுது அதிகமாக வலுத்தது. காற்றுவேறு உய் ... உய் ... என்று ஓலமிட்டுத் தாளம் போட்டது. மீண்டும் ....

சரசர ... சர்சர்...... உஷ் ....

பாண்டியன் ஒரு முடிவுக்கு வந்தவனுக வலப்பக்கக் கதவை மெதுவாக ... மிக மெதுவாகத் திறந்தான். 'குபீர்' எனப் பாய்ந்து ஓடினுன்.

'பட் ...'

கரண்ட் இல்லை ! எங்கும் ஒரே இருள் !

அவன் மாடிப்படிகளில் விழுந்து புரண்டு அலறியடித்துக்கொண்டு ஓடினுன். கால் தவறியது, தடால்!

இடுப்பில் வலி பொருக்க முடியவில்லை. தாங்கிக் கொண்டான் முகத்தில் வியர்வை வழிந்து, நெற்றியிலுள்ள திருநீறை நனையச் செய்தது. தலை கலைந்து அலங்கோலமாக இருந்தது இன்னும் அவன் ஓடிக் கொண்டே இருந்தான். அவன் நினைத்தது சரியாக இருந்தது. அங்கே டீக்கடை பெஞ்சியில் நல்லான் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்.

நல்லான் ... கட்டுமஸ்தான உடலமைப்புக் கொண்டவன். தைரியசாலி. அங்குள்ள டீக்கடையில் வேலை செய்பவன்.

''நல்லா ...... நல்லா...... சீக்கிரம் எழும்பு...... ஆபத்து......

''ஸார்... என்ன ஸார் ஆச்சு ...... என்ன ஆபத்து?

நல்லா... பேச நேரமில்லே... சீக்கிரம் ஒரு விறகுக் கட்டையை எடுத்துக்கோ?

அவன் தூக்கக்கலக்கத்தில் தள்ளாடி எழுவதற்குள்ளே இவனே சென்று மூன்று விறகுக் கட்டைகளை எடுத்துக்கொண்டார். ஒன்று நல்லானுக்கு மற்ற இரண்டும் பாண்டியனுக்குத்தான். பாண்டியன் முன்னேயும் நல்லா பின்னேயும் செல்ல இருவரும் வேகமாக ஓடினர். அப்பொழுது இரண்டாவது படக்காட்சி பார்த்து விட்டு வந்து கொண்டிருந்த மைதீன் இவர்கள் இருவரும் அரக்கப் பரக்க ஓடி வருவதைப் பார்த்தவுடன் முதலில் பயந்தே விட்டான். பின் சமாளித்துக் கொண்டு என்? என்ன ஆச்சு! என்ன ஆச்சு!'' என்றுன்.

''மைதீன் மைதீன் நம்ம ரூம்ல வந்து என்னமோ இருக்குது. சீக்கிரம் வா. இந்தா பிடி'' ...''

அவன் கையிலும் ஒரு விறகுக் கட்டையைக் கொடுத்தான். இப்பொழுது மூவரும் ஓடினர். முதலில் பாண்டியன் இரண்டாவது நல்லா மூன்ருவது மைதீன், மாடிப் படியை நெருங்கினர். வரிசை மாறியது. முதலில் நல்லான் இரண்டாவதாக மைதீன் மூன்ருவதாக பான்டியன் மாடிப் படிகளில் ஏறி முடித்தனர்.

''உஸ்''...... பாண்டியன் எச்சரித்தான். அதோ அந்தக் கதவுக்குப் பக்கத்தில் தான்......

மூவரும் மெதுவாக, மிக மெதுவாகப் பதுங்கிப் பதுங்கிச் சென்றனர். அந்த அமைதியான நேரத்தில் அந்த சத்தம் நன்ருகக் கேட்டது சர்...... சரக்...... இப்பொழுது மூவருக்கும் கிலி பிடித்துக் கொண்டது என்ருலும் உயிரைப் பணயமாக வைத்து கதவை இஞ்ச், இஞ்சாக நெருங்கினுர்கள். பாண்டியனைத் தவிர பார்த்த இருவருமே குபீரென்று சிரித்துவிட்டனர். பாண்டியன் குழம்பினுன்.

அவர்கள் இருவரும் பார்த்து சிரித்த இடத்தைப் பார்த்த பாண்டியனுக்குச் சிரிப்பதா... அழுவதா என்று தெரியவில்லை. அவன் பார்த்த இடத்தில் காய்ந்த மாவிலைத் தோரணம் ஒன்றுடன் ஒன்று உரசிக் கொண்டும் கதவிலே முட்டிக் கொண்டும் காற்றிலே அசைந்த வண்ணமாயிருந்தது.

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் மாவிலைத் தோரணத்தை பிய்த்து எறிந்தான். அவனுல் வேறு என்ன செய்ய முடியும்.



தேவியின் புன்னகை

ஜே. பி. ஹாலேயா,

நாகப்புரி நாட்டின் மன்னன் ரவி வர்மனுக்கு மக்கட்பேறு இன்லாத குறை இதற்காகந ாகப் புரியிலுள்ள பத்ரகாளி கோவிலுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு பத்து வயதிற்குள் இருக்கும் ஆண் குழந்தையை பலி கொடுத்து வந்தான். அப்படி பலி கொடுக்க குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்த்துக் கொடுப்பவர்களுக்கு பத்தாயிரம் பொற்காசுகளை சன்மானமாகக் கொடுத்து வந்தான். இந்த கதையை, நானும், என் தங்கை ராணியும் ஒரு துண்டு பென்சிலுக்காக சண்டையிட்டு இருவரும் கத்தி அழுது கொண்டிருந்த சமயம், எங்கள் பாட்டி எங்களை சமாதானம் செய்வதற்காக கூறினாள்.

நானும் ராணியும் எங்கள் சண்டையை மறந்து நல்ல கவனிப்போடு பாட்டி சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தோம். தொடர்ந்து பாட்டி கதையைக் கூறிக் கொண்டிருந்தாள். அப்போது நாகபுரி நாட்டின் எல்லைக் குட்பட்ட கல்லுபட்டி கிராமத்தில் தொடர்ந்து 3 வருட காலமாக மழையே இல்லாது குடிக்க குடி தண்ணீரும் கிடைக்காது அங்குள்ள மக்கள் அனைவரும் அவதிப் பட்டனர்.

பஞ்சம், பசி, பட்டினி, இவைகளோடு கூலி வேலை செய்து பிழைக்கவும் வழியில்லாது, அவர்கள் மன்னன் ரவிவர்மனிடம் சென்று தமது குறையை எடுத்துக் கூறினர். அப்போது ராணி

மல்லிகா எழுந்து மக்களை அமைதியுடன் இருக்கச் சொல்லி உமது குறைகளையும் கஷ்டங்களையும் தீர்ப்போம் அதில் வழக்கப்படி இவ்வாண்டு காளி கோயிலுக்கு பலியிட விருப்பத்துடன் ஆண் குழந்தை தருபவருக்கு பத்தாயிரம் பொன்னும் தருகிறோம், என அறிவித்தாள். அப்பொழுது மிகுந்த ஏழையாக இருந்த வேலப்பன்; தனக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருப்பதாகவும், அவர்களில் மூத்தவனுக்கு பன்னிரெண்டு வயதும் இளையவனுக்கு ஒன்பது வயதும் மூன்றுமவனுக்கு ஏழு வயதும், ஆகிறது என்றும் மூத்தவனை மனைவியின் விருப்பப்படி கொடுப்பதில்லை என்றும் என் விருப்பப்படி இளையவனைக் கொடுக்க விருப்பமில்லை என்றும், எனவே நடுவில் ப் பிறந்த குணநாதனை கொடுக்க போகிறேம் என்றும் அவனும் காளிக்கு பலி ஆக பெற்றேரின் கஷ்டம் தீர்க்க இசைந்து விட்டான் என்றும் கூறினன்.

உடனே அரசன் மகிழ்ச்சியோடு

குணநாதனை வாங்கிக் கொண்டு பொற்காசுகளை அளித்தான். பலியிடும் நாளில் அவனைக் குளிப்பாட்டி சந்தனம், விபூதி, குங்குமம் முதலியவைகளைப் பூசி மணமுள்ள மலர் மாலை அணிவிக்கச் செய்து காளியின் பலிபிடத்திற்கு முன் நிறுத்தினான்,

கையில் வாளுடன் பத்ரகாளி வந்தாள், கோமாளியைப் பார்த்து சிரிப்பது போல் சிரித்தான் குணநாதன்!

காளி :- ஏன் சிரிக்கிறாய்?
குண : கண்டிப்பாக சொல்ல வேண்டுமா?

காளி :- சொல்;
குண :- தாயிடதவறு செய்தசேய் யாரிடம் ஓடவேண்டும்.
காளி :- தந்தையிடம்,
குண :- தந்தையிடம் தவறு செய்தால்
காளி :- தாயிடம் தஞ்சம் அடைதல்
குண :- அவர்கள் இருவரும் ஒரு உயிரைக் கொல்லத் தீர்மானித்தால்?
காளி :- அரசு, அரசன், அரசாங்கம் காப்பாற்றவேண்டும்,
குண :- காவலனே, அரசனே கொல்ல நினைத்தால்?
காளி :- தெய்வம் காப்பாற்ற வேண்டும்.

குண :-மற்ற உயிரை தன் உயிர் போல் பாவித்து ...... எல்லா உயிர்களிலும் வாழும் நீ உயிரைத் தந்த நீயே உயிர் வேண்டும் என கேட்கும் பொழுது இந்த உலகம் எதற்கு என்றுதான் சிரித்தேன், என்றான், காளி, வெட்கி, தலை குனிந்து, பலிவேண்டாம்! மன்னா இக்குழந்தை உன்னுடையது இனி என்றுமே பலிவேண்டாம் எனக் கூறி மறைந்து விட்டாள்.

பாட்டிக் கூறி முடித்ததும் தங்கை ராணி வழக்கப்படி என்னை அண்ணா எனக் கூப்பிடாது ராஜா, வா நாமும் நம் வீட்டு பூஜை அறையிலுள்ள காளியிடம் சென்று இது நிஜமா? என கேட்போம் எனக் கூறினாள். இருவரும் கைகோத்த வண்ணம் காளியிடம் சென்று கேட்டோம்,

ஆம் எனக் கூறுவதற்கு பதில் புன்முறுவலித்தாள் காளி.

இந்த இதழில் 13-ஆம் பக்கம் வெளியாகியிருக்கும் தம்பிக்கு ஒரு கடிதம் என்னும் கட்டுரையை எழுதியிருப்பவர் எஸ். பி. மணி எம். ஏ.

இண்டர் வியூ...

ஓ... கனவுகளின்
குத்தகைகாரனே...
நீ படிக்காத
ஒன்றை (படித்திருந்தால்)
இருந்திருந்தால்
வேலை தரலாம்
என கூறும்
நாடகத்தின் பெயர் ......
இண்டர் வியூ.
அப்பா கொடுக்கும்
ஐந்து ரூபாயில்
சினிமா... டீ
கணக்கை பார்த்து விட்டு
புதிய நண்பர்களை
அறிமுகப் படுத்தும்
விழா

—D. Ramesh.



அவள் பூத்த நேரம்..!

கவிதா

நல்லமுத்துவின் குடும்பம் மறு நாள் பூந்துறைக்குப் புறபடத் தயாராயிற்று. அப்பொழுது சித்திரா அம்மாவிடம் கையைப் பிசைந்தாள். ''அம்மா! எனக்கு இந்தப் பேர்காலத்தை நினைக்கும் பொழுது மிகவும் பயமாக இருக்கிறது. போன பேர்காலமும் மிகவும் சீரியஸ்சாக இருந்தது. இயற்கையாக டெலிவரி ஆகாமல் என் வயிற்றின் இடப்பக்கம் ஆப்பரேசன் செய்து குழந்தையை எடுத்தார்கள். அதற்குப் பிறகு குழந்தையே ஆகக்கூடாது! என்று டாக்டர்கள் கூறி அனுப்பினார்கள். நாங்களும் நாலு ஆண்டுகள் எச்சரிக்கையாக இருந்தோம். ஆனால் இப்பொழுது எப்படியோ இந்தக் குழந்தை ஆகி விட்டது. போன வாரம் டாக்டரிடம் சென்று 'டெஸ்ட்' செய்தோம். குழந்தை சரியான 'பொஸிசன்லே' இல்லை என்று கூறிவிட்டார்கள். இந்த முறையும் ஆப்பரேசன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும் போலத் தெரிகிறது. அதை நினைத்தால் எனக்கு ஒரே பயமாக இருக்கிறது. போன முறையே செத்துத்தான் பிழைத்தேன். அப்போது நீங்கள் பக்கத்தில் இருந்து உதவி செய்தீர்கள். அது போல் இந்த முறையும் நீங்கள் என் அருகில் இருந்தால் அது எனக்குத் தெம்பாக இருக்கும். எப்படியும் பிழைத்துக் கொள்வேன். எப்படியம்மா உங்கள் யோசனை?''

சித்தராவின் நிலை மிகப் பரிதாபமாகத் தான் இருந்தது. ஆனால் தங்கத்தின் நிலையும் செழுமையாக இல்லையே? கை முறிந்த கணவன். வயதுக்கு வந்த மகள். உழைப்புக்கோ ஆளில்லை. பிழைக்கும் வழி இல்லை. இப்பொழுது வழியாகத் திறந்திருக்கும் இந்தக் கோழிப் பண்ணையையும் காலத்தில அமைத்துக் கண் காணிக்க வில்லை என்றால் பின்னர் அவர்கள் இப் பூமியில் காலுன்றி நிற்கவே முடியாதே? கை முறிந்த மனிதனால் என்ன ஆகும்? எனவே தங்கமும் கையைப் பிசைந்தாள்.

சித்திராவின் கண்களில் நீர் முட்டியது. முகத்தில் மரணப் பயம் தெரிந்தது. அதைக் காணவும் தங்கத்திற்கு மனம்பொறுக்கவில்லை. தங்களுடைய வாழ்க்கைக்கே வழி திறந்து வைத்திருக்கிறார் மருமகன் கார்த்தி. அதேநேரத்தில் அவருடைய வாழ்க்கையின் வழி அடைபடும் நிலையில் சூழ்நிலை தெரிகிறது. இந்நேரத்தில் தன்னலத்தை மட்டுமே கருதித் தாம் நழுவலாமா? என்றும் தங்கம் எண்ணிப் பார்த்தாள். தங்கத்திற்கு ஒருஎண்ணம் தோன்றியது.

''சித்திரா! தனத்தை இங்கே உதவிக்கு விட்டிட்டுப் போகிறேன். அவளைவைத்து எப்படியோ இந்த பேருகாலத்தைச் சமாளி. எனக்கும் இங்கே தங்க

முதலாமவர் :- எங்க வீட்டிலே மாமியார் மருமகள் சண்டையே கிடையாது.
மற்றவர் :- ஆச்சரியமாயிருக்கே அவ்வளவு ஒற்றுமையா?
முதலாமவர் :- அதில்லே! எனக்கு அம்மாவுமில்லே மனைவியுமில்லே

பி. எஸ் நீலவண்ணன்

முடியாத நிலமை. வயசுக்கு வந்த தனத்தையும் எங்களோடு வைத்து அறிமுகம் இல்லாத ஊர்களில் குடித்தனம் செய்ய முடிய வில்லை அதனாலே தனம் இங்கே இருக்கட்டும் உனக்கும் உதவியாக இருக்கும். அவளுக்கும் பாதுகாவலாக இருக்கும். எங்களுக்கும் நிம்மதியாக இருக்கும்.'' என்று தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

சித்திரா வேறுவழி இல்லையே என்று அதை ஏற்றுக் கொண்டாள். மறுநாள் கார்த்தியும் நல்ல முத்தும் தங்கமும் பூந்துறையை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

இதழ் 6.

பூந்துறை போயிருந்த கார்த்தி ஐந்து நாட்கள் கழித்துத் தஞ்சாவூர் வந்தான். வரும்பொழுது ஏராளமான ஸ்வீட் வகைகள், மணப்பாறை முருக்கு, திண்டுக்கல் திராட்சை, பிளம்ஸ் சிறுமலைப் பழம் ஒரு கூடை, அதோடு தஞ்சாவூர் முந்திரிப் பருப்பு, கதம்பம், இவைகள் சகிதமாக வந்து சேர்ந்தான்.

கதம்பம் என்றால் தனத்திற்குக் கொள்ளையாசை அவள் கார்த்தி வாங்கி வந்ததில் பாதியை எடுத்து தன் தலை நிறையச் சூட்டிக் கொண்டாள். மேலும் ''எனக்குக் கதம்பம் தான் பிடிக்கும் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று ஒரு அசட்டுக் கேள்வியை கேட்டாள்.

''தஞ்சாவூர் கதம்பம் என்றால் தமிழ் நாட்டில் பிடிக்காத பெண்களே கிடையாது. அப்படி தஞ்சாவூர்க் கதம்பத்திற்கு ஒரு தனியழகும் மணமும் உண்டு. 'என்று கார்த்தி பெருமையாகக் கூறினான்.

''உங்க ஊர்ப் பூ என்று உயர்த்தியாய்ப் பேசாதீங்க. எங்கள் ஊர் பூவுக்காகவே பிறந்த ஊர், அதனால்தான்' பூந்துறை' என்று பேர் வைத்திருக்கிறார்கள்.'' என்று தனம் பெருமை கொழித்தாள்.

''குருடனுக்குக் கூடத்தான் 'நல்லகண்ணு' என்று வைத்திருக்கிறார்கள், அதற்காக அவனைக் குருடு இல்லை என்று ஒத்துக் கொள்ள முடியுமா? முடவனுக்குக் கூடத்தான் 'தாண்டவராயன்' என்று பெயர் வைத்திரிக்கிறார்கள். அதற்காக அவனை எவ்வளவு பெரிய பள்ளமானாலும் தாண்டி விடுவான் என்று ஏற்றுக் கொள்ள முடியுமா? ஊமைக்குக் கூடத்தான் 'தேன்மொழியாள்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்காக அவள் பேசும் பொழுது தேன் சிந்தும் என்று எண்ணமுடியுமா? அது போலத்தான் உங்கள் பூந்துறை' ஊரும்!'' என்றுகார்த்தி ஓங்கி ஒரு போடு போட்டான்.

ஒருவர் :- ஏம்பா! லாட்டரியிலே விழுந்திடுச்சா

மற்றவர். அட போப்பா! அது விழுவதற்குள் ஸ்கைலேப்' விழுந்துடுமோன்னு பயமா இருக்கு.

—க. பொன்முடி.

''அம்மாடி ...!ஏ ... அக்கா! அத்தான் பேசுவதைப் பார்த்தீர்களா?'' என்று தனம் கூறித் தன் நாடிமேல் விரல் வைத்தாள். ''இப்பொழுது ஸ்டெடி ஆயிட்டேன் தெரியுமா?'' என்று கார்த்தி கூறிச் சிரித்தான்.

''பிழைத்துக் கொள்வீர்கள்!'' என்று சித்திரா சான்றிதழ் வழங்கினாள்.

கார்த்தி ஸ்வீட் பொட்டலத்தைப் பிரித்தான். அதிலிருந்து ஜேங்கரி'' ஒன்றை எடுத்து, ''இந்தாடா கண்ணு!''என்று மகள் இளவரசிக்குக் கொடுத்தான், அடுத்தொன்றை எடுத்தான். அதைத் தனத்திடம் நீட்டினான். அவள் அதை ஆவலோடு வாங்கினாள். கார்த்தி அதைக் கொடுக்காது தன்வாயில் வைத்து ஒரு கடி கடித்து மென்று விழுங்கிக் கொண்டே மறுபாதியைச் சித்திராவின் வாயில் வைத்தான். அவள் சிரித்துக் கொண்டே வாய் திறந்து வாங்கிக் கொண்டாள்.

''அக்கா! பார்த்தீர்கள்... அத்தான் ஏமாற்றுவதை, ''என்று தனம் சிணுங்கினாள் ''நீ ஏண்டி அவரிடம் கை யேந்துகிறாய் நீயே எடுத்துக்கொள்!''என்று சித்திரா தனத்திற்கு உரிமை வழங்கி யோசனை கூறினாள்.

உடன் தனம் உள்ளே புகுந்து ஸ்வீட்டை எடுக்க முயன்றாள். கார்த்தி எச்சரிக்கை விடுத்தான். ''தொடாதே! தொட்டால் கையைப் பிடித்து விடுவேன்!'' என்று.

''பார்க்லாமா?'' என்று தனம் சேலையை வரிந்து கட்டினாள். ''பார்க்கலாம்! பார்க்கலாம்! ''என்று கார்த்தி தண்டால் பஸ்கி எடுத்தான். உடன் சித்திரா ஒரு ஜாங்கிரியை எடுத்துத் தனத்திடம் நீட்டினாள். தனம் அதை வாங்கி, ''வெற்றி யாருக்கு?'' என்று கூவிச் ஜேங்கரிக் கையை உயர்த்தினாள் 'வெற்றி உனக்கல்ல! என்மனைவிக்கு!''என்று கார்த்தி பதிலுக்குக் கூவினான். ''வெற்றி உங்கள் மனைவிக்கல்ல! என் அக்காவுககு!''தனம் பெரிதாகக் கூவினாள். ''கல்யாணத்திற்கு முன்னால் உன் அக்காதான்! கல்யாணத்திற்குப் பின் என் மனைவி! யாரும் அசைக்க முடியாது!''கார்த்தி சித்திராவின் கழுத்தில் தொங்கிய தாலியைச் சுட்டிக் காட்டிக் தனத்தைவிடப் பெரிதாகக் கூவினான்.

'' அம்மாடீ....!ஏ ... அக்கா! அத்தானுக்குத் தைரியத்தைப் பார்த்தீர்களா?'' தனம் சித்திரா பக்கம் திரும்பி மூக்கில் விரல் வைத்தாள்.

இப்பொழுது ஸ்டெடி ஆயிட்டேன்!'' கார்த்தி கை முஸ்டியை உயர்த்திக் காட்டினான்.

''சமர்த்துத்தான்! இந்தாங்க பரிசு!'' என்று சித்திரா ஒரு ஜேங்கரியை எடுத்து வழங்கினாள். கார்த்தி அதைத் தலை குனிந்து வாங்கிப் பின் நிமிர்ந்து ஒரு சல்யூட் வைத்தான்.

அதுவரை அந்த நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த சித்திரா திடீரெனத் தன் பேர் காலத்தைப் பற்றி நினைத்துக் கொண்டாள் உடன் அவள் முகம் வாடி விட்டது, அதைக் கண்ணுற்ற கார்த்தி, ''ஏன்? என்ன சித்திரா? ஏன் திடீரென முகம் வாடிவிட்டது?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

தொடரும்

விடுகதை!

1. குளிக்கத் தண்ணீர் இல்லாத குட்டை
குறுகிய சதுரம் உள்ள குட்டை
என்ன குட்டை ?

2. மூன்று பொருளும்
வெவ்வேறு நிறங்களில் !
ஒன்ருய்ச் சேர்த்தால்
இரத்தச் சிவப்பு !

3. வழுவழுப்பான மரம்
பழம் தரும் மரம்
கழனியில் காணும் மரம்.
என்ன மரம் ?

4. உட்கார்ந்திருக்கும்
ஒய்யாரியைச் சுற்றி சுற்றி
வருகிருள் சிங்காரி !
சுற்றுவதால் திரு நீறு
விழுந்து கொண்டே யிருக்கிறது
அது என்ன ?

5. ஆற்றங்கரை யோரம்
அநேகமாய் இருக்கும்,
மூன்றெழுத்து மிருகம்
நடு எழுத்தை எடுத்து
விட்டால் குழந்தைகள்
இதை விரும்பிக் கேட்பார்கள்.
அது என்ன ?

6. மூன்று எழுத்துள்ள பறவை
நடு எழுத்தை நீக்கிவிட்டால்
மரக்கிளைக்கு மற்ருெரு பெயர் !
அது என்ன பறவை ?

7. மூன்றெழுத்து கொண்ட நோய்
முதலெழுத்து இல்லையென்ருல்
இரவுக்கு முன் உள்ளதைக் குறிக்கும்!
நடு எழுத்து இல்லையென்ருல்
இரவுக்குப் பின் உள்ளதைக் குறிக்கும் !
அந்த நோய் என்ன ?

8. ஆற்றில் வெள்ளம்
வருவதும்
ஆறு முப்பத்தாறு
ஆவதும்
எதனுலே ?

நிலவே நீ இல்லை யென்றால்..!

அடம்பிடிக்கும் குழந்தைக்கு அழகுநிலா உனைக்காட்டி
அன்னையவள் அமுதூட்டின் அதுஉண்ணும்; நீமட்டும்
இடம்மாறி எம்கண்ணில் இருந்தேதான் நீங்கிவிட்டால்
எம்வீட்டுக் குழந்தைகள் இரவிலினிப் பட்டினிதான்!


கற்பனையில் மெருகேறக் காவியத்தில் சுவையேறக்
கவிஞர்கள் உன்துணையில் கவிவடிப்பர்; பால்பொழியும்
பொற்குடமே நீநீங்கிப் போய்விட்டால் இம்மண்ணில்
புதுமைமிகு இலக்கியங்கள் பொங்கிவரல் நின்றுவிடும்!

உயிரோடு உயிராக ஒன்றிவிட்ட காதலினால்
உன்னமுதத் தேனிலவில் உளங்களிக்கும் காதலர்க்கு
உயிரேநீ உனைமறைத்து ஒளிநீங்கிப் போய்விட்டால்
உலகினிலே காதலெனும் உயர்கவிதை அழிந்துவிடும்!

பகலெல்லாம் பாடுபடும் பாட்டாளிப் பசிவயிறு
பாதிகூட நிரம்பாமல் பரிதவிக்கும் போதுன்னால்
சுகங்கண்டு மறந்திடுவார் தொல்லையினை. நீயின்றேல்
தொழிலாளர் வருந்திடுவார் துயருலகில் சூழ்ந்துவிடும்!

ஓர்நாளில் மட்டும்நீ ஓய்வெடுக்கப் போய்விட்டால்
உலகிரவில் படுந்தொல்லை ஒன்றிரண்டோ? ஆதலினால்
பார்மகிழச் செய்கின்ற பால்நிலவே என்றும்எம்
பார்வையிலே இருந்திடுவாய்! பனிநிலவைப்
பொழிந்திடுவாய்!

இரா. ஜெயப்பிரகாஷ்



எண் கணிதம்

ஜியார்லி

ஆகவே உங்கள் பெயரை ஒரு காகிதத்தில் எழுதி அதன் கீழ் ஒவ்வொரு எழுத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ள எண்ணை எழுதுங்கள். பிறகு இடமிருந்து வலமாக எண்களைக் கூட்டுங்கள். மொத்தமாகக் கூட்டிவரும் தொகை ஒருஸ்தானத்திற்கு அதாவது ஒன்பதற்குமேல் வந்தால் அந்தக் கூட்டுத் தொகையையும் மறுபடியும் இடமிருந்து வலமாகக் கூட்டினுல் ஒன்பது அல்லது ஒன்பதற்குள் ஒரு எண் வரும். இந்த எண் தான் பெயரெண்ணுகும். உதாரணமாக. தி மு. ராமசாமி என்ற பெயருக்குப் பார்ப்போம்.

தி. மு. ராமசாமி.
3. 5. 2 1 2 3—16

இந்த 16 தான் அவருடைய மொத்த எண். இந்த 16 ஐ 1 6 என்று கூட்டினுல் 7 வருகிறது. எனவே பெயரெண் 7 என்று கொள்ளவேண்டும். எண்களில் அதிர்ஷ்டத்தைத் தரக்கூடிய எண்கள் 1—3—5—6 ஆகும். ஆகவே 7 வது எண் அதிர்ஷ்டட எண் அல்ல.

அதிர்ஷ்டத்தை தரக்கூடிய எண்கள் பெயரில் வர வேண்டுமானுல் சிறிது மாற்றம் செய்ய வேண்டும். உதாரணமாக :-

தி மு. ராமசாமி என்ற பெயரை தி. மு. ராமசுவாமி என்று மாற்றிக் கொண்டால் அவரது பெயரெண் மூன்ருகும்

தி. மு. ராமசுவாமி
3 5 2 1 5 2 3—21

ஸ்கைலாப்

1973-ஆம் ஆண்டு ஸ்கைலாப் அமெரிக்காவால் ஏவப்பட்டது. அதில் மூன்று விஞ்ஞானிகள் 28 நாட்கள் தங்கி ஆய்வு நடத்தி விட்டுப் பூமிக்குத் திரும்பினர்கள் 1974-ஆம் ஆண்டு ஸ்கைலாப்பின் மேலுறை பழுதுபட்டது. பூமி யிலிருந்து விஞ்ஞானிகள் சென்று ஸ்கைலாப்புக்குப் புதிய உறை பொருத்தி விட்டுத் திரும்பினர்கள்

ஸ்கைலாப் 1982 அல்லது 1983 வரை செயல்படும் என்று எதிர் பார்க்கப் பட்டது' ஆனல் அது 1979 லேயே பழுதடைந்து விட்டது.

தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் கட்டுப்பாட்டை மீறித் தன்னிச்சையாகச் சுற்றுகிறது ஜூலை 11 –ஆம் தேதிஒரு மணிக்கு மேல் இரவு 11–க்குள் விழும், விழும் பொழுது 85 டன் எடையுள்ள அது பெருஞ்சத்தத் தோடு வெடிக்கும், 500 துண்டுகளாகச் சிதறி பூமியில் தீப் பிழம்பாக விழும், அப்பொழுது பெரும் உயிர்ச் சேதம் ஏற்படும், நோய்கள் பரவும், என்று அமெரிக்கத் தரைக் கட்டுப் பாட்டு நிலையம் அறிவித்தது. அதைக் கேட்டு உலகமே நடு நடுங்கியது.

ஸ்கைலாப் இலங்கையில் விழும் என்று இலங்கை விஞ்ஞானி ஒருவர் கூறினர் அதை இலங்கைச் செய்தித் தாள்எல்லாம் முதன்மை கொடுத்து வெளியிட்டன. இலங்கை மக்கள் கதிகலங்கினர். அமைச்சர்கள் வெளி நாடு செல்ல முயன்றனர்.

உத்திரப் பிரதேசத்தில் ஒருபெண் மாடியில் துணிகாயப் போட்டு கொண்டுடிருந்தாள். அப்பொழுது ஒரு விமானம் பறந்து வந்தது அதைக் ஸ்கைலாப் என்று எண்ணி மாடியிலிருந்து குதித்துவிட்டாள் பலத்த அடியோடு மருத்துவமனை யில்சேர்க்கப்பட்டாள். மயக்கம் தெளிந்து விழித்த பொழுது, ஸ்கைலாப் விழுந்து விட்டதா என்று கேட்டாள்

ஆஸ்திரேலியாவில் 10 இடங் களில் கடை வைத்துள்ள ஒருவர் ஸ்கைலாப்புக்குப் பயந்து தனது கடைகளை 3 கோடி ரூபாய்க்கு இன் ஷூர் செய்தார்,

இந்த ஸ்கைலாப் சனியனை அனுப்பியதே தவறு என்று ஆப்பிரிக்கப் பத்திரிக்கைகள் எழுதியுள்ளன.

விண்வெளி ஆராய்ச்சியில் ஸ்கை லாப் தோல்வியை ஒத்துக் கொள் ளுங்கள். கட்டுப்பாடற்று அலை யும் ஸ்கைலாப்பை எங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருகிரேம் என்று ருசியா அமெரிக்காவிடம் கூறியது.

ஸ்காட்லாந்து நாட்டில் பாது காப்பு ஏற்பாடு எதுவும் செய்ய வில்லை. ஸ்கைலாப் கண்ணுக்குப் புலனை உடன் எல்லாக் கோயில் களிலும் இடைவிடாமல் மணி யடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது

விழுகிறது!

கனடா நாட்டில் ஒரு ஊரின் ஓரமான இடத்தைச் சமதளப் படுத்தி, இந்த இடத்தில் ஸ்கைலாப் இறங்கலாமே ''என்று எழுதி வைத்து அதை ஒரு வரவேற்பு மைதானமாக்கி வேடிக்கை செய்தார்கள்.

ஸ்கைலாப் உங்கள் மீது விழுந்தால் இந்தக் 'களிம்பினைத்' தடவிக் கொள்ளுங்கள் என்று புட்டிகளில் களிம்பு அடைத்துச் சில கடைக்காரர்கள் விற்கிறார்கள் இந்தக் களிம்பைத் தடவிக் கொண்டால் செதில்கள் உங்கள் மீது விழாது என்று விளம்பரமும் செய்தனர்.

அமெரிக்கா நாட்டில் ஒரு கடைக்காரர் காகிதத்தால் செய்த ஹெல்மெட்டை விற்றார்.

ஸ்கைலாப்பின் செதில்கள் தலை மீது விழுந்தால் காயம் ஏற்படாதாம்!.

ஸ்கைலாப்பின் செதில்கள்உடல் மீது விழுந்தாலும் காயம் ஏற்படாமல் தடுக்கும் 'மந்திர மாத்திரைகள்' இவை என்று சில மாத்திரைகளைப் பம்பாய் நகரில் சிலர் விற்றனர்.

ஸ்கைலாப்புக்குப் பயந்து கொண்டிருந்த நேரத்தில் பஞ்சாப்மாநிலத்திலுள்ள பாட்டியாலாவில் சுர்ஜித்சிங் என்ற மின்சாரப் பொறியாளருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அவர் 'ஸ்கைலாப்சிங்' என்றுபெயர் சூட்டினார்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஏலம்பாக்கம் கிராமத்தில் ஸ்கைலாப் செதில் ஒன்று எரிந்து கொண்டு விழுந்தது. அதன் அருகில் நின்று கொண்டிருந்த பசுமாடொன்றுக்குக் கண் குருடாகிவிட்டது.

ஸ்கைலாப் புதன் கிழமைஇரவு சுமார் 10 மணி அளவில் இந்துப் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவுக்கு அருகில் தீப்பிழம்பாக விழுந்தது. அது விழுந்த சரியான இடத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

மாலாவின் மன்னிப்பு தேவை...

பா. சந்திரசேகர்

நேரம் மிக விரைவில் ஓடிக் கொண்டிருந்தது. அது ஓடுவது மட்டுமல்லாமல் என் மனைவியின் ஆயுளையும் குறைத்து கொண்டே செல்வது போல் தோன்றியது. ஏனெனில் அவள் தலைப்பிரசவித்திற்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு கஷ்டமான கேஸ் என டாக்டர்களால் சொல்லப் பட்டது தான். இச் சமயத்தில் அழுவதைத் தவிர வேறு ஏதும் செய்ய தோன்றவில்லை. டாக்டர்கள் எனக்கு தைரியம் கூறினார்கள். என்ன சார் நீங்களே இப்படி செய்யலாமா என்றனர்.

அவர் நீங்களே இப்படி என கூற காரணம். நான் போலிஸ் இன்ஸ்பெக்டராக பணி புரிபவன். உத்யோகத்தில் நல்ல தைரியசாலி என்று பெயர் பெற்றவனும் கூட

என் பெயர் சுந்தர், அவள் கீதா. இருவருக்கும் திரு மணம் நடந்து இருவருடம் கழித்து இப்பாக்கியம் அவளுக்கு கிட்டியது, இதுதான் முதல், அதே இப்படி. எனக்கு உட லில் உதறல் கொண்டது. எங்கே அவளை இழந்து விடு வோமோ என்று!

இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது. டாக்டர் என்னி டம் வந்து நீங்கள் வீட்டிற்கு சென்று ஓய்வு எடுத்து கொள் ளுங்கள். இன்று இரவுக்குள் பிறக்கவில்லை எனில் காலையில் ஆயுதம் உபயோகிக்க வேண்டி வரும். கவலையில்லாமல் வீடு செல்லுங்கள் என்றார்.

நான் என் மோட்டாரை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். எவ்வளவு முறை இதன் பின் அமர்ந்து என் தோளை பிடித்து கொண்டு பேசி சிரித்துக் கொண்டு வந்திருக்கிருள். அவளிடம் அப்படி பேசி கொண்டு செல்வதில் தான் எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும். இதையெல்லாம் நினைக்கும்போது உள்ளம் மகிழ்ச்சியினுல் துள்ளினுலும், ஏனோ அழுகையும் துக்கமும் தான் வருகிறது.

அப்போது தான் பார்த்தேன். ஒரு ஆணும் பெண்ணும் தள்ளாடியபடி வருவதை கண்டவுடன் வேகத்தை குறைத்தேன். அவர்களின் அருகில் நிறுத்தியவுடன் அப்பெண்.

இவர் என் சொந்த அண்ணன். இரவில் குடிப்பது இவர் பழக்கம் நான் இங்கு நர்ஸாக பணிபுரிபவள். என்னுடைய பாதுகாப்பிற்காக என் அம்மாவால் அனுப்பப்பட்டவன் இம்முறை மன்னியுங்கள். என் தாயின் உடல்நிலை கவலைகிடம் என தந்தி வந்துள்ளதால் செல்ல வேண்டியுள்ளது என்ருள்

நான் உன் பெயர் என்றேன் அவள் என் பெயர் மாலா இவன் மணி. இம்முறை விட்டு விடுங்கள் என்ருள்

நான் அவர்களின் மேல் சந்தேகம் கொண்டு 'லாக்கப்' பில் வைத்துவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

வீட்டில் 'என்னவளின்' எண்ணம் என்னை அமிழ்த்தியது அவள் உட்கார்ந்த இடம் சாப்பிட்ட இடம். உபயோகித்த பொருள்கள் போன்றவற்றை பார்க்கும்போது அழுகைதான் வந்தது நீண்ட நேரத்திற்கு பின் நித்திரை அணைத்தது.

காலையில் போனின் அலறலைக் கேட்டு விழிப்பு கொண்டேன். டாக்டர் தான் உடனே வருமாறு அழைத்தார். உடனே பல் கூட தேய்காமல் கிளம்பினேன்.

அங்கு என் மனைவி பிழைத்து. குழந்தை இறந்து விட்டதாக டாக்டர் தெரிவித்தார். அனைத்து கடவுள்களுக்கும் நன்றி கூறினேன்.

என் மனைவி பிழைத்ததற்கு காரணம் அவர் மருத்துவமனையில் பணிபுரிந்து என்னுல் உள்ளே அனுப்பப்பட்ட மாலாதானும்.

ஆயுதம் உபயோகித்து குழந்தையை வெளி கொணர முயற்சி செய்த போது இரத்தம் அதிகம் வீணுயிற்ரும்.

அதே வகை இரத்தம் நர்ஸ் மாலாவிடம் தான் உள்ள தாம். காலையில் மாலா டாக்டருக்கு போன் செய்து தான் ''உள்ளே'' இருப்பதாக தெரிவித்தவுடன் இவர் சென்று அழைத்து வந்து இரத்தம் எடுத்து கீதாவை பிழைக்க வைத் திருக்கிருர்.

நான் மாலாவுக்கு நன்றி கூற டாக்டரிடம் மாலா எங்கே என்றேன்.

டாக்டர் அமைதியாக அவருடைய அம்மாவுக்கு ஈமச் சடங்கு செய்ய சென்றிருக்கிருள் என்ருர்.

நான் மாலாவிடம் மானசீகமாக மன்னிப்பு கோருகின் றேன். கிடைக்குமா?......

நவரசம்

நகை. அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம் பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலே,

'பதினுறு பேறு

துதிவாணி வீரம்விசயந் சந்தானஞ் துணிவுதன
மதிதானியஞ் சௌபாக்கியம் போக - மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோவகல் பூண்வயது
பதினுறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே''

'காளமேகம்'.



★ தென் பெண்ணை ஆற்றின் இயற்கை வளம்

திரு. மாதவன்
அரசு மேல் நிலைப்பள்ளி,
கம்பை நல்லூர்,
தர்மபுரி மாவட்டம்.

பள்ளியில் நடந்த கவிதைப் போட்டியில்
முதற் பரிசு பெற்ற கவிதை

தென்பெண்ணை வளமெல்லாம் தென்னம் பிள்ளை
தேனாற்றின் பாய்ச்சலெலாம் நெல்வி ளைச்சல்;
சந்தனமும் சத்தியமும் மணத்தை வீசும்
சரிந்தோடும் பொன்னாற்றின் அலைகள் பேசும்;
சந்தமிகு பாமலர்கள் தொகுத்து நின்றே
தனைக்கலக்கும் சிற்றாற்றை அழைத்து நிற்கும்;
தென்பெண்ணை வளமெல்லாம் பசுமை பொங்கும்
தேன்மலரின் மணம்அள்ளித் தென்றல் வீசும்;

ஆதவனும் இந்நிலையில் இமைகொட் டாமல்
அதையெல்லாம் நாள் முழுதும் ரசித்தி ருப்பான்;
ஆதவனின் சாயலிலே மஞ்சள் வண்ணம்
அம்மணலைப் பொன்பொடியாய் ஆக்கிக் காட்டும்!
ஆதவனின் பொன்தேரின் வருகை எண்ணி
அணிற்குலங்கள் தாளமிட்டு வரவு கூறும்;
பேதமையைக் கல்விபாய்ந்து மாற்றல் போலப்
பெண்ணையே! வறட்சி நீக்கி வளத்தைச் சேர்ப்பாய்!

அன்றில் பறவையின் காதல்

கோதை ம்ர்பன்

திருமண வீடுகளில் இன்றும் அன்றிலைப் பற்றிப் பேசுகிறோம். மணமக்களை வாழ்த்தும் பொழுது, ,,அன்றிலைப் போல் இணைபிரியாது வாழ்க'' என்று கூறுகிறோம்.

ஆனல் அந்த அன்றில் எப்படி வாழ்ந்தது என்பது நமக்குத் தெரியாது. அது தெரியாமலேயே மணமக்களுக்கு எடுத்துக் காட்டாகக் கூறிக் கொண்டு வருகிறோம். நீண்ட நெடு நாட்களாக வாழ்த்திக் கொண்டு வருகிறோம்.

மணமக்களுக்கு எடுத்துக் காட்டாக அன்றிலைக் கூறுவதால் அதனுடைய வாழ்க்கை ஏதாவது ஒரு வகையில் மனித வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். அது சிறப்புடையதாகவும் இருக்க வேண்டும். அந்தத் தொடர்பும் சிறப்பும் என்ன என்று ஆய்வதே இக்கட்டுரை.

அன்றில் பறவையின் வாழ்க்கை மிகவும் சுவையானது. வியப்புக்குரியது. வள்ளுவர் வகுத்த இல்லறவியலையும் களவியலையும் கற்பியலையும் விஞ்சக்கூடியது. வரலாறு போற்றும் லைலா—மஜ்ஜுனுவையும், ரோமியோ—ஜுலியட்டையும், அம்பிகாபதி- அமராவதியையும் வெல்லக்கூடியது இல்லறத்தில் இன்று எலியும் பூனையாகவும், கீரியும் பாம்பாகவும், வாழ்க்கை நடத்தும் கணவன் மனைவியரைக் காரி உமிழக் கூடியது.

அப்படி இனிய வாழ்க்கை நடத்தும் அன்றிலின் இல்லற வாழ்க்கையை இலக்கியங்கள் எவ்வாறு பேசுகின்றன என்பதைப் பார்ப்போம்.

''அலர் ஞெமன் மகன்றி
னன்னர் புணர்ச்சி''

இவ்வாறு பரிபாடல் (8 : 44 பாராட்டுகிறது.

மாணவர்கள்—

பாடப் புத்தக
பாவங்களைச்
சுமக்கின்ற
சுமைதாங்கிகள்

வேலவன்

ஆணன்றிலும் பெண்ணன்றிலும் குளத்து மலர்களிடையே குலவித்திரியும். அப்பொழுது ஒட்டு மாங்கனிகளைப் போல் ஒட்டி கொண்டு பிட்டுப் பார்க்க முடியாத படி பிணைந்தே திரியும். பிரிந்தால் பெருந்துயர் எய்தித் துடிக்கும். இது இப்பரிபாடற் கருத்து.

இதே கருத்தை, ''இணை பிரி மகன்றலில் பேர்தலாற்ருள்'' என்று பெருங்கதை (1, 53, 96) பேசுகிறது.

ஆணன்றிலும் பெண்ணன்றிலும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தால் எப்படிஅந்தப் பிரிவுத் துயரத்தை தாங்க மாட்டாது தவிக்குமோ அது போல், தலைவனை விட்டுப்பிரிந்த தலைவி தவித்தாள் என்பது இப்பாட்டின் கருத்து.

இதே கருத்தை அப்படியே அடியொற்றி, ''துணை பிரி மகன்றி லொத்தாள்'' என்று சிந்தாமணி 302-ம் பாடல் பாடுகிறது.

இதே கருத்தை ......

''பூ இடைப் படினும் யாண்டு
கழிந்தன்ன

நீருறை மகன்றில் புணர்ச்சி
போல''

என்று குறுந்தொகை பாடல் 57

கூறுகிறது.

ஆணன்றிலும் பெண்ணன்றிலும் இணைந்து பிணைந்து இன்ப விளையாட்டுக்களை விளையாடி நீரில் ஊர்ந்து செல்லும் பொழுது, ஒரு பூ குறுக்கிட்டு அவைகளை ஒரு

நொடி பிரித்து விட்டாலும், அந்தச் சிறுபிரிவைக் கூட அவைகளால் தாங்கிக் கொள்ள முடியாதாம். உடனே ஓடி இணைந்து பிணைந்து கொள்ளுமாம். அந்த ஒரு நொடிப் பிரிவை ஓராண்டுப் பிரிவாகக் கருதித் துயர் கொள்ளுமாம். அவ்வளவு இணைப்பு, பிணைப்பு, அன்பு, ஆசை, ஆர்வம், காதல்!

இதே சுவைச் செய்தியைக் காளிதாசரும் குறிப்பிடுகிருர். அன்றில்சேவலை அகன்ற தாமரை இலையொன்று பெடையன்றிலுக்குத் தெரியாதபடி சிறிது மறைத்து விட்டதாம், அதைத் தாங்கிக் கொள்ள முடியாத பெடையன்றில் பெருந்துயர் கொண்டதாம், பெரிய குரலெடுத்து அழுது புலம்பிற்றும்! இவ்வாறு சாகுந்தலத்தில் (அங்கம்-4) குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாகப் பறவை இனங்களெல்லாம் பகலில்தான் இரை தேடுகின்றன. இன்பம் துய்க்கின்றன. இரவு வந்ததும் தத்தம் கூடுகளுக்குச் சென்று அடைந்து விடுகின்றன. ஆனல் அன்றிற் பறவைகள் பகல் முழுவதும் இரை தேடுகின்றன பனிமலர்க் குளங்களில் உலவித்திரிகின்றன. இரவு வந்ததும் பனைமரங்களில் கட்டியிருக்கும் தத்தம் கூடுகளுக்குச் செல்கின்றன. இந்த உலக மக்களைப் போல் இரவு நேரத்திலேயே இன்பம் துய்க்கின்றன. இந்தப் புதுமையான வாழ்க்கையை இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன என்று பார்ப்போம்.

ஊர் ஒலி எல்லாம் அடங்கி விட்டது. ஊர்ப் பொது மன்றத்தில் ஓங்கி வளர்ந்து நின்ற பனைமரமும் சலசலப்புக் காட்டவில்லை. அதில் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த பேயும் அடங்கி இருந்தது.

நள்ளிரவில் எழும் சில் வண்டுகளின் ஒலி மட்டும் 'ஙொய்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்தப்பனைமடலில் கூடு கட்டி வாழ்ந்து கொண்டிருந்த பெடையன்றில் தன் சேவலன்றிலோடு இணைந்தது. இன்பம் துய்த்தது. இத்யம் களித்தது. அதன் அடையாளமாக ஒருவித இன்பஒலி எழுப்பிற்று.

'அந்தச் சுவைப் பாடல் ...

ஒலியவிந் தடங்கி யாம
நள்ளென
தொன்று உறைகடவுள்
சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வாங்கு
மடற் குடம்பைத்
துணைபுணர் அன்றில் உயவுக்
குரல் கேட்டொறும்'
[நற்றிணை: 303]

ஓர் வளைந்த பனைமடலில் ஆணன்றிலும் பெடையன்றிலும் அருகருகே அமர்ந்திருந்தன. அவைகளுடைய கண்கள் அடிக்கடி கவ்விப் பிரிந்தன. காதல் வெறி பொங்கிற்று. கால்களைப் பெயர்த்துப் பெயர்த்து அப்பக்கமும் இப்பக்கமுமாக நகர்ந்தன. இரண்டும் இடைவெளி யற்று நெறுங்கிய பொழுது ஆணன்றில் தன் அலகால் பெடையன்றிலைச் சீண்டியது. சிற்றின்ப வெறியைத் தூண்டியது. பெடை பெண்மை பொங்கிக் கிறங்கிய பொழுது ஆண் தன் அலகைப் பெடையின் வாய்க்குள் நுழைத்தது. பாலொடு தேன் கலந்தால் ஆகும் சுவைச் சாற்றைப் பருகிக் களித்தன இரண்டும்.

இதை ஒரு காதல் தலைவன் பார்த்தான் உடனே தன் அருகிலிருந்த காதல் தலைவியைப் பார்த்தான். பிறகு அன்றிலையும் காதலியையும் மாறி மாறிப் பார்த்துக் கலங்கினான். காதல் வெறி தலைக்கேறினான். அந்தக் காதல் தலைவனின் காதலி இந்த இன்ப ரகசியத்தை யாருமில்லாத பொழுது தன் ஆருயிர்த் தோழியிடம் கூறுகிறாள்.

அந்தச் சுவைப் பாடல்......

'எனைப் பார்ப்பர், அன்றில்
அலகொடு அலகுற்று
இடுங்கலவிதனைப் பார்ப்பர்''

[மதுரைக் கோவை]

நம் மனித இனத்தில் ஒரு சில நல்ல குடும்பங்கள் உண்டு. கணவன் வெளியே சென்றிருந்தால் அவன் வரும்வரை வழிமேல் விழி வைத்து வாசலிலேயே அந்த இல்லத் தலைவி நின்றிருப்பாள். அதுவே இரவு நேரமாக இருந்தால் விளக்கை ஏற்றி வைத்து விட்டு விடிய விடிய விழித்துக் கொண்டிருப்பாள். இந்தப் பழக்கம் அன்றிற் பறவையின் இனத்திலும் இருந்தது.

வீட்டுக்கு அருகில் ஒரு பனைமரம் அதில் இரண்டு அன்றிற் பறவைகள் கூடு கட்டிக் குடித்தனம் நடத்தின. ஒரு நாள் இரவு ஆணன்றில் எங்கோ சென்று விட்டது. தனித்திருந்த பெடையன்றில் இருண்ட வானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தது. அந்த இரவு முழுவதும் உறங்காது உட்கார்ந்திருந்தது.

அந்தச் சுவைப் பாடல் ...

''மனைசேர் பெண்ணை
மடிவாய் அன்றில்
துணை யொன்று
பிரியினும் துஞ்சா''

[அகம் : பாடல் : 50]

ஒரு பனைமரத்தில் ஆணன்றிலும் பெடையன்றிலும் முள்ளால் கூடு கட்டி முதிர்ந்த காதல் வாழ்க்கை நடத்தின. ஒருநாள் இரவு சேவலன்றில் தன்சிறுகரும்பேடையைச் சேராது எங்கோ சென்று விட்டது மனிதர் இனத்தில் பரத்தையர்ப் பிரிவு இருந்தது போல் அன்றில் இனத்திலும் இருந்ததோ என்னவோ? கரிய சிறிய பெடையன்றில் மட்டும் தனித்திருந்தது. தனிமைத் துயர் அதை வாட்டியது. அதைத் தாங்கிக் கொள்ள முடியாத பெடையன்றில் நிமிடத்திற்கு ஒரு முறை நெடுமூச்சு விட்டது. நெளிந்து நெளிந்து வேதனைப் பட்டது. இரவு முழுவதும் இவ்வாறே உழன்றது. இரண்டு விழிகளும் உறங்காதே சுழன்றது.

அந்தச் சுவைப் பாடல் ...

''கடவுள் மரத்த
முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச்
சிறுகரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்''

[அகம் : பாடல் :270]

ஊர்ப் பொது மன்றத்தில் ஒரு பனைமரம். அதன் ஓலைமடலில் ஓர் பெடையன்றில் மட்டும் தனித்திருந்தது. அதனுடைய கண்கள் கலங்கி இருந்தன. முகம் வாடி இருந்தது. அது தன்னுடைய வளைந்த வாயைப் பிளந்து பிளந்து அவலம் ததும்பக் கூவிக் கொண்டே இருந்தது.

அதை ஒரு இளம்பெண் பார்த்தாள். அவளுடைய முகமும் வாடி இருந்தது. கண்கள் கலங்கி இருந்தன. கூந்தல் கலைந்து இருந்தது. குமிழம்பூ மூக்குச் சிவந்து இருந்தது. அவள் அந்த அன்றிலைப் பார்த்துக் கேட்டாள் ...

''ஊர் மன்றத்தில் ஓங்கி வளர்ந்த பனைமடலில் அமர்ந்திருக்கும் பெடையன்றிலே ! நீ ஏன் அழுதபடி கூவிக்கொண்டே இருக்கிறாய்? என்னுடைய காதலர் என்னை இந்தக் கொடிய கோலத்திற்கு உள்ளாக்கி விட்டுப் பிரிந்து சென்று விட்டாரே ... அந்தக் கொடுமையை நினைத்து இவ்வாறு அழுது கூவுகிறாயா? அல்லது ... என்னைப் போல நீயும் உன் துணையைப் பிரிந்ததால் இவ்வாறு அழுது கூவுகிறாயா?'' என்று.

அந்தச் சுவைப் பாடல் ...

''மன்றிரும் பெண்ணை
மடல் சேர் அன்றில்!
நன்று அறை கொன்றனர்
அவர் எனக் கலங்கிய
என்துயர் அறிந்தனை நரறியோ?
எம்போல
இன்துணைப் பிரிந்தாரை
யுடையை யோநீ?

(நெய்தற்கலி: பாடல்: 129)

அன்றில் பறவைகள் தம் உணவு வகையில் சைவமாகவும் அசைவமாகவும் (Vegetarian and non-vegetarian) இருந்தன. நீர்நிலைகளில் திரியும் பொழுது மீன்களை உண்டன. வயற்புறங்களில் அலையும் பொழுது நெற்கதிர்களைத் தின்றன.

ஒரு பெடையன்றில் கருவுற்றது காலம் வளர்ந்தது. அதன் கருவும் வளர்ந்து. அது தலைச்சூல் ஆனதால் அதன் தளதளத்த மேனியின் உறுப்புக்களெல்லாம் தளர்ந்தன.

எனவே நீண்ட தூரத்திலுள்ள நெய்தல் நிலத்திற்குச் செல்ல முடியவில்லை. வாய்க்கு உருசியான மீன்களைத் தேடிச் சுவைக்க முடியவில்லை. அருகிலே உள்ள வயற்புறத்திற்குச் சென்றது. அங்கு அரிந்து கிடந்த நெற்கதிர்களைத் தின்றது. பசி குறைந்ததும் பறந்து வந்து தன் கூட்டில் அமர்ந்தது. அதற்குச் சுவைமீன் தேடச் சென்ற சேவலன்றில் இன்னும் வரவில்லை பொழுதோ சாய்ந்து கொண்டிருந்து பெடையன்றிலுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பெருங்கவலை கொண்டது. பிரிந்து சென்றிருக்கும் தன் சேவலை நினைத்துச் சோக கீதம் இசைத்தது.

அந்தச் சுவைப் பாடல்......

: அன்றில் பேடை அரிக்குரல்
அழைஇச்
சென்றுவீழ் பொழுது
சேவற்கு இசைப்ப''

(மணிமேகலை: 5:127-8)

இன்னொரு பெடையன்றில் அதற்கும் தலைச்சூல். அதனால் தலைச்சுற்றல், மயக்கம், எனவே தன் சேவலோடு சேய்மையிலுள்ள நெய்தலங் கானலுக்குப் பறந்து செலல முடியவில்லை. நிலைமையை உணர்ந்த சேவலன்றில் தன்சின்ன அலகால் பெடையை வருடிற்று. ''வருந்தாதே அன்பே! வாய்க்கு ருசியான மீன் கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டுக் கடலை நோக்கி விரைந்தது. அது சென்ற சிறிது நேரத்தில் பெடையன்றிலுக்குப்பசி வயிற்றைக் கிள்ளிற்று. அதைத் தாங்க முடியாத நிலையில அருகிலுள்ள வயலுக்குப் பெடையன்றில பறந்தது. கதிர்கள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. தன் கனத்த வயிற்றைத் தூக்கிக் கொண்டு அன்றிலால் அசையும் கதிர்களைக் கொத்த முடியவில்லை. எனவே அருகில் இருந்த தாழை மடலில் தள்ளாடி அமர்ந்தது. இதை அந்தத் தாழையின் மேல் மடலில அமர்ந்திருந்த ஒரு நாரை பார்த்தது. முதுமையும் முடை நாற்றமும் உடைய அது ஒருபெண் நாரை. பறவைகள் சினையுற்றால் எவ்வுளவு பெரிய துன்பத்தைத் தாங்க வேண்டும் என்பது அதற்கும் தெரியுமல்லவா? பெண் நாரையாயிற்றே? அதுவும் முதுமையான நாரை யாயிற்றே? பல பிரசவங்களை அதுவும் பார்த்திருக்கு மல்லவா? எனவே, தள்ளாடி வந்தமரும் சினையன்றிலைப் பார்த்ததும் முது நாரைக்கு இரக்கம் சுரந்தது. உடனே தன் வாயிலிருந்த மீனை அதற்குக் கொடுத்தது.

அந்தச் சுவைப் பாடல்.........

,,இரைவேட்டுக் ....
கடுஞ்சூல் வயவொடு
கானல் எய்தாது
கழனி யொழிந்த கொடு
வாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்
மீன் ஒய்யும்''

[நற்றிணை : 263]

இது வரை சுவைத்த பாடல்களிலிருந்து நமக்குத் தெரிபவை :- அன்றில் பறவைகள் ஊர்ப் பொது மன்றங்களிலுள்ள பனை மரங்களில் கூடு கட்டி வாழும். அவைகள் பகற்பொழுது முழுவதும் நீர்நிலைகளில் திரியும். நீர்ப் பூக்களில் விளையாடும் ஒரு நிமிடம் கூட ஒன்றை விட்டு ஒன்று பிரியாது : மாலை யானதும் மன்றப் பனைக்குச் சென்று தம் கூட்டில் தங்கும். மாந்தரைப் போல

இரவில் இன்பம் துய்க்கும் பெடையை விட்டுச் சேவல் பிரிந்தால் பெடை அந்தப்பிரிவுத்துயரை தாங்கிக் கொள்ளாது. ஒரு நொடிப் பிரிவை ஓராண்டுப் பிரிவாகக் கருதிப் பெருந் துயர் கொள்ளும். இரவுக் காலங்களில் சேவல் விட்டுச் சென்று விட்டால் பெடை கண் துஞ்சாது. கருவானத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கும் கடுந்துயர் எய்தி உழன்று கொண்டே இருக்கும். கண்ணனைய சேவலை நினைத்து அழுகுரல் எழுப்பும். அவலப் பாட்டிசைக்கும்.

இவ்வாறு அன்றிற் பறவைகளின் வாழ்க்கை மாந்தர் வாழ்க்கையை விடஅன்புடையதாகவும், சிறப்புடைய தாகவும், கழிபெருங் காதலுடைய தாகவும் இருப்பதாலேயே, மணமக்களை வாழ்த்தும் பொழுது ''அன்றிற் பறவையைப் போல் வாழ்க'' என்று வாழ்த்துகிறோம். இப்பொழுது அந்த வாழ்த்து மொழியின் பொருள் புரிந்திருக்கும் இனிஎன்றென்றும் அப்படியே வாழ்த்துவோமாக.

கருப்பன்: நீங்க எந்த பஸ்சுக்குப் போக வேண்டும்?

சுப்பன்: 1ஆம் நம்பர் பஸ்ஸில்! நீங்கள்?

கருப்பன்: 2ஆம் நம்பர் பஸ்ஸில்!

சுப்பன்: அப்படீன்னா வாங்க 12ஆம் நம்பர் பஸ்ஸிலே ஒண்ணாவே போயிடுவோம்!

தேவி

குழந்தைச் செய்திகள்

சுவீடனிலுள்ள குழந்தைகளைக் காப்பாற்றும் சம்மேளன ஆதரவில் ஒரு கருத்தரங்கு நடை பெற்றது. அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் எடுக்கப் பட்டன:-

1) பள்ளிகளிலும், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களிலும் பிரம்பால் குழந்தைகளை அடிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

2) அரசியல் வன் முறைகளில் குழந்தைகள் ஈடுபடுத்தப் படுவதை நிறுத்த வேண்டும்.

3) குடும்பத்தில் குழந்தைகள் கொடுமைப் படுத்தப் படுவதைக் தடுக்க வேண்டும்.

நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்கப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்படி உலக நாடுகளை ஐ. நா வற்புறுத்த வேண்டும்.

உலகிலுள்ள 14 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் அனைவரும், ஒருவர் தோளின் மேல் ஒருவர் நின்றால், பூமியிலிருந்து சந்திரனுக்குள்ள தூரத்தைப் போல் 3 மடங்கு உயரமுள்ள தூணாக நிற்பர்.

உலகின் 1 கோடி அகதிகளில் பாதிப்பேர் குழந்தைகள்.

ஒரு குழந்தையின்

சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டான இந்த ஆண்டில், எங்களுக் கென மலர்ந்துள்ள இம்மலரில் எங்களது எண்ணங்களை ஈரைந்து மாதம் சுமந்து நாங்கள் இத்திரு மண்ணிலே அவதரிக்கப் போராடிய, எங்களது அன்புத்தெய்வங்களாம் பெற்றோர்கட்கு தெரிவிப்பதை எங்கள் கடமையென எண்ணுகிறோம்.

தாயின் வயிற்றிலேயிருந்து நாங்க வெளிலெ வந்த ஒதனே நாங்க அழறது எங்கள் குதல் வளத்தை உங்களுக்கு காட்டணும்னுட்டு அல்ல; ஏகப்பத்த சந்தோசத்தாலே தான் நாங்க ஆனந்தக் கண்ணீர் விடறோம். அதுலேந்து எங்களோட எண்ணங்களைப் புரிஞ்சுக்காமெ நீங்கபாத்துக்கு என்னதான்னு, கொயந்தீன்னு, இப்பிதித்தான் இருக்கோணும்னு ஒரு வரை முறையை வெச்சுகித்து எங்களெ ப்பதாத பாது பதுத்துரீங்கோ; நாங்க அழுதா போத்து குலுக்கோ குலுக்குன்னு குலுக்கறீங்கோ.

கொஞ்சம் பெரிசான வுடனே வெளிலே எடுத்துகிட்டு போனீங்கன்னு ஆசையா வேடிக்கை பார்க்கலா முன்னு அதுக்கு விடாமெ, தலைமேலே துண்டைப் போட்டு மூடி விடறீங்கோ நாங்கள் பேச முடியாத நிலையிலும் கையால் அதைத் தள்ளி விட்டாலும் மறுபடியும் போர்த்தி விடுறீங்கோ. அப்புறமா ஒருவயசான பிற்பாடு, நாங்க ஓடியாடித் திரியறதைப் பார்த்து எங்களுக்குப் புரியாதுன்னு நீங்க, "பாருங்க இந்தக் கொழந்தை என்னமா கஷ்டமே கொஞ்சங் கூட தெரியாமெ வெளையாடுது" அப்படீன்னு சொல்றது எங்களுக்குப் புரியாமலா இருக்குது, இன்னும் கொஞ்சம் வயசாயிட்டா, இம்மாதிரி வெளயாட் முடியாதுன்னு தான் இப்பவே வெளயாண்டுக்கிறோம்.

அப்புறம் இந்த 'டாடா' சொல்றது எங்களுக்கு பிடிக்கறதே இல்லே. அஞ்சு, ஆறு மாசத்திலேந்து 'கண்ணு டாடா சொல்லுன்னு' சொல்றது. சொல்லாமெப்போனு கட்டாயப்படுத்தி சொல்ல வெக்கறது. அப்படிச் சொன்

அங்கலாய்ப்பு...!

— நந்தனன் —

ணுத்தான் நாங்க சமர்த்தா? ஆனுல் வீட்டுக்கு வந்தவங்களை வரவேண்டாம் என்பது போல் கையசைப்பது எங்களுக்குப் பிடிக்கல்லே. நேரா நேரம் எங்களுக்குப் பசிக்கிறதோ இல்லியோ, தவருமெ வயத்தெ றொப்பிடறீங்க, ராத்திரி புழுக்கத்திலே சட்டெயில்லாமெ இருந்தா குளிராக இருக்குது வாடைக் காத்து ஒடம்புக்கு ஆகாதுன்னு நீங்களா ஏதோ சொல்லி எங்களை ரெண்டுமூனு சட்டைக்குள்ளே துணிச்சுட றீங்க.

எங்காவது வெளிலே தெரிந்தவர் வீட்டுக்கு உங்களுடன் வந்து, அவர்கள் வீட்டிலும் ஏதேனும் விளையாட்டு பொருள்கள் இருந்து நாங்கள் அதை ஆசையாய் பார்ப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு ''எங்க கொழந்தைக்கு அதெல்லாம் பிடிக்காது, இல்லையா கண்ணு'' என அவர்களிடம் கூறி, எங்களைப் பரிதாபமாய் பார்க்கும் போது, நாங்கள் என்ன செய்வது? மற்றவர்கள் எதிரில் உங்கள் வார்த்தை பொய்க்கக் கூடாதே என்ற பெருந்தன்மையால், நீங்கள் எதிர் பார்த்தபடியே நடந்துகொள்வதை நீங்கள் அறிவீர்களா?

வீட்டில் விளையாட வேண்டிய வயதில் என் பிள்ளை நர்ஸரியில் படிக்கிறது' என்று மற்றவர்களிடம் பெருமைக்காக கூறுவதற்காகவே திட்டம் போட்டு, எங்களை நர்ஸரியில் சேர்த்து விடுகின்றீர்கள். ஸ்கூல் அருகிலிருந்தால் எங்கள்கையைப்பிடித்து அழைத்துச் செல்வதைப் பெருமையாகவும், தொலைவிலிருந்தால் பஸ் ஸ்டாப் வரை வந்து வழியனுப்புவதுடன் பக்கத்து வீட்டிலிருப்பவர்களிடம் பெருமையாய் பேசிப் பேசி மாய்ந்து போவதையும் எண்ணிஎங்களில் உங்களுக்கு கிடைக்கும் பெருமையைக் கண்டு நாங்களும் மகிழ்கிறோம். ஆனுல், அதே சமயத்தில் ஒரு ஐஸ் கேட்டால், வாங்கித் தரமாட்டேன் என்கிறீர்களே. அதற்கு உங்களுக்கு ஐஸ் வைத்து நாங்கள் வாங்க வேண்டியிருக்கிறதே!

நர்ஸரி என்ருலே மிஸ் போனவுடனே 'Good Morning' சொல்ரு; நாங்களும் சொல்ரோம் அப்புறமா அவ அறுக்க ஆரம்பிச்சுர்ரு. பேசாமெ வீட்டிலேயே இன்னும் கொஞ்ச நேரம் விளையாடுவோமே. இந்த வருஷமாவது எங்களது எண்ணங்களைப் புரிந்துகொள்வீர்களா?

பூங்கோதை இலக்கிய வட்டம்.

பூங்கோதை இலக்கிய வட்டம் என்ற அமைப்பினைப் புதிதாகத் தொடங்கியுள்ளோம். இவ்வமைப்பு **'பூங்கோதை'** வளர்ச்சிக்குப் பாடுபடுவதோடு கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மண்டபம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தித் தமிழுக்குப் பாடுபடும், புதுக் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் அறிமுகம் செய்யும். இந்த அமைப்பின் நிகழ்ச்சிகளும், நிகழ்ச்சிகளின் சாரங்களும் திங்கள் தோறும் 'பூங்கோதையில் வெளியிடப்படும். இம்மாதப் பூங்கோதையில் நீலகிரி மாவட்ட அமைப்பு அறிமுகம் செய்யப்படுகிறது.

"பூங்கோதை இலக்கிய வட்டம்"

காட்டேரி நீலகிரி மாவட்டம்.

தலைவர்கள் :-

திரு. சென்னப்ப ஸ்வாமி—காட்டேரி.
,, லிங்கப்பஸ்வாமி—தூராட்டி.
திரு. L. N சென்னையா ஓரநள்ளி.
,, M N. ஹாலையா—ஓரநள்ளி

செயலர்கள் :-

தேவராஜ் L. போஜன்
அமைப்புச் செயலர்: ஜே. பி. ஹாலையா.
பொருளாளர் G. ஜோகி. – காட்டேரி.

உறுப்பினர்கள்

1. J. B. ஹாலையா, ஓரநள்ளி.
2. ஜோசப் Msc. காட்டேரி.
3. H. சென்னப்பஸ்வாமி ,,
4. லிங்கப்பஸ்வாமி, தூராட்டி.
5. L போஜன் காட்டேரி.
6. L. தேவராஜ் காட்டேரி
7. J. தர்மலிங்கம் காட்டேரி.
8. B ஈஸ்வரன் மேலூர்
9. J. வின்சன்ட் CD அருவங்காடு
10. பெள்ளி கவுடர், சோகத்துரை.
11. M. R. முனுசாமி. கேத்திபாலாடா
12. சிவசரவணன், சக்கலட்டி
13. H. லோகிதாஸ் காட்டேரி
14. N. கிருஷ்ணமூர்த்தி காட்டேரி

விந்தையில்லை

எண்ணக்
காமிராவுக்குள்
உன்
வண்ணி
உயிர்ப்படத்தை
என்றைக்கோ
பிடித்துவிட்டேன் !
அதை ....
இப்பொழுது ....
இதயப்
பர்சுக்குள்
இங்கிதமாய்ச்
செறுகிவிட்டேன்!
நினைவுக் கரங்களால்
தீண்டும் பொழுதெல்லாம்
கசங்குவதற்குப்
பதிலாக
புதுமையாகத்
தெரிகிறது!
மிளிர்கிறது! விந்தையில்லை?!

ரதிமோஹ

அப்பா : ஏண்டா விளக்கெண்ணை குடிச்ச மாதிரி இருக்க உனக்கு என்ன ஆச்சு?

மகன் : ஒண்ணுமில்லே அப்பா . இப்பதான் அம்மா குடுத்த காபியை குடிச்சேன்!

பத்திரிகை ஆசிரியர் : (கோபத்துடன்) உன் 'ஜோக்'கை எந்த மடையன் பத்திரிகையில் போடுவான் ஜோக்கா அது?

ஜோக்' எழுதியவர் :
. 10 வருடங்களுக்கு முன்பு எப்படி, இதேஜோக்கை' உங்களோட பத்திரிகையில் போட்டீங்க?

பொதிகைப்



பூவரசி...!

ஆயிழை கணபதி

அழகிய பாண்டியருக்குக் குழப்பம் மட்டுமல்ல அந்த இளங்காளை யார் என்பதைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வமும் மேலிட்டது. அஃதோடு அவனுடைய இசைப் பயிற்சிக்கு எந்த வித இடையூறையும் விளைவித்து விடக்கூடாது என்ற பண்பாடும் எழுந்தது. உடன் அழகிய பாண்டியர் அரவம் ஏதுமின்றி அந்த ஆண்மகனை அணுகினார். நெருக்கமாக வந்தபொழுது அவர் மேலும் திடுக்கிட்டார்.

''இது என்ன விந்தை? திதியன் இங்கே எப்படி வந்தான்? எப்பொழுது வந்தான்? ஒரு வேளை நான் புறப்பட்டு வந்த பின்னர் துயிலுணர்ந்து எழுந்து நேராக இங்கு வந்திருப்பானோ? அதுவும் எப்படி இயலும்? நான் எழுந்து வந்ததே இந்த யாழொலியைக் கேட்டுத்தானே? நான் எழுந்து வரும்பொழுது திதியன் என் அருகில் உறங்கிக் கொண்டு இருந்தானே? பின்னர் எப்படித் திதியன் இங்கே வந்திருக்க முடியும்? திதியன் இங்கே வரமுடியாது என்றால் பின்னர் எப்படி இங்கு வந்து இப்பொழுது அமர்ந்திருக்கிறான் ஒருவேளை மோகினிப் பேயாக இருக்குமோ? அல்லது, நான் வரும்பொழுது கேட்டுக் கொண்டிருந்த யாழொலி இவன் இங்கு வந்து யாழ் இசைக்கத் தொடங்கிய பொழுது நின்று போயிருக்குமோ?''

அழகிய பாண்டியருக்குக் குழப்பம் மிகுந்ததே தவிர விடைகிடைக்கவில்லை. எனவே சரியான விடையைக்கண்டு பிடிக்கத் திதியன் அருகில் வந்து நின்று, ''என்ன திதியா? நான் யாழ் மீட்டச் சொன்ன பொழுது, விரல்களெல்லாம் சோர்ந்திருக்கின்றன என்றும், யாழ் மீட்ட இயலாது என்றும் கூறினாயே, இப்பொழுது இந்தப் பனி இரவில் வந்து யாழ் மீட்டிக்கொண்டிருக்கிறாயே?'' என்று கேட்க வாய் எடுத்து, அவனுடைய முதுகில் இலேசாகத் தட்டினார். அவ்வளவுதான்! அடுத்த கணம் 'வீல்' என்று கத்திய ஒலி கேட்டுத் திடுக்கிட்டு நிலைகுலைந்தார். ஏனென்றால் வீல் என்று கத்திய குரல் ஒரு பெண்ணின் குரல்.

அந்தக் குரலைக் கேட்டு ஒரு கணம் நிலைகுலைந்து தடுமாறிய அழகிய பாண்டியர் அடுத்தகணமே தன்னை நிதானித்துக் கொண்டு, உண்மையிலேயே அது மோகினிப் பேய்தானா என்று உற்று நோக்கினார். அப்பொழுது அந்த மோகினி நாணிக் கோணித் தலை கவிழ்ந்து தரைபார்த்து நின்றாள். அழகிய பாண்டியர்க்கு உண்மை விடை கிடைத்து விட்டது. அந்த ஆணுடைக்குள் மறைந்திருப்பது திதியனின் தங்கை பூவரசிஅன்னம் தான் என்பதும், அவள் அணிந்திருக்கும் ஆடைகூட அன்றுதான்

தவக் குகைக்குள் கொடுத்துதவிய அதே ஆடைதான் என்பதும் தெற்றெனத் தெரிந்து விட்டது!

உடன் அழகிய பாண்டியருக்கு உவகை பெருக்கெடுத்து ஓடியது. அவர் உடலில் கூட ஏதோ இனம் புரியாத ஒரு நடுக்கம் வந்து குடி புகுந்தது. பலமுறை பேச முயன்றும் கூட அது இயலாமலேயே போயிற்று. சங்கம் ஏறிப்பாடும் புலமை இருந்தும்கூட, பூவரசியோடு பேசுவதற்கு ஏற்ற வார்த்தைகள் அப்பொழுது தெரியாமலேயே போயின. இறுதியில் எப்படியோ பெருமுயற்சி செய்து பூ... வர..சி!'' என்று உளறிவிட்டார்!

அந்த உளறலைக் கேட்டுப் பெரிதாக நகைக்க வேண்டும் என்று எண்ணிய பூவரசிக்கும் அது இயலாதே போயிற்று, என்றாலும் மின்னலைப் போன்று தன் பல்வரிசைகளை ஒரு முறை காட்டி விட்டு நாணியபடியே நின்றாள். அவளுடைய உடலிலும் அந்த மாய நடுக்கம் வந்து புகுந்து அவளை ஆட்டிக் கொண்டிருந்தது. அவள் தான் அணிந்திருந்த ஆணுடையைப் பிசைந்து பிசைந்து தன் வியர்வையால் துவைத்துக்கொண்டிருந்தாள் ஒரு சிரிப்பை உதிர்த்தே அழகிய பாண்டியரை உண்மையை உளரும்படி செய்து விடுகிறேன் என்று சூளுரைத்ததைக் கூட அப்பொழுது செயல் படுத்த முடியாது செயலற்று நின்றாள். இறுதியில் அழகியபாண்டியர் தான் எப்படியோ தன் நடுக்கம் தீர்ந்து, உளறல் குளறல்களும் தீர்ந்து மெதுவாகப் பேச்செடுத்தார்... ..

''பூவரசி! திதியன் என்று நினைத்து உன் முதுகில் தட்டி விட்டேன்!''

பூவரசி வாய் திறக்கவில்லை.

''ஆனால் அதற்குத் தண்டனையை நீ வேறு விதமாக வழங்கி இருக்கலாம்! அடிக்கின்ற கைதானே பின்னர் அணைக்கப் போகிறது என்று பெருமையோடு எண்ணி அதற்கொரு 'முத்த' ஆரத்தையே வழங்கி இருக்கலாம்! அல்லது கொடுந் தண்டனையாகத் தான் கொடுக்கவேண்டும் என்றாலுங்கூட எத்தனையோவழிகள்இருக்கின்றன அவைகளை எல்லாம் விட்டு விட்டு இந்த யாமவேளையில் இப்படி வீறிட்டுக் கத்தி என்னை விதிர் விதிர்க்கச் செய்திருக்கவேண்டாம்'

பூவரசி பதிலுரைக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை

நானும் எத்தனையோ களிறுகளின் பிளிறல் ஒலிகளைக் களங்களிலும் களிற்றுக் கூடங்களிலும்

❂ ❂ ❂

காதலன் :

கண் மணி ! உனக்கு
என்ன வேண்டும் சொல்!
மணலைக் கயிராகத்
திரிக்கவா? வானத்
தை வில்லாக
வளைக்கவா?

காதலி : அதெல்லாம் ஒன்றும்
வேண்டாம் !
எனக்கொரு
இன்லேண்ட் கவர்
கொடுங்கள்
அதுபோதும்.!

கேட்டிருக்கிறேன். ஆனால் இப்படி யொரு பிளிறல் ஒலியை நான் கேட்டதே இல்லை!',

பூவரசியால் பொறுக்க முடிய வில்லை. ரோசத்தோடு பேசினாள். ''அவ்வளவும் பொய், அதியனைக் களம் வென்ற தங்களுக்குத் திதிய லின் தங்கையிட்ட 'அபயக்குரல்' உங்களை அச்சுறுத்தி இருக்கக் கூடும் என்று நான் நம்பவில்லை!''

''அபயக் குரலா?'' அழகிய பாண்டியர் இடைமறித்தார்.

''ஏன்? அதில் உங்களுக்கு ஐய மா? யாருமற்ற தனி இடத்தில், அதுவும் யாம வேளையில் ஒரு பெண் தனித்து யாழ் மீட்டிக் கொண்டி ருக்கும்பொழுது. அவளுடைய முது கில் திடீரென ஒரு கை தட்டினால், 'அச்சக்குரலோ, அபயக்குரலோ' எழாமல் வேறு என்ன குரல் எழ முடியும்?''

'நிலைமை அது!என்றால் அக்குரல் கள் தான் எழும்! ஆனால் இங்கு நிலைமை அது இல்லையே? இந்த அழகியபாண்டியர் யார்? இவரும் இளம்பரிதியும் ஒருவர்தானா? ஒரு வர் என்றால் அன்று ஏன் இளம் பரிதி என்று பொய் மொழிந்தார்? நம் காதலை அன்று ஏற்றுக் கொண் டாரா அல்லது புறக்கணித்து விட் டாரா? ஏற்றுக் கொண்டிருந்தால் அவர் பாடிய அகத்துறைப் பாடலை நாம் யாழில் மீட்டும் பொழுது நிச்சயமாக அதைக் கேட்டு ஓடி வருவார்! இங்கு வந்த பிறகு தன்னை அவர் கொடுத்த ஆணுடை யில் காணும் பொழுது அன்னமும் பூவரசியும் ஒருத்தி தான் என்று அடையாளம் கண்டு கொள்வார்! உடன் காதல் மழை பொழிவார்! கட்டாணி முத்தங்களை விதைப் பார்!' என்றெல்லாம் கணக்குப் போட்டு இங்கு வந்து எனது வரு கைக்காகவே காத்திருந்தவளாயிற் றே? பின்னர் எப்படி அச்சக் குர லும் அபயக் குரலும் எழ முடியும்?'

தன் குட்டு வெட்ட வெளிச்சமாக உடைக்கப்பட்டு விட்டதைக் கண்ட பூவரசி பெரிதாக நாணினாள். என் றாலும் தன் சூழ்ச்சி பலித்து விட்ட தைக் கண்டு பெருமிதப் புன்சிரிப் பும் கொண்டாள். அதையும் ஒரு நொடியில் மறைத்துக் கொண்டு மிக அடக்கத் தோடு, '' அரசே! எனது காதலர் இரண்டு பெயர் களில், இரண்டு வேடங்களில் உல விய பொழுது, அவர் யார் என்று நான் அறிய முயன்றது தவறா அர சே? தவறு என்றால் என்னை மன் னித்து விடுங்கள்!'' என்று உருக் கமாகக் கூறி அழகிய பாண்டியரின் அடிகளுக்குக் கீழ் அமர்ந்து அவரு டைய திருவடிகளைத் தொட்டாள்.

அழகிய பாண்டியர் அவளைத் தொட்டுத் தூக்கி, ''தவறில்லை பூவரசி! காதல் மணம் மிகுந்த இந்தக் காலத்தில் பெண்கள் மிக வும் எச்சரிக்கையாக இருப்பது முற் றிலும் சரியானது. ஆனால், நான் உன்னை வருத்தவேண்டும் அல்லது திகைக்க வைக்க வேண்டும் என்ப தற்காக எனது பெயரை மாற்றிக் கூறவில்லை! நமது காதல் வரம்பு கடந்து வளர்ந்து, பலனளிக்கும் தருவாயில் இருக்கும் எனது தவத் திற்கு ஊறு விளைவித்து விடக்கூடா து என்று அஞ்சியும், அது முடியும் வரை நம் காதலைச் சிறிது தள்ளி வைக்கவும் அந்தப் பொய்ப் பெய ரைக் கூறினேன்!'' என்று கூறிக் கொண்டே பூவரசியின் முகத்தை உற்று நோக்கினர்.

அப்பொழுது அவளுடைய முகம்

சிறிது வாடி இருந்தது. 'நானென்ன மேனகையா? விசுவாமித்திரர் தவத்தைக் கெடுத்தது போல் கெடுப்பதற்கு? என்று நினைத்தாள் போலும். அதை உணர்ந்து கொண்ட அழகியபாண்டியர் தன் அடுத்த காரணத்தைக் கூறினர், 'பூவரசி! நான் பொய்ப்பெயர் கூறியதற்கு இதுவும் ஒரு காரணம் தான் என்ருலும் அதற்கு முழுக்க முழுக்கத் தலையாய காரணம் வேருென்று இருக்கிறது! அது என்ன தெரியுமா? அன்று உன்னைத் தழையாடையோடு நான் கண்டதனல், இவள் சாதாரணக் குடிப் பெண்ணுக இருப்பாளோ என்று கருதி உன் பெயர் கேட்டேன். 'அன்னம் என்ருய். அதற்குமேல் நான் 'அழகியபாண்டியர்' என்று என் பெயரைக் கூறினல், 'அரசராயிற்றே' என்று மருண்டு தன் உள்ளத்தைக் கொடுக்காதே போய் விடுவாயோ என்று அஞ்சினேன். எப்படியும் உன்னை அடைந்தேயாக வேண்டும் என்று துணிந்தேன். எனவே 'இளம்பரிதி' என்றுபொய்ப் பெயர் கூறினேன்! உண்மைக் காரணம் இதுதான்!'' என்று கூறி மீண்டும் பூவரசியின் முகத்தை உற்று நோக்கினர்.

பூவரசிக்குப் பெருமை பிடிபடவில்லை. 'எனக்காக அல்லவா அரசர் தன் உண்மைப் பெயரையே மாற்றி வேறு பெயர் கூறி இருக்கிருர்!' என்று பெருமையோடு நினைத்து, 'நான்தான் மிகச்சிறிய காரணத்திற்காகப் பொய்ப் பெயர் கூறி விட்டேன்! என்று வருந்தி மன்னரிடம் அதை விளக்கினுள், ''அரசே! நான் உண்மைப் பெயரை மறைத்துப் பொய்ப் பெயர் கூறியதற்கு மிகப் பெருங் காரணங்கள் எதுவும் இல்லை. அப்பொழுது நீங்கள் எனக்கு அயலவராகவே இருந்தீர்கள். ஆபத்தில் உதவினீர்கள் என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த விதப் பிடிப்பும் இல்லாமல் இருந்தது. எனவே திடீரென வந்த ஒருவருக்கு உண்மைப் பெயரைக் கூறுவது முறையல்ல என்று கருதினேன். அஃதோடு பெண்மைக்கே உரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற அருங் குணங்களும் என் உண்மைப் பெயரைக் கூறவிடாது அப்பொழுது தடுத்து விட்டன! எனவேதான் பொய்ப் பெயரைக் கூறினேன். அது தவறு என்று இப்பொழுது உணர்கிறேன். ஏனென்ருல் உள்ளத்தையே கொடுத்து விட்டவளுக்கு உண்மைப் பெயரைக் கொடுப்பதால் என்ன பெரிய தீங்கு விழைந்து விடப் போகிறது? எனவே என்னை மன்னித்துவிடுங்கள் அரசே!'' என்று கூறி மீண்டும் அரசரின் அடிகளைத் தொடப் போனுள்.

25வது பக்கத்தின் 'அதுஎன்ன' என்ற வினவின் விடை:

1. கைக்குட்டை.
2. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு
3. வாழை மரம்
4. திரிகைக்கல்
5. கழுதை
6. வாத்து
7. காமாலை
8. பெருக்கினல்

--தேவி—

அப்பொழுதும் அழகிய பாண்டியர் அவளைத் தடுத்து நிறுத்தி, ''பூவரசி! ஆடிக் காற்றுக்கு ஆழவே ரோடிய ஆலமரங்கள் வீழ்வதும் அழகு கொப்பளிக்க வரும் ஆண் மக்களுக்கு அணங்குகளின் உள்ளம் சாய்வதும் உலகில் இயற்கை. அதை அறிவுக் கூர்மையோடு காத்துக் கொள்ள நினைப்பதும், அழியாமல் அது நிலைத்து வாழ ஆவன செய்வதும் பாராட்டக் கூடிய ஒன்று! எனவே வாழ்க்கைப் பாதையில் அடிகளை அளந்து வைக்கின்ற உனது செயல்கள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன!'' என்று கூறினர்.

''செயல்கள் மட்டும்தானு?'' என்று பூவரசி ஆசையோடு குறுக்கிட்டாள். ''சுவை பிடிக்கிறது என்ருல், கனி பிடிக்காமலா போகும்?'' அழகியபாண்டியர் அவளை அள்ளி அணைத்தார். பூவரசி பூத்து உதிரும்பூவைப்போல் அவருடைய மார்பில் சாய்ந்தாள். அவளைத் தாங்கிக் கொண்டே அழகிய பாண்டியர் தேனருவிக்குப் போனுர். அங்கு அவளோடு திளைத்து விளையாடினுர் பாலாற்றுக்குப் போனுர். அங்கும் அவளோடு படிந்து படிந்து ஆடினுர். கனிச்சோலைக்கும் போனுர். கனிகளைக் கடித்துக் கடித்து அவளுக்குச் சுவைக்கக் கொடுத்தார். பூம்பொழிலுக்குப் போனுர். பூக்களால் அவளையும் தன்னையும் அலங்கரித்துக்கொண்டு வெளியில் வந்தார். பொழுது பூக்கப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறி விடிவெள்ளி வெளியில் வந்தது. அன்று தவம் நிறைவுறும் இறுதி நாள்! அழகிய பாண்டியர் பூவரசியை இழுத்துக் கொண்டு புயலாக ஓடினுர். 'தவம் என்ன ஆகுமோ?' என்ற அச்சம் அவ்வரைத் துரத்திக் கொண்டே ஓடியது!

தொடரும்.

குழந்தைச் செய்திகள்

தனது நாட்டில் மட்டுமல்ல, உலகின் ஒவ்வொரு மூலையிலும் குழந்தைகளின் நலத்திற்காகவும் இன்பத்திற்காகவும் உழைப்பதைப் போல பெருந்தகைமை உடையது வேறென்றும் இல்லை.

— — —

பிரசவத்திற்கு ஏற்ற நல்ல மாதங்கள் (ஆபத்துகள் அதிகமில்லாத) ஜனவரி- பிப்ரவரி. எனவே, ஏப்ரல்,மே,ஜுன் மாதங்களில் கருத்தரிப்பது நல்லது. கருச்சிதைவுகள் அதிக அளவில் நேரிடுவதுஜுன்,ஜுலை,ஆகஸ்டு இம்மாதங்களில் சூரியனுக்கு நெருக்கத்தில் பூமி வருவது கரு சிதைவுக்குக்காரணமாகஇருக்கலாம். (இச்செய்திகளை, கருப்பை இயல் நிபுணர் டாக்டர் பி. என். புரந்தரே தமது மருத்துவமனையின் 60 ஆண்டுகாலப் பதிவேட்டிலிருந்து நுணுகி ஆய்ந்து அறிவித்துள்ளார்.)

சித்திரையில் குழந்தை பிறந்தால் குடும்பம் சீரழிந்து விடும் என்பதும் ஆடி கருத்தரிக்கக் கூடாத மாதம் என்பதும் தமிழர்களின் நம்பிக்கை, அதனுல்தான் ''ஆடிக்கு அழைத்தல்'' என்ற சடங்கை ஏற்படுத்தி புதுமணமக்களைப் பிரித்து வைத்து விடுகிருர்கள்.

குறைந்த வயதுள்ள குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது. குழந்தையின் உடல் நலத்திற்கோ, கல்விக்கோ ஊறுவிளைவிக்கும் எந்த வேலையிலும் அல்லது அவனுடைய உடல், உள்ளம், அறநெறி வளர்ச்சியைத் தடுக்கும் எந்த வேலையிலும் குழந்தைகளை அமர்த்தக் கூடாது. பல குழந்தைகள் தம் பெற்றேருக்காக அல்லது கூலிக்காக வேலை செய்கிருர்கள்.

தமிழீழம் காண வாரீர்!

சிங்களவர் பேயாட்சி செந்தமிழர்
தலைசாய்த்தச் சீறும் கோரச்
சங்கதியை அறிவீரா? அறிந்து கொள்வீர்!
தமிழர்காள் சங்கெ டுப்பீர்!
பொங்கிவரும் பகைவரினம் புறமுதுகு
காட்டிடவே போர்தொ டுப்பீர்!
மங்காத தமிழ்ப்பெருமை மல்கிடவே
குரல்கொடுப்பீர்! மானம் காப்பீர்

குண்டடிக்குத் தமிழினத்தைப் பலியாக்கும்
சிங்களவர் கொட்டம் வீழ்த்த
தண்டமிழா துடித்தெழுவாய்! தாண்டா
விட்டாலும் தசையா டாவோ?
மண்மாறு பட்டாலும் மாத்தமிழின்
குருதியன்றோ? மலைப்ப தேனோ?
விண்முட்ட முழங்கியெழு! வீழ்த்திடுக!
தமிழரினை வீழ்த்து வோரை!

இனவுணர்வு இல்லாத பொம்மைகளா
நாமிங்கே? இல்லை! இல்லை!
மனம்சிறிது கொண்டுவிட்டால் மலைகூடக்
கடுகாகும்! மணல்மே டெங்கே?
புனல்பரந்த புவிவியக்க புதுவாழ்வு
கண்டுயர புயலாய்ச் சீறி
இனங்காக்க ஒருங்கிணைவீர்! இணையற்ற
தமிழீழம் இயற்ற வாரீர்!

கவிஞர் ஆவத்தி வெங்கடாச்சலம்—

யாரும் இல்லாத நேரம்:

இளமுருகன்

டக்......டக்......தனது குதி உயர்ந்த செருப்புகள் அதிர வீட்டை பூட்டி விட்டு அலுவலகத்திற்கு புறப்பட்டாள் 'ரீட்டா' அவளது கணவன் ஒரு எஞ்சினியர்.

'ஸ்ப்டெப்' செய்த தலையை கடைசியாக ஒரு முறை நீவிவிட்டு, டப்பாவில் இருந்த 'எமாமி'யை முகத்தில் ஒற்றிக் கொண்டு ...... நானும் அறையை பூட்டி விட்டு அலுவலகத்திற்கு புறப்பட்டேன்......

எனது நினைவுகள் ''ரீட்டாவை சுற்றியே வந்தன நல்ல அழகி (32—26 34 ...) கை நிறைய வருமானம் ...

இத்தனை நாட்களா அவளிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தேன் ... இன்று மாலை எப்படியாவது கேட்டுப் பார்த்து விட வேண்டும்.

மாலை 6 மணி துணிந்து அவளுடைய வீட்டிற்கு புறப் பட்டேன். கணவர் இன்னும் வீடு வரவில்லை. அப்பாடா ஒரள விற்கு வசதி... ஏதாவது சத்தம் போட்டு தெருவையே கூட்டி விட்டால் ... என்ன ஆனாலும் சரி துந்து ணிவிட்டேன்!. கேட் டு விடுவது தான் !

'வாங்க' ரீட்டா என்னை வரவேற்றாள்.

''நான் ... நான் ... '' என் வாய் தந்தி அடித்தது

''தெரியும்! எதிர் அறையில் இருக்கிறீர்கள் எனது அலுவலகத்திற்கு 5 கட்டிடம் தள்ளிதானே உங்கள் அலு வலகம்.'' ரீட்டா பட படவென்று பேசினாள் ......

என்னடா ''நம்ம ஜாதகமே இவள் கையில் இருக்கும் போல் இருக்கிறதே ... ...

''நான் ஒன்று கேட்பேன்... தவறாக நினைக்க மாட் டீர்களே'' பீடிகை போடாமல் நேரடி கோதாவில் இறங்கி விட்டேன் ''கேளுங்கள்''

''வந்து ... வந்து .. எனக்கு ஒரு 100 ரூபாய் வேண் டும் ... நண்பர்கள் எல்லாரும் கையை விரித்து விட்டார் கள் 1 ஆம் தேதி தந்து விடுவேன்''

இதற்கா இவ்வளவு ! கொஞ்சம் இருங்கள் ' என்று உள்ளே போனவள் ஒரு கையில் பணத்துடனும் ம்று கையில் காபியுடனும் வந்தாள்

காபி என் வயிற்றில் சுரீர் என்று இறங்கியது எனது மன பாரமும் இதனுடன் இறங்கியது ''ரீடா தான் எவ்வளவு நல்லவள்'' . . .

தமிழுக்குத்

''தமிழின் உயிர்நாடியையே என் வல்லமையால் செயலற்றுப் போகச் செய்துவிடுவேன்'' என்று சூளுரைத்துக் கொண்டு திரிந்த வரை நாம் அறிவோம். ''பிற மொழிச்சொற்கள் கலக்கக் கலக்கத் தமிழ் மெருகேறும்'' என்று பித்த லாட்டம் பேசியவரையும் இந்தத் தமிழகம் மிக நன்ருகவே அடை யாளம் கண்டு கொண்டுதான் உள்ளது. காலம் மாறிவிட்டது. ஸ்ரீமான், அக்கிராஸனர், நமஸ்காரம், வந்தனேபசாரம், பிரசங்கம், காரியதரிசி, பொக்கிஷதார் என்பனபோன்ற வடசொற்களைப் 'பிரயோகம்' செய்த சில நாளேடுகள் கூட நல்ல தமிழ்ச் சொற்களை பயன் படுத்துகின்ற நிலைமையினை நாம் இன்று கண்கூடாகக் கண்டு வருகின்ருேம். மாநில அரசின் அனைத்துத்துறை விளம்பரங்களிலும், வானெலியிலும் நல்ல தமிழ் நடம்புரியக் கண்டும்கேட்டும் மனம் மகிழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலப் பகுதியில் தான் தமிழின் தனித்தன்மை கண்டு பொருமல் நிலை தடுமாறி ஆர்ப்பரிக்கும் சில விந்தை மனிதர்களை நாம் இன்று சந்திக்கின்ருேம். சில பல ஆண்டுகளுக்குப் பின் தமிழை இழித்தும் பழித்தும் தம் முனைப்புக் காரணமாகத்தாங்களே தமிழுக்குக் 'கதி' என்றும் பேசிய சில கூக்குரல்கள் எல்லாம் ஒய்ந்துவிட்ட பின் — இன்று புதுமையின் பெயரில் மீண்டுமொரு கூச்சலைக் கேட்கின்ற கட்டாயநிலை நமக்கு வாய்த்திருக்கின்றது. அண்மையில் 14—7—79 அன்று 'கல்பனு' இதழின் வாசகர் ஆய்வரங்கில் அவ்விதழின் ஆசிரியர் தோழர் ஜெயகாந்தன் அவர்கள் பேசிய பேச்சினைத்தான் இங்குக் குறிப்பிடுகின்ருேம்.

அன்று அன்பர் சிலரின் ஆய்வுரைகள் முடிந்த பின் வாழ்த்துரை வழங்கியவர்களில் ஈரோட்டைச் சார்ந்த திரு வேலா இராசமாணிக்கமும் ஒருவர். அவர் தமது வாழ்த்துரையின் போது தோழர் ஜெயகாந்தனிடம் வேண்டுகோள் என்ற முறையில், ''தங்கள் இதழில் வடசொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கலவாமல் எழுதுங்கள்'' என மிக அடக்கத்துடன் கேட்டுக் கொண்டார். ''அன்றைய மாணவர்கள் கூட நல்ல தமிழிலேயே படிக்கவும், எழுதவும், பேசவும் வாய்ப்புப் பெற்றிருக்கிருர்கள், இந்நிலையில் தங்கள் கதைகளில் காணப்படும் சில வடசொற்கள், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு உயர்நிலைப்பள்ளியில் படித்த எனக்கே விளங்காதபோது அவற்றை இன்றைய மாணவர்கள் புரிந்து கொள்வது கடினம்'' என்னும் கருத்துப்படத் திரு இராசமாணிக்கம் அமைதியாகக்கூறினர். ஆனல் இவற்றிற்கெல்லாம் 'பதிலுரை' என்ற பெயரில் பேசிய தோழர் 'ஜெயகாந்தன், 'பேசினர்' என்பதை விடத் 'திட்டித் தீர்த்தார்'

தூலக்குளிவா?

புலவர்: ப. அ. அரங்கநாதன், எம். ஏ.

என்றே 'வசைமொழியைப் பெருங் குரலில் வழங்கினர்' என்றே கூறுவதுதான் மிகப் பொருத்தமாக இருக்கும். திரு இராசமாணிக்கத்தின் வேண்டுகோளுக்கு மாற்றுரை தந்த தோழர் தம்மால் வடசொற்கலப்பின்றி எழுத வராது என்றே எழுதிப் பழகிவிட்டதாகவோ கூறியிருந்தால் நாம் அதைப் பொருட்படுத்தியிருக்கமாட்டோம். ஆனல் தனித் தமிழில் எதையும் தர முயலவேண்டும் என்கிற நல்ல தமிழார்வம் மிக்கவர்களை ஏன், தமிழையே தாழ்த்திப் பேசித் தம் தகுதியையும் தோழர் தாழ்த்திக் கொண்டார் அன்றைய ஆய்வரங்கில், 'வடசொற் கலவாமல் எழுதப்படும் கதைகளை யாரால் படிக்க முடியும்?' என்றும் கூடக் கேட்டு வைத்தார். அப்படியானல் தோழர் கூறுவதுபோல, எழுதுவதுபோல, இடைக் காலத்தில் வழங்கிய 'மணிப்பவள நடை' தான் இன்றையத் தமிழர்களுக்குப் புரிந்துவிடப் போகிறதா? அவரை மிக நன்கு, தனித்திருந்து எண்ணிப் பார்க்க வேண்டுகிறேம் அன்போடு. 'வடசொற் கலவாமல் எழுத முயலுங்கள்' என்று மட்டுமே கேட்டுக் கொண்ட அன்பருக்கு மறுப்புரை கூறப் புகுந்த உணர்ச்சிப் பேச்சாளரான நம் தோழர் தம்முடைய வடசொற் கலப்புக்கு மெய்ப்பிப்பு (Justification)த் தேடுகின்ற முறையிலே சொன்ன சில கருத்துகளையும் நாம் இங்கே ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேம்.

''பாரதி, பாரதிதாசன் போன்ற பெயர்களெல்லாம் தமிழா?'' என்பது அவரது முதல் வினு. மேலும் பாரதி தம் பாடலில் 'தனியொருவனுக்கு உணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற அடியை எடுத்துக் காட்டி அவ்வடியில் 'ஜகத்தினை' என்ற வடசொல்லைப் போட்டதால்தான் அப்பாடல் அழுத்தம் பெற்றதாகக் கூறினர். பாரதியின் பாடல்களிலும், பாரதிதாசனின் தொடக்க காலப் பாடல்களிலும் வடசொற்கள் கலந்திருந்தன என்பது மெய்யே. அதற்கு அவர்கள் வாழ்ந்த காலச் சூழலே காரணம். இதைப் புரிந்திருந்தும் புரிந்திராதவர்போலத்தோழர் பேசிக் கேட்பவரைக் குழப்பினர். அவர் வழி நின்றே நாமும் கேட்போம். பாரதியார் வடசொற் கலப்பு மிகுந்திருந்த அந்தக் காலப் பகுதியிலும் கூட, 'புரட்சி', 'பொதுவுடைமை' போன்ற அழகு தமிழ்ச் சொற்களைப் புதியனவாக நம் பைந்தமிழுக்குப் படைத்தளித்தார் (Coined New Words) என்

சேவல்

இரவில் வளரும்
கட்டிலறைக்
காவியங்களுக்கு
முற்றுப்புள்ளி
வைக்க
முதல் குரல் கொடுக்கும்
அபாய அறிவிப்பாளன்!

வேனில் வேந்தன்

பதைத் தோழர் ஜெயகாந்தன் மறந்திருக்கலாம்; மறைக்கவும் பார்க்கலாம். ஆனால் நன்றியுள்ள எந்தத் தமிழ் மகனும் அதை மறந்திடமாட்டான். நல்லவேளை தோழர் ஜெயகாந்தன் பாரதியாகவோ, பாரதி காலத்திலோ பிறக்கவில்லை. பிறந்திருந்தால் 'புரட்சிக்கும்', 'பொதுவுடைமை' க்கும் வடமொழிக்கு மிக மூத்த மொழியொன்றிலிருந்து 'கர்ணாம்ருத' மான இணைச் சொற்களை வழங்கியிருந்திருப்பார் போலும். தமிழும் தமிழரும் செய்த தவப் பயன் போலும் தோழர் ஜெயகாந்தன் அன்றே பிறவாமல் போனார்!


தோழர் இத்துடன் விட்டிருந்தாலும் பரவாயில்லை. தமிழருக்கும் தமிழுக்கும் புதியதோர் அச்சுறுத்தலையும் கூடவே அறிவித்தார். ஆய்வரங்கில் கலந்து கொண்ட அன்பர் ஒருவர், 'கல்பனா' இதழில் வெளிவரும் 'மன்னார்சாமியின் பதில்கள்' என்னும் பகுதி நல்ல தமிழ் நடையாக இல்லையே என்று குறைப்பட்டுக் கொண்டபோது தோழர் அந்தச் சாக்கடை மொழியைச் சுட்டிக்காட்டி, ''அதை விடவும் புதியதாக ஒரு மொழி இனி வந்தாலும் வரும்'' என்று ஆருடம் கூறினார். அரங்கில் தம் 'கல்பனா' பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்ட தோழர், ''இந்த ஏட்டை ஒரு தந்தை தம் மகளிடம் கொடுத்து 'இதைப் படியம்மா' என்று சொல்லலாம்'' என்றார். அத்தகைய உறுதிமொழி வழங்கும் தோழருக்கு நாம் ஒன்றை மட்டும் மிக நன்றாகவே சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். எம்மைப் போன்றே எல்லாப் பெற்றோர்களும் கதை கவிதைகளில் அவர் குறிப்பிட நினைத்த 'ஆபாசம்' என்ற ஒன்றை மட்டுமல்ல, ஆசியருக்குக் கை வந்த 'நடை' (Style) என்ற பெயரால் கைகூசாது எழுதுகின்ற இழி நடையையும் வெறுக்கிறோம்; வன்மையாக எதிர்க்கிறோம். எந்த ஏடாக இருந்தாலும் சரி, அது நாணயத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும், மிகப் பலருக்கும் உரிய செய்திகளை வழங்கும்வாயில்களாக (Mass-media)ச் செயல்படக் கடப்பாடுடையவை. எனவே ஏடுகளில் இன்றையத் தலைமுறையினர்க்கு குறிப்பாக மாணவர்களுக்கு நல்ல தமிழ் நடையினைப் புகுத்துவது தான் ஓர் இதழாசிரியரின் அறம் என்பதைத் தோழர் உணர்வாரா?

இவற்றையெல்லாம் வருத்தத்துடன் எண்ணிப் பார்க்கின்ற இந்த நேரத்தில் தோழர் சார்ந்திருக்கும் இயக்கமே பாராட்டும் சோவியத்து ஒன்றியத்தின் தலை சிறந்த தமிழறிஞரை, தமிழகத்தில் பிறவாத குறையொன்று மட்டுமே உடைய நற்றமிழ்த் தலைமகனை மறைந்த பேராசிரியர் செம்பியன் (Prof. Rudhin) அவர்களை நன்றிப் பெருக்குடனும் உள்ளுருகும் தமிழ் நெஞ்சுடனும் நினைத்துப் பார்க்கிறோம். பேராசிரியர் செம்பியன் அவர்கள் சென்னையில் அறிஞர் மு. வ. அவர்களிடம் மாணவராக அமர்ந்து தமிழில் Ph. D. பட்டத்திற்குத் தம் ஆய்வைச் செய்திடத் தங்கியிருந்த நேரம் அது. சென்னைத் தெருக்களிலே செல்கின்ற தமிழ் மக்களிடம் தமிழில் பேசிடத்துடித்தாராம். அவரிடம் நம் தமிழ்நாட்டு 'மேதை' களோ

தொட்டில்

உணர்ச்சிக்
கொதிப்பில்
உருகிவந்த
புதியவார்ப்புகளை
உறங்கவைக்கும்
எழிற்கூடம்

வேனில் வேந்தன்.



வரதட்சிணைக் கொடுமையின் காரணமாக மாமனார், மாமியார், கணவன், ஆகியோரால் படுகொலை செய்யப் பட்டதாகக் கூறப்படும் ஊட்டியைச் சேர்ந்த கமலாவின் மரணத்திற்கு

ஆங்கிலத்தில்தான் பேசினர்களாம் அதைச் சொல்லி அவர் மிகவும் வருந்தினராம். ஒருமுறை, இக் கட்டுரையாளரின் பெருமதிப்பிற் குரியவரும், பொதுவுடைமை இயக்கத்திற்கே தம்மை ஆட்படுத் திக் கொண்டவருமான பவானி திரு. பி. என். பாலு அவர்கள் சென்னையில் சோவியத்துத் தமிழ றிஞர் செம்பியன் அவர்களைச் சந் தித்து உரையாடினராம். அப் போது பேராசிரியர், திரு பாலு அவர்களிடம், 'தங்கள் ஊரின் சிறப்பான தொழில் என்ன? என்று கேட்டபோது திரு பாலு அவர்கள் 'ஜமக்காளத்தொழில்' என்றுராம். அது கேட்ட பேராசிரியர், 'ஜமக் காளமா? அது தமிழ்ச் சொல்லாகத் தெரியவில்லையே! அதற்குத் தமி ழிலே உங்களுக்குச் சொல்லே இல் லையா?'' என்று கேட்டாராம். தமிழ் மீதிருந்த தணியாப் பற்றி ஞல் 'ரூதின்' என்ற தம் பெய ரைச் 'செம்பியன்' என்று மாற்றிக் கொண்ட அந்தப் பேரறிவாளரை யும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கின்ருேம்; தோழர் ஜெய காந்தனையும் நினைத்துப் பார்க்கின் ருேம். தமிழ்நாட்டில் பிறந்ததால் மட்டுமே, தமிழைப் பேசியதால் மட்டுமே, தமிழை எழுதித் தமி ழால் பிழைப்பு நடத்துவதால் மட் டுமே ஒருவர் தமிழராகிவிடுவாரா? இந்தத் தமிழ் மண்ணிலே பிறந்தி ராத ஒரே ஒரு குற்றத்தினலே ஒரு 'செம்பியன்' தமிழரல்லாதவராகி விடுவா? எண்ணிப் பார்க்கட் டும் தோழர் ஜெயகாந்தன்.

ஏறத்தாழ 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு இரா. ஸ்ரீ. தேசிகன் என் பவர் மறைமலையடிகளின் தமிழ் நடையைச் சுட்டிக்காட்டி, 'இது எல்லாம் தமிழா?' என்று கேட்ட தையும் அதற்குத் தமிழுலகம் முழு வதிலிருந்தும் கண்டனக் கணைகள் கிளம்பிட அதன்பின் அவர் அடங் கி உருப்படியான இலக்கியப் பணி யில் அமர்ந்ததையும் தோழர் மறந் திருப்பார். தமிழகம் மறக்கவில்லை. இந்தத் தமிழ்மொழி கனக விசயர் களையும் கண்டிருக்கிறது; இரா. ஸ்ரீக்களையும் பார்த்துத் தானிருக்கி றது. தோழர் ஜெயகாந்தன்

இன்று தம்மைப் புதிய விசுவாமித்திரராக எண்ணிக் கொண்டு தமிழுக்கு மாசு கற்பிக்க நினைப்பாரேயானால் உறுதியாகச் சொல்கிறோம். இந்தப் புதிய விசுவாமித்திரரும் தோல்வியையே அணைத்துக்கொள்வார்!

தோழர் ஜெயகாந்தன் பெற்ற, பெறுகின்ற புகழிலே எமக்குக் காழ்ப்பில்லை. அவர் தமிழால் பிழைப்பது கண்டு எங்களுக்கு அழுக்காறில்லை. அவரது நற்பெருமை கண்டு கூட எமக்கு எரிச்சல் இல்லை. இவற்றையெல்லாம் முதலீடாக வைத்துக் கொண்டு, 'வடசொல் தவிர்த்து எழுதுங்கள்' என்று அன்புடன் கேட்டுக் கொண்ட நல்ல தமிழ் நெஞ்சங்களைப் பார்த்து வெறும் கைதட்டல்களுக்காக வசைமொழிகளைக் கொட்டிய அவரது போக்கைத் தான் நாம் கண்டிக்கிறோம். இன்னும் சொல்லுகிறோம். இன்றும் தோழர் ஜெயகாந்தன்எழுதுகின்ற மிச்சமுள்ள நல்ல தமிழ் நடை கூடத் தமிழியக்கம் கண்ட சான்றோர்கள் அவருக்குத் தந்த 'கொடை' என்பதை அவர் நன்றாக உணர்ந்து கொள்ளட்டும்!

தோழரின் வற்றாத 'கல்பனை'யிலிருந்து எத்துணைப் புதினங்கள், சிறு கதைகள் வேண்டுமானாலும் உருவாகட்டும். தமிழகம் வரவேற்கும். ஆனால் அந்த இலக்கிய வணிகத்தில் தனித்தமிழைக்கேலிப் பொருளாக மட்டும் கருதிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம் 'வடசொல்லைக் கலவாமல் எழுதுங்கள்' என்று கேட்கின்றவர்களின் மனம் புண்படப் பேச வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், 'மார்க்சியம் படித்தால்தான் என்கதை புரியும்' என்று அன்றைக்குப் புதிய விளக்கம் கொடுத்த தோழர் எமக்கு வேடிக்கைக் குரியவராகத் தோன்றுகிறார். இந்தத் தமிழகத்தில் மட்டுமன்று, இந்த உலகத்தின் எந்த ஒரு மூலையிலிருந்தும் கூட, எந்த ஓர் எழுத்தாளனும் இப்படிப் பறைசாற்றியதை அவர் விரும்பும் மொழியில் சொல்வதானால் 'பிரகடன'ப் படுத்தியதை இது காறும் நாம் கேட்டதில்லை. இன்ன நூலைப் படித்தால் தான் தன் கதை புரியும் என்று சிறுகதைத்துறையின் விடிவெள்ளியாம் புதுமைப் பித்தன் கூடக் கூறியதாக நாம் அறியவில்லை. தமிழ்ச்சிறு கதைத்துறையில் புதிய வேடிக்கையான 'உத்தி' தோன்றியிருக்கிறதா, என்ன? மேலும், தோழர் நினைக்கிறார் போலும், மார்க்சியம் என்பது ஏதோ அவர் வீட்டுச் சொத்து என்று நமக்குத் தெரியும் நன்றாக, மார்க்சியம் ஜெயகாந்தன் வீட்டுச் சொத்து அன்று, அது முழு உலகப் பொதுவுடைமை என்று.

தனித்தமிழ் ஆர்வலரைகக் கனல்கக்கப் பேசிச்சாடிய தோழர் இறுதியில் ஏனோ 'குளிர்ந்து போய்; 'கருத்து வேறுபாடுகள் நமக்குள் எழுவது இயற்கை; அது வேண்டியதே. இந்தக் கருத்து மோதலானது கற்கண்டு மலையும் கற்கண்டு மலையும் மோதிக் கொள்வது போன்றது' என்றாரே பார்க்கலாம்! அது தான் அவரது வேலைத்திறனோ

கட்டில்

உலகத்து
மக்கள்த்தொகையை
உருவாக்க
உதவும்
உன்னத
உலைக் கூடம்.

வேனில் வேந்தன்

கற்கண்டு மலைகள் தம்முள் மோதிக்கொண்டால் எள்ளல் பிறக்குமோ? தகைமை தடம் மாறுமோ? ஏச்சுரை எடுத்தாளப்படுமோ? எற்றமிகு தமிழை இழித்தும்பழித்தும் எற்றித் தள்ளுமோ? விந்தையோ விந்தை! பண்பாளர்' பகுத்தறிவுச் செம்மல், நல்லதொரு நாத்திக் கோட்டையின் நடுக்கமில் காவலர், எளிமையின் உறைவிடம், கனிந்த மக்கட் பற்றுளர் (Humanist), பொதுவுடைமை இயககத்தின் தனிப் பெருந்தோன்றல், கலை இலக்கியப் பெருமன்றம் கண்ட மேதை, அமரர் ஜீவா அவர்கள் இருந்த அணியிலே நின்று கொண்டு தான் ஜெயகாந்தன் என்றோர் அகத்தியர் நமக்குப் புதிதாகத் தமிழ் கற்பிக்க வந்துள்ளார்.

இன்று ஈரோட்டில் இராச மாணிக்கம் என்ற தனியொருவரைப் பார்த்து வீசிய சுடு சொற்களாக, அத்தனி யொருவரின் உள்ளத்தைப் புண்படுத்திய புண்மொழிகளாக அவற்றை நாம் கருதவில்லை. மாறாக, தமிழை, தமிழ்ச் சான்றோரை, தமிழியக்கத்தைக் கேலிப் பொருளாகக் கருதிப்பேசியதாகவே கருதுகின்றோம். தோழர் ஜெயகாந்தனின் கருத்துப்படி வட சொற்களைக் கலப்பது குற்றமில்லையாம், ஆனால் தனித் தமிழ்ச்சொற்களை வழக்கிற்குக் கொண்டு வருவதுதான் குற்றமாம். அவர் முழுக்க முழுக்க வடசொற்களைக் கொண்டு கதைகளை எழுதிக் குவிக்கட்டும்; அவற்றைப் படிக்க ஏற்ற வாசகர்களையும் உருவாக்கட்டும். அது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் தமிழ் நெஞ்சங்களெல்லாம் தோழர் ஜெயகாந்தனுக்குத் தாம் இதயக் குமுறல்களைக் காட்டட்டும்''.

நல்லதொரு — குடும்பம்!

(உண்மை நிகழ்ச்சி

சமீபத்தில் ஈரோடு ராயல் தியேட்டரில் திரைப்படம் பார்க்க மாமியாரும், மருமகளும் 3 வயது கைக்குழந்தையுடன் வந்தனர்.

திரைப்படம் முடிந்தவுடன் ஆட்டோ ரிக்சாவில் ஏறி வீட்டிற்கு போய் விட்டனர்.

தியேட்டருக்குள் தனியாக ஒரு குழந்தை ரசிகர்கள் எல்லாம் போய்விட்டதும் அழுது கொண்டிருந்ததை தியேட்டர் அதிபர், திரு. சுரேஷ் பார்த்தார். அதற்கு பிஸ்கட், பால் கொடுத்து அலுவலக அறையில் பாதுகாத்து, போலிசாருக்குத் தகவல் கொடுத்தார்.

இதற்கிடையில் இரவு 11 மணி அளவில் சாப்பாடு முடிந்து தூங்கப் போகும் நேரத்தில் கணவன் மனைவியிடம் குழந்தை எங்கே? 'என்று கேட்க அப்போது தான் அந்தப் பெண்ணுக்கு தனது குழந்தையை தியேட்டரிலேயே மறந்து விட்டு விட்டு வந்தது நினைவிற்கு வந்தது.

பிறகு கணவன் மனைவி இருவரும் தியேட்டருக்கு வந்து அலுவலக அறையில் தூங்க வைக்கப் பட்டிருந்த குழந்தையை பெற்று சென்றனர்.

இப்படி குழந்தையை மறந்து போகும் அளவிற்கு அந்த பெண் ரசித்துப் பார்த்த படம் என்ன தெரியுமா ''நல்லதொரு குடும்பம்''.

ஆ. இளமுருகன்.

சின்னச் சின்னக் குழந்தைகளே!

கொடுமுடி. கு. அ. பிரகாசம்.

சின்னச் சின்னக் குழந்தைகளே!
சிட்டாம் புதுமலர்ச் செண்டுகளே
கன்னல் மொழிக்கற் கண்டுகளே
கமழும் சந்தனத் துண்டுகளே!

உங்கள் நலத்தை உளங்கொண்டு
உணர்த்தும் வழிகள் பலவுண்டு
இங்கு நான் அதில் சிலவற்றை
இயம்பு கின்றேன் கேட்பீரே!

சூரியன் எழுதரும் முன்பாக
சுறுசுறுப் பாகவே விழித்தெழுக
சிறிய காலைப் பணிமுடித்துச்
சிறப்பாய்ப் பள்ளி சென்றிடுக!

கூரிய மதிவளம் பெற்றிடுக
கூடிக் கல்வி கற்றிடுக
நேரிய நிலையில் நின்றிடுக
நேரும் தொல்லை வென்றிடுக!

அன்னை தந்தையை மதித்திடுக
ஆசான் மார்களைத் துதித்திடுக
சொன்னதை மனத்தில் வடித்திடுக
சோர்வில் லாமல் படித்திடுக!

அன்புக் கிளையைப் பிடித்திடுக
அருளை அடையத் துடித்திடுக
என்றும் தோல்வி உனக்கில்லை
எய்தும் வெற்றி கணக்கில்லை!

விதவைகளே

வாழ்க்கை என்னும் தோட்டத்தில்
பட்டுப் போன மரங்களே!
திருமணம் என்னும் சந்தையில்
வாடிப் போன கனிகளே!
இல்லறம் என்னும் பூங்காவில்
மணம் வீசாத மலர்களே!
உங்கள் வாழ்க்கை ஏட்டில் ... ...
முப்பது நாட்களும் அமாவாசைகளோ ... ...
உங்கள் இல்லறம் எந்நாளும்
கிழிக்கப் படாத காலண்டர்களோ ...?
காவிரி வெள்ளத்தில் கொஞ்சம்
உங்கள் கண்ணீரும் சேர்ந்துளதோ?
மீட்டப் படாத உயிரற்ற வீணைகளே ...
உங்களை மீட்டி உயிர் கொடுக்க
வருகின்ற தேவன் யாரோ ...?
வந்தால் அத்தேவனின் திருவடிகளுக்கு
என் பாடல்களே அர்ச்சனைகளாகட்டும்!

திபோஜ

தாய் முயல் குட்டி போடுவதற்கு முன்பு தன் மார்பில் உள்ள மென் மயிரைத் தானே உதிர்த்து வளையில் மெத்தை போல் பரப்பி அதில் தன் குட்டிகளை ஈனும். பெண்முயலின் மார்பில் மயிர்ச் சொட்டைகள் காணப்பட்டால் அது குட்டிப் போடப் போவதற்கு அடையாளம்.

ஆதாரம்: பிராணி உலகம்.
தகவல்: எச். ஜப்பார் சந்தி.

நிலா



நெஞ்சுக்குள் வந்த நிலா

வருகைப் பருவம் கழிந்து

பிஞ்சு வயதில் அம்புலிப்

பருவத்தில் அம்மாவிடம்

தஞ்சம் இருந்த போது

அருமை நிலவைக் காட்டி

பிஞ்சு அமுதை ஊட்டிய போது

நான் கண்டதும் இந் நிலவே,

வி. ஆர். செந்தமிழ்ச் செல்வன்.

நாயை மறக்காத நன்றி!

இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர் நார்மன் ஹால். இவர் 'ரிக்கி' என்ற பெயர் கொண்ட நாயை அன்போடு வளர்த்தார். இவர் இறக்கும் போது தனது 5 லட்சம் ரூபாய் சொத்தை நாயின் மேல் உயில் எழுதி வைத்தார். நாயை நன்றாக கவனித்துக் கொள்பவர்கள் வாரத்துக்கு 300 ரூபாய் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உயிலில் எழுதி வைத்தார்.

கவிதை.

போற்றல்கள் — வெறும்
தூற்றல்கள்
ஏற்றல்கள் - எண்ணத்தின்
மாற்றல்கள்-அட
வெறும் பேத்தல்கள்.

வேலவன்

தேவை...!

இளசை அருணா

எனக்கொரு குழந்தை வேண்டும்—ஆமாம்
எனக்கொரு குழந்தை வேண்டும்.!

அணுவைப் பிளந்து அதனின் உள்ளே
ஆற்றல் இருப்பதாய்ப் போற்றிக் காத்த
நுணுகித் துளைத்த புல்லாங் குழலின்
நுண்ணிய ஐன்ஸ்டைன் பெருமைகள் போல—(எனக்)

மார்க்கொனி போல ஒலியலை தாவி
மனத்தில் எங்கும் இன்னிசை மேவி
மார்க்கம் காட்டிப் பல்லவி மீட்டும்
மாட்சிமை தீட்டிய சூட்சும வடிவாய் (எனக்)

ஆல்வா எடிசன் அருமைத் திறத்தால்
அனைவர் தொடர்பும் ஒன்றென ஆகி
வாழ்வும் வளமும் நன்றென ஆக்கிய
வளமைப் பாதையின் திசையைக் காட்டிட (எனக்)

ரைட்டென விண்ணில் சிறகை விரிக்க
நளின வெண்மைக் கருவி சமைத்த
செய்திறத் தாலே வானும் வையமும்
சேர்த்துப் பாடிய கைகளின் திறனாய் (எனக்)

அப்பல் லோவில் ஆணொடு பெண்ணும்
அம்புலி பார்க்க அமர்த்தி அனுப்பிய
இப்புவி மேன்மை அறிவியல் கண்ட
இதயம் போலே என்றும் வாழ (எனக்)

டார்வின் என்பான் மானுட வடிவை
தத்தித் திரிகிற குரங்கின மென்று
ஆர்வத் தாலே உணர்த்திக் காட்டிய
ஆற்றலைப் போற்றிய சரிதத் தெளிவாய் (எனக்)

அலைகள் கிழித்துக் கரையைத் தொடுகிற
ஆழிச் சுழலில் பாதைகள் காட்ட
நிலைத்த கருவி கொலம்பஸ் செய்தான்
நினைத்துப் பார்க்கிற இனிமைச் சுவையாய் (எனக்)

கீதாஞ் சலியைக் காவிய வரியாய்க்
கண்ணில் விரித்துக் கருத்தில் இணைத்த
தூதன்; மொழியின் தாகூர் போல
தூய்மை வடிவத் தூரிகை போல (எனக்)

பாட்டுத் திறத்தால் வையத் தினையே
பாலித் திடவே பாக்கள் யாத்த
மீட்டிய வீணை பாரதி என்பான்
மேன்மைக ளேந்திய ஞானச் சுடராய் (எனக்)

எண்ணப்

பூங்கோதை இதழ் எல்லா வகையிலும் சிறப்புற இதயத்தால் வாழ்த்துகிறேன்!

ஏடுகள் நடத்தி ஏற்றம் கண்டவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு என்பது தெரிந்தும் இதழ் நடத்தும் துணிவைப் போற்றுகிறேன்! பாராட்டுக்கள்!

பாரிசு

முகமது அமீன்

பூங்கோதை இலக்கிய கட்சி, மத சார்பற்ற பத்திரிக்கையாக விளங்கி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருப்பதுடன் குழந்தைகள் மலராக மலர இருப்பது கண்டு பெருமகிழ்வு கொள்கிறோம்!

காட்டேரி

திரு. மூர்த்தி, திருமதி சுகந்தி.

கணவன்-மனைவி, உறவு பற்றியோ, தாய்மையின் சீர்மை பற்றியோ குழந்தைச் செல்வத்தைப் பற்றியோ - ரதிமோனு எள்ளளவும் அறிந்திருக்கவில்லை என்று கருதுகிறேன்.

கோவை.

இரா. மனோகரன்.

பூங்கோதையில் அவள் பூத்த நேரம், இதயக் கதவு திறக்கட்டும் ரதிமோனு, ஸ்ரீதரன் படைப்புகள் என் மனதுக்கு இதமாக இருக்கிறது. கதை, கவிதை, கட்டுரைகள் பரவாயில்லை. நாமக்கல் நாதனின் படைப்பு அசிங்கமாக இருக்கிற ... தூ! 'வெண்பா' போட்டியில் நீங்கள் செய்யும் புதுமை பாராட்டத்தக்கது.

ஒட்டப்பிடாரம்

அருணைநயா.

இலக்கிய தாகத்தோடுகூடிய, சமுதாயத் தேவைக்குரிய தொண்டாக இருப்பின் உறுப்பினர்களை நம்பியோ, விற்பனையை நம்பியோ, நடைபெறச் சாத்திய மிருக்காது. அத்தகைய தொண்டு மகத்தானது. தங்களுடைய முயற்சிக்கும், துணிவுக்கும் பாராட்டுக்கள்.

சேலம்

நாமக்கல் நாதன்

ஜூன் + ஜூலை இதழில் வெளியான வெண்பாப் போட்டியில் 3 ஆம் பரிசு பெற்ற வெண்பா நான் எழுதியனுப்பியது. ஆனால் '' கலைச்செல்வன் சென்னிமலை '' என்று போட்டிருக்கிறீர்கள். முதற் பரிசுக்குரிய வெண்பாவின் தனிச்சீர் எந்த எதுகையைக் கொண்டது? பொருள் மாத்திரம் இருந்தால் போதுமா? இலக்கண முறையைப் பார்க்க வேண்டாமா?

எருமப்பட்டி

மகபூப் ஜான் பி. ஏ.

பூக்கள்

தங்கள் ஆசிரியஉரையும், பொதிகைப் பூவரசி என்னும் தொடர் கதையும் பாராட்டத்தக்க தகுதியுடன் மிளிர்ந்தது. ஆயினும், இதழில் இடம் பெற்றுள்ள''சன்னல் நிலா'' என்பதும், ரதிமோகு என்பாரின் தமிழ்க் கொலேயும் பிறவும் என்ன பயனைத் தமிழுக்குத் தந்துவிடப் போகிறது? மொழிச் சிதைவுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரும் தங்களை எவ்வாறு போற்றுவது.

கலைக்களஞ்சிய நிறுத்தம் ''கலைச் சொற்கள்'' உருவாகவதை தடை செய்கிறது என்ற குறையை எடுத்துக் காட்டி அதனை ''என்ன கொடுமை'' என்று குறிப்பிட்டுள்ளீர்கள் மனமுவந்து பாராட்டு கின்றேன்.

ஆயின் அதனைவிட நூறு மடங்கு கொடுமைகளை நீங்கள் புரிவது மட்டும் சரியாகுமா?

கூவலூர் புலவர். பொன்முகிலன்

புலவீனங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவது மாபெரும் வீரப் பண்பாகும்.

அந்த வரிசையில், காந்தியாரை, டாக்டர் சுகர்ணோவை, கண்ண தாசனை சுட்டிக் காட்டலாம்.

ரதிமோகு ! இவரும் அத்தகையப் பெரியோர்களின் பட்டியலில் சேர்ந்துள்ளார்.

இருண்ட சமுதாய வீதிகளை படம்பிடித்துக் காட்ட எழுந்துள்ள முழுநிலவே... உமதுபணி தொடரட்டும் !

ஈரோடு , எம். எஸ். மணி.

இப்பொழுதுதான் ரதிமோகு சிந்திக்க கற்றுள்ளார். அவருடைய பொதுவுடமைக் கருத்துக்களுக்கு என் பாராட்டுக்கள்

நாகர்கோவில் கவிஞர். செழியன்

திரு தே. வ. சந்தானம் அவர்களின் 'காதல்' கட்டுரை மிகவும் இன்பத்தைக் கொடுத்தது, கவிதைகளும், தலையங்கமும் மகத்தான பாராட்டுக்களை பெறக்கூடியவை.

மொரப்பூர் இலா. ஆதிமூலம்.

அட்டைப்படக் கவிதையான, கோதைமார்பனின் கவிதை மட்டும் தான் சிறப்பாக அமைந்துள்ளது. மற்றப்படிகதைகள் உள்ளத்தைத் தொடும்வண்ணமாகவோ, புதிய கருத்துக்களைக் கொடுப்பதாகவோ இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை வேனில் வேந்தன்



செய்திச் சுருள்

நாவலாசிரியர் ''நீல பத்ம நாபன் எழுதிய ''உறவுகள்'' நாவல் ஒரு பதிப்பகத்தாரால் 'பிரசுரம்' செய்வதற்கு ஏற்ற தில்லை'' என்று திருப்பி அனுப்பப்பட்டது. ஆனால் அதே நாவல் தான் சிறந்த 'படைப்பி லக்கியத்திற்காக' பரிசு பெற்றது.

இதை போல் தான் நடிகை சாரதாவும் முகம் சரியில்லை, மூக்கு சரியில்லை, என்று ஆரம்ப காலங்களில் ஒதுக் கப்பட்டாராம். ஆனால் இன்று அவர் இரண்டு ஊர்வசி பட்டங்களை பெற்று விட்டார்.

அடேங்கப்பா!

அமெரிக்க முன்னள் வெளி விவகார மந்திரி கிசிங்கர் தனது பதவி காலத்தில் ஒவ்வொரு முறை ஈரான் நாட்டிற்கு போகும் போதும் 'ஷா' மன்னர் ஆட்சி அவருக்கு அவரை மகிழ்விக்க ரூ 80 லட்சம் செலவு செய்ததாம்.

சுடச்சுட சுவையுங்கள்! சினிமா பார்ப்பது எப்படி.

'பூனவில்' சினிமா பார்ப்பது எப்படி என்பதை கற்றுத் தருகிருர்கள் ரூ 250 கட்டி விட்டால் 200 படங்கள் காட்டுகிருர்கள் ஒவ்வொரு படம் முடிந்ததும் அது பற்றிய விளக்க உரையும் தருகிருர்களாம். காலம் மாறிப் போச்சு என்பது உண்மைதான்!

அனுபவி ராஜா!

அமெரிக்க நாட்டில் 'கலி போர் னியா' மாநிலத்திலுள்ள 'பிளித்' நகரைசேர்ந்தவர் கிளின்ஸ்கான்டி ஒல்ப் (வயது 70) இவர் 23வது முறையாக குவாடி (வயது 20) என்ற பெண்ணை மணந்துள்ளார். 1927 ம் ஆண்டுமுதல் திருமணம் செய்து வந்த இவருக்கு இதுவரை 93 குழந்தைகள் உள்ளனர்.

ஒரு மனைவியுடன் அதிகபட்சம் 5 ஆண்டுகளும் குறைந்தபட்சம் 38 நாட்களும் அவர் குடும்பம் நடத்தி யுள்ளார்.

புதிய பிரதமர்!

இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் மொரார்ஜி தேசாய் தனது பதவியை இழந்தார். புதிய பிரதமராக சரண்சிங் பொறுப் பேற்றுள்ளார். இவர் இதுவரை 11 முறை தனது பதவிகளை ராஜி ஞமா செய்துள்ளார். 12வது பதவி தான் பிரதமர் பதவி.

வடையப்பா! வடையப்பா!!

குருவாயூர் கோவிலில் இலங்கை பக்தர் ஒருவரின் மகன் தனது எடைக்கு எடை உளுந்த வடையை காணிக்கை செலுத்தினர். அவரது எடைக்கு 1600 வடைகள் வந்தன. இதை ஏலம் விட்டதில் ரூ 186 கோவிலுக்கு கிடைத்தது.

தாயிப்பால்

அரிமா. டாக்டர் 'L. ராமசாமி.

தலைவர்.

சர்வதேச குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படும் இவ்வாண்டில் குழந்தைகள் நலனுக்காக நாம் ஆற்றக்கூடிய சேவை என்ன என்பதைச் சிந்தித்துச் செயல் படுத்தவேண்டும். குழந்தைகள் உடல் வளர்ச்சிக்கும், உள்ள வளர்ச்சிக்கும் ஊட்டச் சத்துள்ள உணவுதேவை தகுந்த ஊட்ட உணவில்லாமல் நம் நாட்டில் பெரும்பான்மையான குழந்தைகள் ஓராண்டு முடிவதற்குள்ளே இறந்து விடுகின்றன இது தவிர்க்கப்படவேண்டும்.

பொருளாதார அடிப்படையில் ஏழ்மை நிலையிலுள்ளவர்கள் சரி பாதிக்கு மேல் உள்ள இந்த நாட்டில் ஊட்டச்சத்துக்கள் எவை அவற்றை எந்த அளவில் கொடுப்பது என்பதெல்லாம் ஏட்டளவே. உதவும். ஆனல் பயன்படக்கூடியது செயல் முறையில் ஏதுவாக, கூடியது குழந்தைகளுக்கு முடிந்த மட்டும் தாய்ப்பால் கொடுப்பது ஒன்றேயாகும்.

தாய்ப்பாலைப் பற்றி நாம் மிகத் தெளிவாக பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக நாகரீகம் என்ற போலி வாழ்க்கைக்கு அடிமைப்பட்டு பெற்ற குழந்தைக்கு பால் கொடுப்பதே ஒரு அநாகரீகம் என்கின்ற ஒரு கொடுமையான எண்ணம் பல பெண்களிடம் பரவி வருவது இங்கு கவனத்திலிருப்பது அவசியமாகும்.

தாய்ப்பாலில் (ழந்தைக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அத்துணையும் தகுந்த விகிதத்திலும் அளவிலும் அமைந்திருப்பது ஒரு சிறப்புத் தன்மையாகும். பசும்பாலையோ அல்லது வேறு எந்த பாலை யோ எந்த வித மாற்றத்திற்கு உட்படுத்தியும் தாய்ப்பாலுக்கு நிகராக ஆக்க முடியாது என்பது அறிவியல் உண்மை. மாட்டுப்பால் அதன் கன்றுக்கு ஏற்றது. அதேபோல் தாய்ப்பால் ஒன்றே குழந்தைக்கு ஏற்றது. இது இயற்கை நியதி. புட்டிப்பாலில் தாய்ப்பாலின் குணங் கள் அத்துணையும் உண்டு என்பதும், அத்துடன் வைட்டமின்களும் தாது உப்புக்களும் அதில் கூட்டப்பட்டுள்ளது என்பதும் பெரும் வியா பார வித்தைகள்.

பாலூட்டும் மகளிர் நல்ல ஊட்டச்சத்துள்ள உணவு உட்கொள்ள வேண்டும் என்பது நியதி, ஆனல் உண்ணும் உணவினல் தாய்ப் பாலின் தரம் மாறுவதில்லை. இது ஒரு இயற்கை விந்தை. இது காரணம் பற்றியே உழைத்து வயிறு வளர்க்கும் வர்க்கத்தினர், பேறு காலத்தில் வேலைக்குச் செல்ல இயலாத நிலையில் வறுமை அதிகரித்தும் குழந்தைக்கு நீண்ட நாட்கள் (இரண்டாண்டு வரை) பால் கொடுக்க

முடிகிறது. ஆனால் செல்வச் செழிப்பில் நன்கு உண்ணும் வசதி படைத்த பெண்டிர்கள் பிள்ளை பெற்ற முதல் மாதத்திலேயே தாய்ப்பால் வற்றி விட்டதென்று புட்டிப்பாலைத் தேடுகிறார்கள். இது பரிதாபத்திற்குரியதே. மேலை நாடுகளில் மிக விரைவில் தாய்ப்பாலை நிறுத்தினாலும் நல்ல சத்துள்ள சம உணவை குழந்தைகளுக்கு அவர்கள் 6, 7 மாதங்களிலேயே கொடுக்க ஆரம்பிப்பதால் அவர்கள் குழந்தைகள் மிக ஆரோக்கியமாக விளங்குகின்றன. அறியாமையாகிய இருளிலிருந்து விலகாத நம் நாட்டு மகளிர்கள் சத்துணவு பற்றி அறிந்து கொள்வது எப்போது? அதைக் கடைப்பிடித்து குழந்தைகளை வளர்ப்பது எப்போது? எனவே குழந்தைகளுக்கு முடிந்த மட்டும் தாய்ப்பால் கொடுப்பது ஒன்றே நம்முடைய பொருளாதாரத்திற்கும் நடைமுறைக்கும் ஒத்ததாக அமையும். இதை உணராது தாய்ப்பாலை விரைவில் நிறுத்தி விடுவதால் குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைக்கவே முடியாது. தற்பொழுது இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் சுமார் 125 குழந்தைகள் ஒரு வருடத்தை அடைவதற்குள் இறந்துவிடுகின்றன. இந்தியாவில் இறப்பவர்கள் எண்ணிக்கையில் சுமார் 25 சதம் 5 வயதிற்குக் குறைவான குழந்தைகளேயாகும்.

குழந்தையின் உணவுத் தேவை:

குழந்தைகளுக்கும் பெரியவர்களைப் போன்ற பல்வேறு ஊட்டச் சத்துக்களும் தேவைப்படுகிறது- குழந்தைக்கு வேண்டிய சம உணவை நிர்ணயிக்கும் போது சர்க்கரை கொழுப்பு, புரதம், தாது உப்புக்கள், வைட்டமின்கள் நீர் ஆகியவை தரத்திலும், அளவிலும் சமன் செய்யப்படுதல் மிக அவசியம்.

1 கிலோ எடைக்கு 110 கலோரி என்ற அளவில் குழந்தைக்கு சக்தி தேவைப்படுகிறது.

100 மில்லி லிட்டர் தாய்ப்பாலில் சுமார் 63 கலோரி சக்தி கிடைக்கிறது. நம் நாட்டில் தாய்மார்கள் 400 - 1000 மி. லிட்டர் பால் சுரக்கும் தன்மை பெற்றுள்ளனர். இந்த அடிப்படையில் குழந்தைக்கு 6 மாதம் நிறைவுரும் வரை தாய்ப்பால் ஒன்றே போதுமானதாகும்.

அன்பு

மரணத்தை நினைத்து
மகிழ்ச்சியடைகிறேன்.
மரணத்திடம் செல்வது
எவ்வளவு மகிழ்ச்சியானது
எனக்குத்தெரிந்த அனைவரும்
அப்பொழுது
என்னமாய் என்னை
நேசிப்பார்கள்!

பிம்பம்

சாதாரண மனிதனைவிட
ரஸம் பூசப்பட்ட கண்ணாடி
எவ்வளவு உண்மையானது!

'அமீன்'.
பாரிசு.

ஆனால் 6 மாதத்திற்குப் பிறகு தாய்ப்பாலோடு வேறு உணவுப் பொருட்களையும் கொடுக்க வேண்டிய அவசியத்தை நாம் உணரத் தவறிவிடுகிறோம். இது காரணம் பற்றியே 6 மாதம் வரை நம் குழந்தைகளுக்கும் மேலை நாட்டுக் குழந்தைகளுக்கும் உடல் உள்ள வளர்ச்சியில் பேதம் ஏதுமில்லை. ஆனால் 6 மாதத்திற்குப் பிறகு பெரும் பேதம் காணப் படுகிறது.

தாய்ப்பாலின் சிறப்பு அம்சங்கள்:

தாய்ப்பால் இயற்கையின் சிறப்பு. குழந்தைக்கென்றே சுரப்பது பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் எளிதாகவும், விலை ஏது மின்றியும் கிடைக்கக்கூடியது.

தாய்ப்பாலுக்கு நிகரான வேறு பால் குழந்தைக்குப் புகட்டுவதென்பது நம் நாட்டைப் பொருத்தவரையில் இயலாததொன்றாகும்.

தாய்ப்பால் தூய்மையானது. இதை காய்ச்சி சுத்தம் செய்ய வேண்டிய அவசியமோ பாதுகாத்து வைக்கவேண்டிய தேவையோ இல்லை.

தாய்ப்பாலில் எந்த வித இடைச் சேர்க்கைக்கும் (Contamination) வழி இல்லை. ஒவ்வொரு பாலூட்டும் தாயும் 400-1000 மில்லி லிட்டர் தரமான பாலை குழந்தைக்குப் புகட்ட முடியும். நம்நாடு ஒரு விவசாய நாடாக இருந்தும் பால் உற்பத்தியில் மிகப் பின் தங்கிய நிலையில் ஒவ்வொரு தாயிடமிருந்தும் 400-1000 மில்லி லிட்டர் தரமான பால் இலவசமாக குழந்தைக்குக் கிடைப்பதை விரயம் செய்வது விவேகமாகாது.

நம் நாட்டில் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைத்தரம் சீர்கேடுடையதாகும். பெரும்பான்மையினரின் வீடும், வீட்டைச் சுற்றிய சுகாதாரமும் வாழ்வதற்கே தகுதியற்றதாகும். சுத்தம் செய்த குடிநீர் வசதியில்லாமை, தேங்கியசாக்கடைநீர், குப்பை கூழங்கள் இவைகளில் வாழும் எண்ணற்ற நோய்க்கிருமிகளிலிருந்தும் பாலை காப்பாற்றுவதும் பாலை வைக்கும் பாத்திரங்களையும், பாலூட்டும் பாத்திரங்களையும், தூய்மையாகவைத்திருப்பதும், அவ்வளவு எளிதான காரியமல்ல. பாலைக் காய்ச்ச அடுப்பும், எரிபொருளும் தேவைப்படுவதோடு காலமும் விரையமாகிறது.

வயிறு போக்கு போன்ற செரிப்புக் கோளாறுகள் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு ஏற்படுவதில்லை. தாய்ப்பாலுண்ணும் குழந்தைகளின் இரைப்பை நீர் மிக அதிகமான அமிலத் தன்மை பெற்றிருப்பதன் காரணமாக இந்த நன்மை கிட்டுகிறது.

குறைபாட்டு நோய்கள்: (Deficiency diseases) முக்கியமாக

விட்டமின் A & C யினால் ஏற்படும் குறைபாட்டு நோய்கள் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு ஏற்படுவதில்லை. மாட்டுப்பாலிலும் எருமைப்பாலிலும் இவ் வைட்டமின்கள் கூடுதலாக இருந்தாலும் பாலைக் கொதிக்க வைக்கும்போது இவை சிதைந்து அழிந்து விடுகின்றன.

தாய்ப்பால் அருந்தும் குழந்தையின் தொண்டைப் பகுதி நன்கு வளர்ச்சியடைந்து குழந்தை மிக விரைவில் பேசுவதற்கு உதவுகிறது.

தாய்ப்பாலின் சிறப்பு வேதியல் பண்புகள்:

தாய்ப்பாலில் மிக எளிதில் செரிக்கக்கூடிய லேக்டால்புமின் (Lactalbumin) லேக்டோ குளோபிலின் (Lactogloblin) என்ற புரதங்கள் அடங்கியுள்ளன. தாய்ப்பாலில் கலோக்மடாலிபிட்ஸ் (Galactolipids) என்ற வகை கொழுப்பு மிக அதிகமாக இருக்கிறது. இது நரம்பு மண்டலங்களின் உறுதிக்குத் தேவையானது. இரட்டிப் புப்பூரிதத்தன்மை வாய்ந்த லினேலிக் அமிலம் போன்ற கொழுப்பு அமிலம் தாய்ப்பாலில் மிகக் கூடுதலாக இருப்பதால் தோலில் ஏற்படும் ஊரல் போன்ற நோய்கள் ஏற்படாமலிருக்கப் பெரிதும் பயன்படுகிறது.

தாய்ப்பாலிலுள்ள கூடுதலான லேக்டோஸ் சில விட்டமின்களை தயாரிக்க உதவுகிறது

குழந்தைக்குப் பாலூட்டுவதால் தாய்க்கும் சில நன்மைகளுண்டு:

குழந்தைக்குபாலூட்டல்தாய்க்கு ஒரு இன்பமான அனுபவமாகும். இதை எந்தத் தாயும் வெறுக்க முடியாது. தாயின் அணைப்பிலே பாலருந்து குழந்தைக்கு அது அன்புப் பிணைப்பாகிறது. தாய் சேய் உறவை வளர்ப்பதோடு குழந்தைக்கு தாய்ப்பால் தேவையான போது கிடைக்கும் என்ற பாதுகாப்பும் குழந்தைக்குக் கிட்டுகிறது.

இதுவன்றி குழந்தைக்கு பாலூட்டுவதால் பிரசவத்திற்குப்பின் கற்பப்பை (Uteres) சுருங்கி வயிற்றின் அடிப்பாகத்தில் இறங்குவதற்கு (Involution) எதுவாகிறது:


குழந்தைக்கு பாலூட்டும் காலங்களில் பெரும்பான்மையினர் மாதவிடாய் ஆவதில்லை. சிலருக்கு பாலூட்டும் காலங்களில் கரு உற்பத்தி ஆவது தடைபடுகிறது. இந்தவகை மாற்றங்கள் குழந்தை ஏற்படாமல் இருக்க ஒரு இயற்கையான குடும்பக்கட்டுப்பாட்டு முறையாகவும் அமைகிறது. ஆனல் இது முற்றிலும் நம்பிக்கையான முறையல்ல.

பாலூட்டும் தாய்மார்களுக்கு அதிகமாக மார்பகத்தில் புற்று நோய் (Breast Cancer) வருவதில்லை என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகிருர்கள். தாய்ப்பாலில் இத்துணை சிறப்புக்களிருந்தாலும் ஒரு சில சூழ்நிலைகளால் புட்டிப்பால் புகட்டும் நிலை தவிர்க்க முடியாது என்பது உண்மை. குறிப்பாக தாய் இறந்து விட்டாலோ, அல்லது மிகக் கொடிய நோயினுல் துன்புற்ருலோ. மனநிலை மாறிவிட்ட நிலையிலோ புட்டிப் பால் ஒரு வரப்பிரசாதம் என்பது மறுக்க முடியாது. புட்டிப்பாலைக் கொடுப்பவர்கள் அதைத் தகுந்த விகிதத்தில் கொடுத்தாலன்றி, குழந்தை, குறை உணவினுல் பாதிக்கப் பட்டு நோய்வாய்ப்படுவது திண்ணம்,

If I ever get a chance, I should love to be reborn Gust to have the Ectaly of being re fed by the Kindly mother.

- Oscar Wilde.

நீலாம்பரியில் பூத்த பூபாளம்



சூரியகாந்தன்

அன்பு மகளே-
என் உதிரத்தில் ஊறி வரும்
இந்தத் தாலாட்டு
உனக்குக் கேட்கிறதா...?

காதலின் சின்னமாய்
இதயத்திலிருந்து
ஜனனமானவளே
இந்த தாலாட்டு
உனக்குக் கேட்கிறதா..?

ஒரு சுள்ளெறும்பு
உன் பாதமலரைக் கடித்த -
போது
என் இதயத்தின் தோல்-
தானே
தடித்து விட்டது..

எறும்பை நசுக்க
உன்னருகில் நெருங்கும்
எனது விரல்களைக்
கிள்ளத்தான் வந்தவை
யென
நினைத்து விடாதே...

பனிப்பள்ளங்களையும்
வெப்பக்காடுகளையும்
கடந்து வந்தாலும்—என்
மார்பக்பால் உன் நலனில்,
இதமாகவே சுரக்கும்...

உன் இள இதயத்து
ஜலதோஷம்
மூக்கின் வழியே
வெளிப்படும் நேரங்களில்
என் கரங்கள் நெருங்குவது
சுத்தப்படுத்தவே ஒழிய
சுவாசத்தை அடைத்து விட
அல்ல...

பால் வார்க்கும் போது
வலிமையைப் பாசமாய்க்
கலந்துதானே-
தந்து வந்தேன்... ...

மகளே...
நீ எலும்பும் தோலுமாய்
வந்து நின்றால்
கண்ணீரையுமா
பாலில் கலந்து ஊட்டுவது

உனக்கன்றி
வேறு யாருக்குத்தான்
என் உதிரத்தை
வார்த்துக் கொண்டிருப்
பதாக
நீ நினைக்கிறாய் ...

உழைப்பின் சுமைகள்
என்னை அழுத்தி
உறங்க வைக்கும்
போதெல்லாம்
என் மார்பில் பதிந்திருந்தது
உன் உதடுகள்தானே ...

நீ வளர்ச்சியடையாமல்
வந்து நின்றால்
எனது சக்தியெல்லாம்
இத்தனை நாட்களாக
வீணாகி வந்ததாகத்தான்
பொருளா...?

உன்னில் சேர்ந்து வளரும்
களைகளைத்தான்
இந்த விரல்கள் பறிக்கின்
றன...
பயிர்களின் வேரையல்ல
களைகளின் வேரைத்தான்...

பயிர்களுக்கு
நீர்பாய்ச்சும் நான்
அதிக அக்கறையில்
பாத்திக்குள்ளேயா
படுத்து விடுவது...?
சொல் என் மகளே—

உனக்கு எழுதிய
தாய்மைக் கடிதங்களை
சந்தேகிக்கிறவர்களை
என்னவென்று சொல்வது

நீயே சொன்னாய்
"அம்மா
உன் கடிதத்தில் ஒன்றை
யெடுத்து
தராசுத்தட்டு ஒன்றில்
வைத்து விட்டு

நம் காட்டிற்கு அடுத்துள்ள
மலைகளையெல்லாம் ஒன்
றாக்கி
இன்னொரு தட்டில்
வைத்தாலும்

கடிதம் வைத்த தராசுத்
தட்டு
தாழ்ந்து எடை காட்டுகிறது
கருத்துக்ககனம் கீழ்நோக்கி
இழுக்கிறது"

மகளே-
கடிதத்தட்டு
தாழ்ந்துதான் இருக்கிறது
இதனால்தான்
சில உள்ளங்கள்
என் அன்பைத் தாழ்வாகவே
எடை போட்டு விட்டன

சூரியன்
தன்னுடைய ஒளி நரம்புக
ளால்
பூமியைத்தூக்கி
எடை பார்த்து

அதே கனமுள்ள
தராசுக் கல்லைத்தயாரித்து
என் இதயத்தில்
வைத்து விட்டான்

அந்த
கனங்களெல்லாம்
கவித்வப் பறவைகளாகி
பிரபஞ்ச வெளிகளிலே
இறகடிக்கின்றன

பசித்த இதயங்களுக்கெல்
லாம்
இரையூட்டவே-
இமாலயத் தெம்போடு
அவை வாழ்கின்றன

என் கோபங்களெல்லாம்
சமுதாயத்தின் இருட்டு
அழுக்குகளை
கழுவித் தூய்மையாக்குகிற
தன்மையோடு வன்மை
பெறுகின்றன
அழுகுரல் கேட்கிறபோதெல்
லாம்
என் இதயம்
மானிட நேசத்தோடு
மனிதாபிமானத்தைச்
சுரக்கின்றன
இந்த தாய்மைப் பூமியில்
பிறந்த மகளே-
உன்னை உறக்கத்தில்
ஆழ்த்த உதித்த
அப்போதைய எனது
தாலாட்டுக்களெல்லாம்
உன்னைத் துயிலெழுப்பவே
இப்போது பாடப்படுகின்றன
பூபாளமாக்கிச்
சூடப்படுகின்றன...
ஆமாம்
வைகறைக் கோலமிடும்
நேரம்
அந்த வசந்த நேரம்
வந்தாயிற்று
எழுந்திரு மகளே எழுந்திரு!

புதுக்கவிதை

சோம்பேறிகளின்
சொத்துரிமைகள் :
வரப்பில்லா
ஆறுகள்.
இலக்கணமில்லாச்
சொல்லடுக்குகள்
மொத்தத்தில் ...
குழப்பங்களின்
மொத்த
உருவங்கள் !

அருளன்.

இந்தியா.

எந்தையும் தாயும்
மகிழ்ந்துகுலாவி
இருந்தது இந்த நாடு
இன்று
சிந்தனையும், செயலும்
குழம்பிக் கிடக்கும் காடு

வேலவன்.

பஞ்சமோ பஞ்சம்!

''என்னுயிர் நீதானே,
நாட்டை காக்கும் கை,
சிரித்தால் மட்டும்-போதுமா,
சிங்கப்பூரு சிங்காரி' பூவரசம்
பூ பூத்தாச்சு, நம்பஊர்
சிங்காரி, பறவைகள் பல
விதம், மனைவி அமைவ
தெல்லாம் ''இவைகள்
சினிமா பாடல்களின் வரி
மட்டும் அல்ல— புதிதாக
தயாரிக்கப்படும் தமிழ்ப்படங்
களின் பெயரே இவைகள்—
படத்தின் பெயருக்குக் கூட
பாருங்கள் பஞ்சமோ பஞ்சம்.

பாடம் 11 காய்ச்சீர்

ஈரசைச் சீர்கள் நேர்நேர்,-தேமா, நிரை நேர்—புளிமா, நிரை நிரை கருவிளம், நேர் நிரை—கூவிளம் ஆகிய நான்கு. அவற்றோடு ஒரு நேர் அசை சேர்த்தால் காய்ச்சீர் ஆகும். ஆகவே காய்ச்சீர் வாய்பாடு :

நேர் நேர் நேர்—தேமாங்காய்
நிரை நேர் நேர்—புளிமாங்காய்
நிரை நிரை நேர்—கருவிளங்காய்
நேர் நிரை நேர்—கூவிளங்காய்

பயிற்சி 11 : பின்வரும் சீர்களைப் பிரித்து வாய்பாடு எழுதுக.

(1) எழுத்தெல்லாம் (2) பயனென்கொல் (3) புகழ் புரிந்தார்
(4) ஐந்தவித்தான் (5) இல்லாதான் (6) துப்பாய
(7) துப்பாக்கி (8) புயலென்னும் (9) மற்றுங்கே
(10) துணைக்கூறின்.

பாடம் 12 காய்ச்சீர் பயிற்சி

பயிற்சி 12 :

சொந்தமாக 10 காய்ச்சீர் எழுதுக. ஒவ்வொன்றையும் பிரித்து வாய்பாடு எழுதிக் காட்டுக. சான்று : யாதானும்- யா/ தா/ னும். நேர் நேர் நேர்—தேமாங்காய்

பாடம்13- —வெண்டளை அடி

ஈரசைச்சீர் நான்கையும், காய்ச்சீர் நான்கையும், கொண்டு பின் வரும் முறைப்படி அமைத்தால் வெண்டளை அடி ஆகும். நிற்கும் சீரின் வாய்பாடும் வரும் சீரின் முதல் அசையும் கணக்கிடப் பெறும்.

அமைப்பு முறை :—

(1) தேமா × நிரை
(2) புளிமா × நிரை
(3) கருவிளம் × நேர்
(4) கூவிளம் × நேர்
(5) தேமாங்காய் × நேர்
(6) புளிமாங்காய் × நேர்
(7) கருவிளங்காய் × நேர்
(8) கூவிளங்காய் × நேர்

இப்போது ஒரு வெண்டளை அடி அமைக்கும் முறையைப் பார்ப்போம். முதலில் ஓர் ஈரசைச்சீர் எடுத்துக் கொள்வோம்.- செந்தமிழ்- வாய்பாடு எழுதிக் கொள்ளலாம்- நேர் நிரை-கூவிளம்- இப்போது- அமைப்பு முறையைக் கவனிக்க வேண்டும். கூவிளம் என்னும் சீருக்கு அடுத்த சீரில் முதல் அசை நேர் அசையாக வர வேண்டும். ஓங்கிட என்று இரண்டாம்சீர் அமைப்போம். இதற்கு வாய்பாடு நேர் நிரை- கூவிளம், ஆகவே அடுத்த சீர் நேரில் தொடங்கவேண்டும், மூன்றும் சீர் முதல் சீரின் முதல் எழுத்தை முதலில் பெற்றிருக்க வேண்டும். இதனைப் பொழிப்பு மோனை என்போம்.- செம்மை எனக் கொண்டு நாலாவது சீர் பணிசெய்வோம் என முடிப்போம். அதனைப் பின்வருமாறு எழுதலாம்.

செந்தமிழ் ஓங்கிடச் செம்மைப் பணிசெய்வோம்
நேர் நிரை நேர் நிரை நேர் நேர் நிரை நேர் . நேர்
கூவிளம் கூவிளம் தேமா புளிமாங்காய்

பயிற்சி 13 : வெண்டளை அடிகள் 10 எழுதுக. ஒவ்வோர் அடிக்கும் வாய்பாடு எழுதிக் காட்டுக.

பாடம் 14 —வெண்டளைக் கண்ணி

வெண்டளை அடி இரண்டு சேர்ந்தால் வெண்டளைக் கண்ணி ஆகும். முதல் அடியின் கடைசிச்சீருக்கும் இரண்டாவது அடியின் முதற்சீருக்கும் மேற்கூரிய அமைப்புப் பொருத்தம் இருக்க வேண்டும். எற்கெனவே ஆசிரியக் கண்ணியில் அமைந்தது போல முதல் அடியின் இரண்டாவது எழுத்தும் இரண்டாவது அடியின் இரண்டாவது எழுத்தும் ஒன்ருக இருக்க வேண்டும். ஒவ்வோர் அடியிலும் முதற்சீரின் முதல் எழுத்தும் மூன்ருவது சீரின் முதல் எழுத்தும் ஒன்ருக இருக்க வேண்டும்.

சான்று :
செந்தமிழ் ஓங்கிடச் செம்மைப் பணிசெய்வோம்
முந்திய யாப்பை முறையாய் உணர்ந்திடுவோம்-

பயிற்சி 14 : இது போல் 5 கண்ணிகள் எழுதிக் காட்டுக.

ஆண்கள் மரம். பெண்கள் அந்த மரத்தைத் தழுவிப் படரும் கொடிகள். குழந்தைகள் அந்தக் கொடிகளில் கூத்தாடும் மணமுள்ள மலர்கள்.

-இங்கர்சால்


புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், கடவுள் மனிதனிடம் நம்பிக்கையற்றுப் போக வில்லை என்ற செய்தியை நமக்குக் காட்டுகிறது.

—தாகூர்—

குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு

முதல் மாதம் : பி. சி. ஜி. தடுப்பு ஊசி
இரண்டாம் மாதம் : பெரியம்மை தடுப்பு ஊசி
மூன்ரும் ,, : முத்தடுப்பு ஊசியும் இளம்பிள்ளை வாதத்திற்கான தடுப்புச் சொட்டு மருந்தும்.

நான்காம் ,, : ,, (இரண்டாம்முறை)
ஐந்தாம் ,, : ,, (மூன்ரும் முறை)



பார்! பார்!

கவிஞர் அருளன்.

பறந்து செல்லும் காகம் பார் அது
பகிர்ந்து உண்ணும் நேர்த்தி பார்!

குளத்து ஓரம் கொக்கு பார் அது
காத்து நிற்கும் பொறுமை பார்

சேர்ந்து செல்லும் எறும்பு பார் அவை
சேர்த்து வைக்கும் உணவைப் பார்!

காவல் காக்கும் நாயைப் பார்—அது
காட்டும் நன்றிக் கடனைப் பார்!

கூவி எழுப்பும் சேவல் பார் விடியற்
காலை கணக்காய் கூவும் பார்

சுற்றித் திரியும் தேனீ பார் அவை
சுருக்காய் சேர்க்கும் தேனைப் பார்!

உழவுக் குதவும் எருதைப் பார்—அது
உழைத்து நல்கும் கதிரைப் பார்!

இவைபோல் வாழ்வைக் கற்கப் பார்—நீ
உயர்வாய் வாழ்வில் நிற்கப் பார்!

சிவப்பு நிலா

ஓர் ஆய்வு!

புதுக் கவிதைப் பாப்பாக்கள் உலா வரும் இற்றை நாளில்
சிவப்பு நிலா......
நெஞ்ச ஏட்டில்...
கண் சிமிட்டி....
வருகின்றாள்! வியப்பில்லை.
என்றாலும் இதிலே காதல் நெஞ்சங்களை ஈர்க்கின்ற
நினைவுக் கொப்பளங்கள்...
ஆங்காங்கே... காய்த்துக் கிடக்கின்றன!
முல்லைப் பூக்கள் மணம் வீசிக் கிடப்பது போல்...
நூலில் எங்கும் கருத்து மணம் கமழ்கின்றது!
சிந்தனைப் பூக்கள் சிதறிக் கிடக்கின்றன!
அறிவுச் சோலைக்குள்...
புரட்சிக் குயில்கள்...
தூங்கிக் கிடக்கும்,
பேதை மனங்களை
தட்டி எழுப்புகின்றன!
இன்னும் பல பல...
நூலில் உளது
ஒரு சில பாக்களை மட்டும்
உங்களின்...
ஈர விழிகளுக்கு
விருந்தாகப் படைக்கின்றேன்!
தலைவி... நடக்கின்றாள்...
அல்ல... அல்ல...!
மெல்ல... மெல்ல... அடியெடுத்து வைக்கின்றாள்.
ஒவ்வொரு அடியும்...
அவன் ... இதயத்தில் ... வலியை உண்டாக்குகின்றன!
அவளுடைய
பஞ்சின் மெல்லிய பூம்பாதங்கள்
வலிக்குமே ... கசங்குமே... என்று!
எனவே
அவளுடைய
பூம்பாதங்களுக்கு
பூவையே நடைபாதையாக்கிவிட்டு.
அவன் பாடுகின்றான் ...
''அன்பே !
பூக்களை மெதுவாக மிதி!
உன் ...
பாதங்கள்
கசங்கிவிடப் போகின்றன! என்று.
பிரிவைப் பற்றிப் பாடுகின்றான்!
உன்னைச் சந்திக்காத ... நேரங்களில்

ஆயுள் தண்டனைக் கைதியாகி
கலங்கிய துண்டு! என்று
சந்தித்த நிமிடங்களைக் கூறும்பொழுதோ
கண்டுசில நிமிடங்கள்
பேசிவிட்ட நாட்களிலோ
உழவுக்கால விவசாயியின்
சுறு சுறுப்பையும்
போர்க்கால ராணுவ வீரனின்
துரு துருப்பையும்
பெற்றுவிட்டதுண்டு! என்று.
அடுத்து,

நாக்குப் போன்ற சொர சொரப்பான வரப்புப் பாதையது; ஆங்கே பாம்புகள் இருக்கத் தானே செய்யும். நண்டுக் கூட்டங்கள் உலா வரத் தானே செய்யும். அப்படிப்பட்ட சீரில்லா துன்ப வரப்பின் மீது தன் குழந்தையைப் படுக்க வைத்துக் கொண்டு தன் கண்ணீரில் காய்ந்துதிரும் உப்புக்களை வயலுக்கு உரமாக்கும் அந்தப் புனிதத்தாய் எவ்வளவு ஏழ்மையில் இருந்திருந்தால் ...... பாவம் அந்தக் குழந்தை ...... இந்த நாட்டில் பிறந்த ஒரே காரணத்தினால் படும்பாடுகள்...... அந்தத் தாயின் வேதனைகள்

அந்த வரப்புத் தானே அந்தக் குழந்தைக்குத் தொட்டிலாக, சுகம் அள்ளிக் கொடுகின்ற பஞ்சு மெத்தையாக, இதம் தரும் சோலையாக அமைந்திருக்கிறது. எத்தனை குழந்தைகளுக்கு இந்த நாட்டிலே தொட்டிலும் சுகங்களும் குறையாமல் கிடைத்திருக்கிறது. ஏழ்மைகளே மேய்கின்ற திருநாட்டில் அவன் எப்படியோ வளர்ந்து ஆளாக்கப் படுகின்றான்.

வரப்புகளில் தானே என்னைப் படுக்க வைத்திருந்தாய் என்ற வரிகளை நம் விழிகள் உண்ணும் போது நம் நெஞ்சமெல்லாம் வேதனைக் கொப்பறைக்குள் விழும், கண்ணீர்க் கோடுகள் நம் மார்போரம் சிந்து பாட வந்து நிற்கும். இப்படி துன்பத்தையே இன்பமாகக் கொண்டு வாழப் பிறப்பெடுத்த இதயங்களின் வேதனைகள் ஒன்றா! இரண்டா? இப்படி அந்தப் பாடல் முழுதும் நெஞ்சைக் கிளறும் துன்பக்கோடுகள் மிகவுண்டு - இறுதியிலே

ரசிக்கும் விதங்கள்!

குளிச்சா குற்றாலத்திலே போய்க் குளிக்கணும்
கும்பிட்டா பழநியிலே போய் கும்பிடணும்
பார்த்தா ஸ்கைலாப்பைப் போய் பார்க்கணும்
படிச்சா **பூங்கோதையைப்** படிக்கணும்
ரசிச்சா எல்லாரும் ரசிக்கிறப்போல இருக்கணும்

அ. ஜெயா

அந்தத் தாய் படும்பாட்டையே பாடலாக்கி அந்தத் தாய்க்கே தாலாட்டுப் பாடும் பாங்கு மிக உன்னதமானது. மிகச் சிறப்புடையது.

''இதோ நம் நெஞ்சைக் கிளறும் அந்தப் பாடல் வரிகள்''

''அம்மா......
நாற்று நடவுக் காலங்களில்
வரப்புகளில் தானே
என்னைப் படுக்க வைத்திருந்தாய்!

இப்படி எத்தனையோ பாடல்கள் சுவை குன்றாமல் தீங்கனியாய், தீம்பாலாய் இனிக்கிறது. பாடல்கள் அனைத்தும் மிக ஆழமான சிந்தனையால் மிகச் சிறப்பான முறையில் வடிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் பாராட்டக் கூடியது. போற்றக்கூடியது. இருப்பினும் சில குறைகள் இதிலே உண்டு. கவிதைகள் அனைத்திலும் வடசொற்கள் அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்து கிடக்கின்றன தமிழில் சொற்களா இல்லை? மரபுப்படி கவிதைகளை யாத்திருந்தால் தமிழ் கற்ற நல்லோர்கள் நெஞ்சில் இக்கவிதைகள் உறுதியாக வாழும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. நமக்கென்று ஒருவழி ஒரு மரபு இருந்திடும்போது, புதுக்கவிதைப் பாதைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்து விட்டு மரபு வாழ தமிழ்செழிக்க, முறையோடு கவிதை யாத்தல் வேண்டும். இதை மறுக்க முடியாத காலக்கட்டாயத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை கவிஞர் மறந்து விடக்கூடாது.

கடைசியாக......
ஒரு வார்த்தை!
சிவப்பு நிலா! புதிய நிலா!
அனைவரும் படிக்க வேண்டிய, படித்துச் சுவைக்க வேண்டிய
புதுமை நிலா!



திறனாய்வாளர் :
கவிஞர் - கோவலன்

நூல் ஆசிரியர்:
கவிஞர் - சூரியகாந்தன்
கோவை

கிடைக்குமிடம்-
அகரம் சிவகங்கை.
விலை. ரூ 4—00

Regd. No. TN / ED/ 14

பாராட்டுகிறோம்.



திருமிகு

சுடர்மணி

என். நடராஜன்.

அவர்கள்

பிறந்தநாள் : 21—2—1946. இடம் : திருப்பூர்.

உழைப்பால் உயர்ந்தவர்கள் வரிசையில் முன்னணியில் நிற்பவர் திரு. சுடர்மணி என். நடராஜன். சாதாரணமாகத் தொடங்கிய பனியன் தொழிலில் இன்றைக்குச் சிறப்பான தொரு இடத்தைப் பிடித்துள்ளார். திருநீறும் நெற்றியுமாக எப்பொழுதும் காட்சியளிக்கும் இவர் இன்றைக்கும் கூட தானே காரில் பனியன்களை எடுத்துக் கொண்டு திருச்சி ராமநாதபுரம் முதலிய இடங்களில் தமது வாடிக்கையாளர்களைச் சந்தித்து வியாபாரம் செய்கிறார். பொதுச் சேவையில் அக்கறை கொண்ட இவர் இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மாணவி ''காயத்திரிக்கு ரூ. 1001 அன்பளிப்பாக நடிகர் கமல்ஹாசன் மூலமாக வழங்கினார்.

இவருடைய தயாரிப்புகளான 'சுடர் டெக்ஸ் பைன்' ஜுகுநுபைன்' ஆகியவை தலைசிறந்து விளங்குகின்றன. தமிழகத்தில் அதிக அளவில் பள்ளிமாணவர்களுக்கு பனியன் தயாரித்துக் கொடுத்து நற்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். இவருக்கு மனைவியும் ஒரு மகனும் இரு மகள்களும் உள்ளனர். சுடர்மணி நிறுவனத்தோடு மற்றும் சில நிறுவனங்களிலும் இவர் பங்குதாராக இருக்கிறார். உழைப்பால்தான் முன்னேற வேண்டும் என்ற லட்சிய நடைபோடும் இவரைப்பாராட்டுவதில் பூங்கோதை பெருமைப் படுகிறாள்.